# வா...
# என் தங்கமே

அகிலா கோவிந்த்



## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : வா... என் தங்கமே! |
| ஆசிரியர் | : அகிலா கோவிந்த் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : மே, 2012 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 184 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : பிரியா நிலையம்<br>53, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.75.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : உதயம் ஆப்செட்,<br>சென்னை-2. |




# வா... என் தங்கமே!

...ம் வெளியீடுகள்

| | |
|---|---|
| கண்ணான கண்மணி | 65.00 |
| அழகி... நீ.. பேரழகி...! | 65.00 |
| மௌனமே காதலாக | 65.00 |
| ...தல் தேன் நிலா | 115.00 |
| ...ன் இனிய கண்ணாளா | 65.00 |
| ...தாகை இளம் மயில் | 65.00 |
| ...ன்புள்ள மான் விழியே | 100.00 |
| ...கே என் தேவதை? | 100.00 |
| ...என்னும் அழகுக்கு | 70.00 |
| ...ணவனே வரலாமா | 70.00 |
| ...மணி நிமிர்ந்து நில்லடி | 65.00 |
| ...கிறேன் ராஜகுமாரி | 65.00 |
| ...ணமயில் பெண்ணொருத்தி | 85.00 |
| ...யோரப் பார்வையிலே | 70.00 |
| ...கைச் சிறகினிலே | 80.00 |
| ...வண்ணம் பருவம் கண்டு | 75.00 |
| ...பொன் மயிலே | 70.00 |
| ... மயிலாள் | 70.00 |
| ...ழி மானே | 90.00 |
| ...ருப்பேன் ராஜகுமாரா | 70.00 |
| ...மகள் வந்தாள் | 75.00 |
| ...றித் திருமகள் | 65.00 |
| ...சின்னக் குட்டிம்மா | 100.00 |
| ...ழி ராணி | 65.00 |


# வா... என் தங்கமே!



## 1

‘‘காலை விடிந்துவிட்டது. பொழுது புலர்ந்து விட்டது’’ என எப்போதோ உணர்ந்து விட்டாள் உதய ரேகா.

ஆயினும் பொன் மஞ்சத்தில் இன்பமாய் துயில் கொள்ளும் இளவரசி போல் போர்த்தியிருந்த பெட்ஷீட்டை முழுக்க இழுத்து விட்டுக் கொண்டு கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

மூடிய இமைகளுக்குள் ஒருவித அமைதி... இனம் புரியா நிம்மதி!

இந்தப் 'பொல்லாத' வீட்டைப் பார்க்காமல், ஓரிரு நிமிடம் கண்களை மூடிக் கொண்டு இருப்பதுகூட சுகம் தான்.

ஆனால் எவ்வளவு நேரம் அவளால் அப்படி இருக்க முடியும்?

அவள் தலைக்கு மேல் இருக்கும் பெண்டுல கடிகாரம் இன்னும் கொஞ்ச நேரத்தில் 'டாண்' என அலறி விட்டால் அவ்வளவுதான்!

பின் புற்றீசல் போல் வீட்டில் ஒரே... விரட்டல்கள், உருட்டல்கள்தான்... துரத்தலான அர்ச்சனைகள் தான்...!

நேற்றுகூட இப்படித்தான் காலையிலே அர்ச்சனை ஆரம்பமாகியது. ''அடி, அறிவுகெட்டவளே! இன்னும் ஏன் தலையை விரித்துப் போட்டுக் கொண்டு தடிமாடு மாதிரி மொட்டை மாடியில் நிற்கிறாய்?'' என ஆரம்பித்த அம்மா கற்பகம் முடிப்பதற்குள், ''அம்மா, எதிர்புறம் பார்... அந்த மாடியில் தறுதலை ஒன்று லுங்கியுடன் நின்று இவளை பார்த்துக் கொண்டு இருக்கிறது...'' என டக்கென போட்டுக் கொடுத்தாள் அன்புத் தங்கை ரமா என்றழைக்கப்படும் ரமாதேவி.

அம்மாவிற்கு இது போதாதா?

''கல்யாண வயதாயிற்று? உன் வயசுப் பிள்ளைகள் எல்லாம் கல்யாணம் செய்து பிள்ளையைப் பெற்று விட்டார்கள். இன்னும் கொஞ்சமாவது பொறுப்பு இருக்கிறதா? சே...!''

அலுத்த அன்னையைத் திரும்பி கோபமாய் பார்த்தாள் உதயரேகா ''பொறுப்பு இல்லையா? என்னம்மா... சொல்கிறீர்கள்?''



''பின்... என்ன இந்த மார்கழி பிறந்தால்... உனக்கு இருபத்து நான்கு எகிறிவிடும். அது என்ன குழந்தை வயதா?'' என எதையோ பேச வந்து, எதிலோ எரிச்சலைக் காட்டினாள் கற்பகம்.

அதற்குள் அண்ணன் ருத்ரன் அரைகுறையாய் பேச்சை காதில் வாங்கிக் கொண்டே தன் அறையில் இருந்து ருத்ரமாகவே வெளிப்பட்டான்.

''என்ன... நாம்... கல்யாணம் பண்ணி வைக்கமாட்டோமோ... இல்லையோ என மொட்டை மாடியில் நின்று யாரோ ஒரு தறுதலைக்கு 'போஸ்' கொடுத்து பார்க்கிறாளா...? கொழுப்பெடுத்த கழுதை... உன்னை'' என அவளைப் பார்த்து நிஜமாகவே முறைத்தான்.

அவனுக்குப் பின்னாலே அவனுக்கு தலையணை மந்திரம் போடும் அண்ணிக்காரி மாலினியின் தலை எட்டிப் பார்த்து பெரிதாகி பக்கத்தில் வந்தது.

''எல்லாம் கொஞ்சம் சம்பாதிக்கிற திமிர்! வேலைக்கு அனுப்ப வேண்டாம். வீட்டில் உட்கார வையுங்கள்... என்றால் என் பேச்சை இந்த வீட்டில் யாரும் கேட்டால் தானே?'' என்றாள்.

வீட்டு வேலைகள் பாதியை அம்மாவுடன் செய்ய வேண்டிய கட்டாயத்தில் கை வலிக்க தன் பங்கிற்குச் சொன்னாள்.

உதயரேகா மட்டும் வேலைக்குப் போகாமல் வீட்டில் இருந்தால் வீட்டு வேலைகள் முழுவதையும் அவள் தலையில் கட்டிவிட்டு ஹாய்யாய் டி.வி.யையும், கதைப் புத்தகங்களையும் படித்து நேரத்தைப் போக்கலாமே!

அவர்கள் எல்லோரும் பேசியதைக் கேட்ட கற்பகம் நிஜமாகவே பயந்தவளாய் உதயரேகா பக்கம் கோபமாய் திரும்பினாள்.

''இவர்கள் சொல்வதையெல்லாம் பார்த்தால்... எல்லாம் நிஜம்தானாடி? எத்தனை நாளாய் நடக்கிறது இந்தக் கூத்து?'' என்றாள் ஆவேசமாக.

''ஐயோ... அம்மா...!'' தலையில் கை வைத்துக் கொண்ட உதயரேகா அதே வேகத்தில் தங்கையின் பக்கம் வந்து அவள் தோள்களைத் தட்டினாள்.

''ஏய் கடன்காரி, உனக்கு இப்போது திருப்திதானா? இப்போதாவது உண்மையைச் சொல்லுடி. இவர்கள் என்னை படுத்தும் பாட்டை தாங்க முடியவில்லை...'' என உதயரேகா கை கூப்பாத குறையாய் கெஞ்ச... நடந்த அத்தனை களேபரத்திற்கும் மூலகாரணமாய் இருந்த அவள் வாயைத் திறந்தாள்.

''அம்மா! நீ நினைப்பது போல் எல்லாம் இல்லை. அந்தத் தறுதலை அங்கு நிற்பது உண்மைதான். ஆனால் அவன் இவளைப் பார்ப்பது இல்லை. இவளும் அவனைப் பார்ப்பதும் இல்லை. போயும் போயும் இவளை ஒருவன் மெனக்கெடுத்து பார்ப்பானா? சரியான கறுப்பழகி!'' எனச் சொல்லிவிட்டு அடக்க முடியாமல் சிரித்தாள்.

கற்பகத்திற்கு அப்போதுதான் தேவையில்லாமல் நாமும் இவ்வளவு தூரம் பேசிவிட்டோம்... என்ற உணர்வு வந்தது போலும்.

ஆனாலும் கொண்டிருந்த வீராப்பை விடாமல் கோபத்தை அப்படியே ரமாவின் பக்கம் திரும்பினாள்.



''உன்னிடம் எத்தனை முறை சொல்லியிருக்கிறேனடி...? என்ன இருந்தாலும் அவள் உன் அக்கா... மூத்தவள். அவளை, அவள் நிறத்தைக் காட்டி கிண்டல் செய்யாதே என்று...?''

அம்மா பேசுவதை ரசித்த அண்ணி, ''காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு...!'' என கேலியை தன் குரலில் ஓடவிட்டுக் காட்டினாள்.

''பொன் குஞ்சல்ல... கரிச்சான் குஞ்சு...!'' அவசரமாய் திருத்தி உரக்கக் கத்தினாள் ரமா.

அவள் அப்படிச் சொன்னதும் சிடுமூஞ்சு அண்ணன் உட்பட அனைவரும் கொல்லெனச் சிரித்து விட்டனர்.

அவளை... அதுவும் உடன்பிறந்தவளை அப்படிக் கிண்டலடித்து ரசிப்பதில் அப்படி என்னதான் இவர்களுக்கு ஆனந்தமோ?

சரி... அப்படியாவது சிரித்தார்களே? சிடு சிடுத்தவர்களை சிரிக்க வைக்க தன் நிறம் உதவியதே... அந்த மட்டுக்கும் சரி...!

அவர்களை ஒரு சுரத்தில்லாத பார்வை பார்த்துவிட்டுடுத் பிரஷ்ஷுடன் வீட்டின் சின்ன பாத்ரூமினுள் நுழைந்தாள்.

பாத்ரூம் சுவர்க் கண்ணாடியில் தன் பிம்பத்தைப் பார்த்தாள்.

அவள் அப்படி ஒன்றும் கறுப்பு இல்லை. மாநிறம் தான்! என்ன... செக்கச் செவேலென சிகப்பு வெள்ளைத் தோல்களுக்கிடையே அவள் பிறந்து விட்டதால் கறுப்பழகியாய் கரிச்சான் குஞ்சுவாய் ஆகிவிட்டாள். அது அவள் குற்றமா?

மேலும் நிறத்தில் என்ன இருக்கிறது?

அவள் அப்படித்தான் நினைத்தாள்.

ஆனால் அவளுக்கென வந்த மூன்று நான்கு வரன்கள் தட்டிப் போன போது புரோக்கர் மூலமாக அவளது நிற மும் சுமாரான அழகுமே காரணமாய் சொல்லப்பட்டது.

அதிலும் சிகப்புத் தோலுடன் தங்கையும், சின்ன அண்ணியும் வலம் வரும் போது பளீரென அவளது நிறம் முகம் சுளிக்க வைத்து விடுகிறதாம்.

தங்கை ரமாவை இந்த விஷயத்தில் சும்மா சொல்லக் கூடாது. அக்காவின் மேல் அப்படி என்ன பாசமோ... வேண்டுமென்றே... வரன் பார்க்க வரும் மாப்பிள்ளை வீட்டுப் பெண்மணிகள் முன் அழகுத் தேர் போல் கைகள் வீசி அங்குமிங்கும் நடமாடுவாள்.

அதற்குப் பின் உதயரேகா வந்து அலங்காரத்துடன் அவர்கள் முன் உட்கார்ந்தாலும் அவர்களது பார்வை அப்படியே நழுவி தங்கையின் பக்கம் போகும்.

கடைசியில் வாய் கூசாமல், ''தங்கையைப் பிடித்திருக் கிறது. அவளைத் தருவீர்களா?'' என்று கேட்டவர்களும் உண்டு.

அப்படிக் கேட்டவர்களை விரட்டியடித்து விட்டாலும் தங்கை ரமாவுக்கு இருப்புக் கொள்ளாது.

சும்மாவே அவளது அழகு மீது அளவு கடந்த கர்வம் அவளுக்கு. இது போதாதா?

அன்று முழுவதும் முகம் வெடித்துவிடும். சந்தோஷத் துடன் பரவசமாகவே அலைவாள்.



நேற்றைய பழைய எண்ணங்களை ஓட விட்டவள் இப்படி சிந்திப்பது தன்னம்பிக்கையை பாதிக்கும் என அத்தோடு நிறுத்திக் கொண்டாள்.

அதன் பின் உதயரேகா ஒன்றும் யோசிக்கவில்லை. எழுந்தவள் மளமளவென ரெடியாகி வேலைக்குக் கிளம்ப ஆரம்பித்து விட்டாள்.

உதயரேகா கல்லூரி டிகிரி வாங்கிய கையோடு தோழி ஒருத்தியின் உதவியால் பெரிய கன்சல்டன்சி ஒன்றில் வேலை தேடிக் கொண்டவள். மாதம் பத்தாயிரம் சம்பளம்.

''பெரிய படிப்பு படித்தவர்களுக்கு வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாய் இருக்கிறது. இவள் படித்ததோ வெறும் பி.ஏ., படிப்பு? இதில் படித்து இவள் ஒரு நல்ல வேலையைத் தேடுவதெல்லாம் நடக்காத காரியம். படிப்புச் செலவும் வீண். இவள் படிப்பை பேசாமல் நிறுத்தி விட்டால் என்ன?''

அவள் படிக்கும்போது அண்ணன் ருத்ரன் பலமுறை குறுக்கிட்டு பிரச்சினையை எழுப்பும் போதும் வீட்டில் பிடிவாதம் பிடித்து படித்தவள் அவள்!

''என் பர்ஸிற்கு உலை வைக்க வேண்டும் என முடிவு செய்து விட்டாய். தண்டம்! தண்டச் செலவு!'' என முணங்கி மூக்கால் அழுதபடியே அவளது செமஸ்டர் பீஸுக்கு பணம் தருவான் அண்ணன்.

பல்லைக் கடித்துக் கொண்டு வாங்கிக் கொள்வாள் அவள். 'இரு! நானும் வேலை தேடி சம்பாதித்து நீ கொடுத்த பணம் முழுவதையும் உன் முகத்தில் விட்டெறிகிறேன்' என கறுவிக் கொள்வாள்.

ஆனால் முதல் சம்பளத்தை வாங்கியபோது தான் உள்ளுக்குள் சூளுரைத்திருந்தது ஞாபகம் வந்தாலும், ''யார் இவன்? இவன் வேறு ஆளா? நம் கூடப் பிறந்தவன் தானே? தனது கடமையைத் தானே செய்திருக்கிறான். அப்பாவின் மறைவுக்குப் பின் வாரிசு அடிப்படையில் அவரது அரசாங்க உத்யோகத்தை பெற்ற இவனுக்கு குடும்பத்தை நடத்திச் செல்லும் முழு பொறுப்பும் உண்டு தானே?'' என்ற சமாதானத்துடன் விட்டு விட்டாள்.

அவர்களுடையது நடுத்தரக் குடும்பம். அண்ணன் தங்கை, அப்பா அம்மா என பாசமாய் உருவெடுத்த குடும்பம் தான். ஆனால் அப்பாவின் மறைவிற்குப் பின் தான் எல்லாம் தலைகீழாய் போனது.

அவள் ப்ளஸ் டூ முடித்து கல்லூரியில் சேர்ந்த முதல் வருடத்தில் தான் அவளது தந்தை எதிர்பாராத விதமாக விபத்தொன்றில் மறைந்து போனார். அப்போது ருத்ரன் டிகிரி படித்து வேலை தேடிக் கொண்டிருந்த சமயமானதால், அப்பா பார்த்து வந்த அரசாங்க குமாஸ்தா வேலை வாரிசு அடிப்படையில் அவனுக்கு எளிதாகக் கிடைத்து விட்டது.

அதிலிருந்து தான் வீட்டில் மாற்றங்கள் உருவானது. அதுவரை சாதுவாய் நடமாடியவன் ஒரே நாளில் பொறுப்பு வந்த 'பெரிய மனுஷனாய்' மாறிக் கொண்டான். அவனுக்கு அடுத்தாற் போல் அம்மா!

அப்பா இருக்கும் வரை வாயில்லாப் பூச்சி போல் நடமாடியவள், அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகளை எல்லாம் வெளியிடுவது போல் அதிகார மையமாய் தன்னை ஆக்கிக் கொண்டாள்.



அதன்பின் அமைதியான அந்த வீட்டில் மெல்ல சத்தங்கள் கேட்க ஆரம்பித்தன. விரட்டல்கள், வசவுகள், ஏச்சுக்கள் என கொஞ்சம் கொஞ்சமாய் அவை கூட ஆரம்பித்தன.

இந்த விஷயத்தில் பணம் சம்பாதிக்கும் அண்ணனும், குடியிருக்கும் வீட்டை சொத்தாய் வைத்திருக்கும் அன்னையும் ஒரே கூட்டணி. அவர்கள் வைத்ததுதான் சட்டம்!

அவளைவிட நான்கு வயது இளையவளான ரமாவைக்கூட விட்டு விட்டார்கள். சுட்டித் தங்கையாம். அழகானவளாம்! அவர்களுக்குப் பிடித்து விட்டதாம்!

இப்படி என்னென்னவோ காரணத்தைச் சொல்லிக் கொண்டார்கள்.

ஆக... தனிமைப்படுத்தப்பட்டவள்... மாட்டிக் கொண்டவள் அவள் உதயரேகா மட்டுமே!

அவள் நின்றாலும் குற்றம், உட்கார்ந்தாலும் குற்றம் என்ற கதையில் கல்லூரிப் படிப்பை முடிப்பதற்குள் இவர்கள் இருவரிடமும் மாட்டிக் கொண்டு திண்டாடத் தான் செய்தாள் அவள்.

அண்ணன், படிப்பது வேஸ்ட்... வீண் செலவு... என விரட்டினால்... அன்னையோ, எந்நேரமும் புத்தகத்தை எடுத்துப் படி... படி என நச்சரித்து ஒரு நிமிடம் வீட்டில் ஓய்வெடுக்க விடமாட்டாள். அங்கு நிற்காதே, இங்கே உட்கார். இப்போது தூங்கக் கூடாது. எழுந்திரு என ஒரே அதிகாரம்தான்!

படிப்பு முடித்து ரிசல்ட்டுக்காக அவள் காத்திருக்கும் வரை இந்த வசவும், அர்ச்சனையும் தொடர்ந்தது. அவ்வப்போது கூடியது.

ஆனால், என்று அவள் அவர்கள் தயவு இல்லாம லேயே ஒரு நல்ல வேலையைத் தேடி நல்ல சம்பளத் தையும் பெற்றுக் கொண்டாளோ, அன்றே கப் சிப் ஆகிவிட்டார்கள்.

அதன்பின் அண்ணனின் கல்யாணம் வெகு விம ரிசையாய் பெரிய கல்யாண மண்டபம் ஒன்றில் நடந் தது. அவள் கொஞ்சமும் யோசிக்காமல் மேனேஜரிடம் லோன் போட்டு, இரண்டு லட்சம் வாங்கி அவன் கல்யாணத்திற்காக தடபுடலாய் தண்ணீராய் செலவு செய்தாள்.

அவர்களுக்கு அவள் மேல் பாசம் இருக்கிறதோ, இல்லையோ... அவளுக்கு நிரம்ப இருக்கிறது. அதை வெளிக்காட்டவே அப்படிச் செய்தாள்.

ஆனால் என்ன பிரயோஜனம்? புதியதாய் வந்த அண்ணி மாலினிகூட பூவோடு சேர்ந்த நாறு கதையாய் அவளும் அவளை வெறுத்தாள். அவளுக்கு உதய ரேகாவைப் பிடிக்கவில்லை!

அவளும் இவர்களோடு சேர்ந்து உரிமையாய் கேலி யும் கிண்டலும் செய்ய பொறுத்துதான் போனாள் இவள்.

இவர்கள் எல்லோரும் அவளுக்கு உடன்பிறந்தவர்கள் தானே? ஏன் இப்படி ஆகி விட்டார்கள்?

அம்மா, அண்ணன், தங்கை, அண்ணி என எல் லோருமே அவளை யாரோ போல் 'இடைவெளி' விட்டு



பழகுவது ஏன்? அவளைப் 'பிடிக்காதவளாய்' பார்ப்பது ஏன்?

எல்லோரையும் விடுவோம்,

அம்மா...!

அவளுக்கு ஏன் புரியவில்லை? பெற்றவள் அவள் தானே?

அவளுக்குத் தெரிந்து என்றைக்குமே அவளை அம்மா, கண்ணே... மணியே... எனக் கொஞ்சியது இல்லை. சரி... கொஞ்சத்தான் வேண்டாம். அதட்டி, உருட்டி விரட்டாமல் இருந்தால் அதுவே போதுமே?

மற்றவர்களைவிட பெற்றவள் அதட்டும்போது தானே இதயத்தில் வலிக்கிறது?

இது ஏன் இந்த அம்மாவிற்குப் புரியவில்லை?

''ஆபீஸிற்குக் கிளம்பிவிட்டாயா? டிபன் பாக்ஸை எடுத்து விட்டாயா? சரி... போ! போ!'' என கிளம்பும் போதுகூட அந்த விரட்டல்தான்!

இப்படி சும்மாவே மென்று கொண்டிருந்தவர்களுக்கு வாயில் அவல் கிடைத்தது போல் அடுத்த வருடம் அவளுக்கு மாப்பிள்ளை தேடும் படலம் ஆரம்பமாயிற்று.

அவளைப் பெண் பார்க்க வரிசையாய் வந்த மூன்று, நான்கு வரன்கள் அவளது சுமாரான அழகையும், நிறத்தையும் காட்டி நிராகரித்துவிட 'பிலுபிலு'வென பிடித்துக் கொண்டார்கள் இவர்கள்.

கறுப்பழகியில் ஆரம்பித்து கரிச்சான் குஞ்சு வரை அவளைக் குத்தி கிண்டலடிப்பதில் அவர்களுக்கு அப்படியொரு ஆனந்தம்!

'என்னவோ போங்கள்! எப்படியும் சொல்லிக் கொள்ளுங்கள். எனக்கும் ஒரு ராஜகுமாரன் வரத்தான் போகிறான். எனது வாழ்க்கையும் நன்றாகத்தான் இருக்கப் போகிறது. அப்போது இருக்கிறது உங்களுக்கு!'

அடிக்கடி அவளும் கர்வத்தோடு தனக்குள் சொல்லிக் கொள்வாள். தன்னம்பிக்கையை தினமும் வளர்த்துக் கொள்வாள்.

அவளது நம்பிக்கை வீண் போகவில்லை!

அவள் நினைத்தது போலவே ஒரு ராஜகுமாரன் தான் அவளைத் தேடி வந்தான்.

ஆனால்...



# 2

உதயரேகா அதன் பின் மனதில் எந்த யோசனையையும் ஓட விடவில்லை. பிதுங்கி வந்த பஸ்ஸில் நெரிசலோடு நெரிசலாய் ஏறினாள். கொஞ்ச நேரத்தில் உட்கார ஒரு இடம் கிடைத்ததும் உட்கார்ந்தாள்.

எத்தனை மனிதர்கள்? எத்தனை விதமான முகங்கள்? ஒன்றிரண்டு முகங்களைத் தவிர எல்லா முகத்திலும் ஏதோ ஒரு கவலையின் ரேகை கோடு ஓடிக் கொண்டு தானே இருக்கிறது?



யாருக்குத்தான் பிரச்சினை இல்லை?

எல்லோருக்கும் பிரச்சினைகள் தான். கவலைகள் தான்! யாரோ ஒருவர் பழமொழியாகச் சொன்னது போல், 'வாழ்க்கையே ஒரு துன்பம் தான். அதில் இன்பம் எப்போதாவது வந்து, எட்டிப் பார்க்கும்... அதைப் புரிந்து கொண்டு நாம் வாழ்ந்து கொள்ள வேண்டியதுதான்...!' சலிப்போடு நினைத்தவளின் உதட்டில் அந்த புன்னகை உருண்டோடிய போதுதான், பக்கத்தில் கேட்ட ''எக்ஸ்கியூஸ் மி...'' என்ற குரல் அவளை திரும்ப வைத்தது.

பின் சீட்டில் வாட்டசாட்டமாய் உட்கார்ந்திருந்த முப்பது வயது மதிக்கத்தக்கவன் தான் அவளை அழைத்திருந்தான்.

ஒருவேளை சீட்டில் உட்காரும் அவசரத்தில் எதையும் கீழ் போட்டுவிட்டாளா? இல்லையே ஹாண்ட் பேக், பர்ஸ், கர்ச்சீப்... என எல்லாமே அவளிடம் பத்திரமாய் இருக்கிறதே... பின் என்ன?

அவள் திகைப்பாய் அவனைப் பார்க்க, ''உங்கள் பெயர் உதயரேகா தானே?'' என தலையசைத்து கேட்டான் அவன்.

அவன் உச்சரித்த விதமும், அதுவும் அவளது பெயரை இவ்வளவு அழகாய் யாரும் உச்சரித்துக் கூப்பிட்டது கிடையாதே என்ற வியப்பு தோன்ற மேலும் விழிகளை அகலமாக்கினாள்.

''உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்...'' என்றான் அவளை மேலும் ஆச்சரியப்படுத்தும் விதமாய்.

பிதுங்கும் பஸ்ஸில் நெரிசலோடு நெரிசலாய் இடித்துக் கொண்டு ஆடிக்கொண்டு இருக்கையில் பேசுவதா? என்ன சொல்கிறான்?

அவளது நினைப்பை புரிந்தவள் போல், "இங்கு அல்ல... பஸ்ஸை விட்டு இறங்கியதும் பேசுவோம்..." என்றான்... ரொம்ப நாள் பழகியது போல் கையசைப்புடன்.

அவளும் என்ன எதுவென்று சொல்லாமல் பதிலுக்கு கையசைக்கவே செய்தாள்.

யாரிவன்? நம்மிடம் என்ன பேச வேண்டும்?

நாமும் அவன் கேட்டதும், சரி பேசுவோம் என தலையாட்டுகிறோமே? என்று அவளுக்கு உரைக்கத்தான் செய்தது.

ஆனாலும் அவள் கம்பீரமான முகம், தலை சாய்த்து ரொம்ப நாள் பழகியது போல் புன்முறுவலுடன் அவன் பேசிய விதம் எல்லாமே அவனை மறுக்கவோ, யோசிக்கவோ விடாமல் தலையசைக்க வைத்தது.

ஒருவேளை தெரிந்தவனாய் இருப்பானோ? நாம் தான் மறந்து விட்டோமோ?

திரும்பி ஒரு கணம் அவனை நன்கு உற்றுப் பார்க்க நினைத்தவள்... மறுகணமே அது அநாகரீகமாய் இருக்கும் என விட்டு விட்டாள்.

ஒருவேளை அவளது அலுவலகம். கன்சல்டன்சி சம்பந்தமாக யாராவது க்ளையண்ட் ஆக இருக்குமோ...?

ஆனால் அப்படியும் வாய்ப்பில்லையே? கடந்த ஆறு மாதங்களாய் அவள் அலுவலகத்தில் செக்ஷன் மாறி, உப்புச் சப்பில்லாத 'டெஸ்பாட்ச்' பிரிவில் அல்லவா உட்கார்ந்திருக்கிறாள்? யாரும் அவளிடம் எந்தத் தகவலும் கேட்க வாய்ப்பில்லையே? பின் யாராக இருக்கும்?



ஒரு பத்து நிமிடங்கள் அவள் அப்படியும், இப்படியுமாய் திகைப்பான யோசிப்புகளில் கழிந்தபோது பஸ் அவள் இறங்க வேண்டிய ஸ்டாப்பை நெருங்கி விட்டது.

சீட்டை விட்டு எழுந்தவள் தனது ஸ்டாப் இவனுக்குத் தெரியுமா? என திரும்பிப் பார்க்க... அவனும் சீட்டை விட்டு எழுந்தபடி இறங்கத் தயாராகிக் கொண்டிருந்தான்.

அவன் கையில் ஃபைல் ஒன்றைப் பார்த்தவள், 'ஒருவேளை அவனும் நாம் இறங்கும் இந்த கியூரான் சர்க்கிளில் இறங்கி வேறு எங்காவது ஒரு அலுவலகத்தில் வேலை பார்க்கக் கூடுமா? அல்லது தனக்காகவே இங்கு இறங்கப் பார்க்கிறானா?' சிந்தனையுடன் பஸ் நின்றதும் இறங்கினாள்.

பின்னால் அவனும் விறுவிறுவென இறங்கினான்.

அவன் வருவதைப் பார்த்து இரண்டு எட்டு நடக்கப் போனவள் நின்றாள்.

அவளையறியாமல் கண்கள் தன்னிச்சையாய் கடிகாரத்தை நோக்கிப் போனது.

ஆயினும், "ஒரு ஐந்து நிமிடம் உங்களிடம் பேச வேண்டும். பேசலாம் தானே?" என்று கேட்ட போது மீண்டும் அவள் தலை மறுக்க மனமில்லாமல் அசைந்தது.

பக்கத்தில் தெரிந்த காபி ஷாப்பை சுட்டிக் காட்டினான்.

"உட்கார்ந்து கொண்டு பேசலாம். வாருங்கள்...!"

அவன் சொல்லியபடி முன்னால் நடக்க, அவள் கால்கள் எவ்வித சங்கோஜமுமின்றி பின் தொடர்ந்தன.

அப்போதுதான் அவள் நிதானித்து உன்னிப்பாய் பார்த்தாள்.

நெடு நெடு உயரமும், உறுதியான உடற்கட்டுமாய் நெஞ்சை நிமிர்த்தி கிரேக்கப் போர்வீரன் போல் திடமான நடை, கொண்டிருக்கும் சுருள் முடிகள் நெற்றியில் புரள, ஆழமான விழிப்பார்வையும், அடர்த்தியான மீசையுடன் கூடிய கம்பீரமான முகம், எப்போதும் வசீகரமான புன்னகையொன்றை உதிர்த்தபடி புன்முறுவலுடன் இருக்கும் உதடுகள்... எல்லாமே யாரையும் வசீகரிக்கும், 'சூப்பர் பர்சனாலிட்டி இவன்...' என்பதை அவளுக்கு உணர்த்தின.

சரி... இவன்... என்ன பேசப் போகிறான்? இவனுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம் இருக்கப் போகிறது?

கேள்விகள் தாக்க அவனுக்கு பின்னாலேயே காபி ஷாப்பினுள் நுழைந்தவள், அவன் காட்டிய இருக்கையிலேயே உட்கார்ந்தாள்.

வியப்பாய் அவள் விழிகள் அகல விழிப்பதை ரசித்தவன், கொண்டிருந்த புன்முறுவலை பெரிதாக்கியபடி, ''எல்லாம் நல்ல விஷயம்தான்...! நம் கல்யாண விஷயம்தான்...!'' என்றபோது அவளுக்கு நிஜமாகவே தூக்கி வாரிப் போட்டது.

''நம் கல்யாண விஷயமா?''

ஏறக்குறைய அதிர்ந்து போய் தான் கேட்டாள் அவள்.

புன்னகை மாறாமல் தலையசைத்தான்.

''என்ன வியக்கிறீர்கள்...? நம் கல்யாண விஷயம்தான்...! மூன்று நாளுக்கு முன் என் வீட்டில் இருந்து



உங்களை பெண் பார்த்துவிட்டுச் சென்றார்களே... மறந்து விட்டீர்களா...?'' என்றதும் மறுபடியும் அவளுள் மலைப்பு.

என்ன இவனுக்காக... அவளைப் பெண் கேட்டு வந்து பெண்ணும் பார்த்து விட்டுப் போயிருக்கிறார்களா?

நடப்பதெல்லாம் கனவா... நிஜமா...?

கம்பீரமாய் சூப்பர் பர்சனாலிட்டியுடன் சினிமா ஹீரோ போல் இருக்கும் இவன் எங்கே...? சுமாரான அழகுடன்... கறுப்பாய் அவள் வீட்டு நபர்களே 'கறுப்பழகி' என கிண்டலடிக்கும் இவள் எங்கே?

என்னதான் இங்கு நடக்கிறது? என்னதான் சொல்கிறான் இவன்?

மறுபடியும் அவள் விழிகளை விரித்து திகைப்பதை ஆச்சரியமாய் பார்த்து ரசிக்கவே செய்தான் அவன்.

அட.. அவள் விழியழகை ரசிக்கிறானா? என அவள் மறுபடி வியந்து மேலும் விழிகளை விரித்தாள்.

அவன் ரசிப்பை விடாமல் விளக்கவும் செய்தான்.

''இதோ பாருங்கள் உதயரேகா, உங்களுக்கு எல்லாம் வியப்பாகவே இருக்கும். புரியும்படியே சொல்கிறேன். என் பெயர் தினகரன். யூனிவர்சல் சாப்ட்வேர் என்ற மல்டி நேஷனல் கம்பெனியில் மேனேஜராய் இருக்கிறேன். கை நிறையச் சம்பளம் வாங்குகிறேன். எனக்கு வீட்டில் பெண் பார்க்கிறார்கள். அந்த சமயத்தில் தான் கல்யாணத் தரகர் பொன்னுசாமி உங்களைப் பற்றிச் சொல்லி, உங்களுக்கும் மாப்பிள்ளை வரன் தேடுவதாய் சொன்னார். அதனால் அவர் மூலமாகவே பேசி என்

வீட்டு நபர்களை உங்கள் வீட்டிற்கு பெண் பார்க்கவும் அனுப்பி வைத்தேன். இப்போது ஞாபகம் வருகிறதா...?'' எனவும் உதயரேகா திகைப்பு குறைந்தது.

அவளுக்கு ஞாபகமும் வந்தது.

மூன்று தினங்களுக்கு முன், மாலை வேளையில் தரகர் பொன்னுசாமியுடன் இரண்டு நடுத்தர வயது பெண்மணிகள் நுழைந்தது... அப்போதுதான் வேலை முடிந்து வீட்டில் நுழைந்து அவள் உடை மாற்றிக் கொண்டிருக்க... அம்மா அவளது ரூமில் நுழைந்து பரபரத்தது... அவளும் ஒருவித எரிச்சலுடன் அவசர அவசரமாய் காஞ்சிபுரத்தை கட்டிக் கொண்டு போய் குனிந்த தலை நிமிராமல் அவர்கள் முன் உட்கார்ந் திருந்தது...

கடைசியில்... அன்று பெண்மணிகள் இருவரும் கொடுத்த காபியைக் குடித்துவிட்டு ஒன்றும் பேசாமல், அவளிடம்கூட ஒன்றும் கேட்காமல் போய்விட்டார் களே!

அவர்கள் போனதும் அம்மாகூட பேசாமல், ''உன் அழகை, நிறத்தைப் பார்த்ததும் பேயறைந்தது போல் ஆகி விட்டார்களே! நீ ஒரு... கர்மம்! கடையில் எத்தனை அழகு க்ரீம்களை விற்கிறார்கள்... எதையாவது ஒரு க்ரீமை வெள்ளையடித்தாற்போல் தடவிக் கொண்டு வந்து உட்கார்கிறாயா? சொன்னால் கேட்டால்தானே...?'' என அலுத்ததும் ஞாபகத்திற்கு வந்தது.

அவன் சொல்வதையெல்லாம் ஆமோதிப்பது போல் தலையசைத்துவிட்டு, ''ஆமாம்... வந்தார்கள்...! ஆனால்



பார்த்துவிட்டு ஒன்றும் சொல்லாமல் போய் விட்டார் களே?'' என்றாள் அப்பாவியாய்.

அவனும் மீண்டும் சிரித்து தனது வெண்ணிற பற் களைக் காட்டியவன், ''எப்படிச் சொல்வார்கள்? ஏனென் றால் அவர்களுக்கு முன் தான் நான் உங்களைப் பார்த்து 'ஓ.கே...!' செய்துவிட்டேனே?'' என்றான் சர்வ சாதா ரணமாய்.

மறுபடியும் அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது. கால் களை தரையில் சரியாக ஊன்றவில்லையா... அல்லது கால்கள் அந்தரத்தில் பறக்க ஆரம்பித்து விட்டனவா...? என்ற சந்தேகம் அவளுக்கு வந்து விட்டது.

''என்ன சொல்கிறீர்கள் நீங்கள்...?'' என்றாள் புரிந்தும் புரியாதது போல்.

ஆனால் அவனோ அவளது விழிகள் விரியும் திகைப்பை மறுபடியும் ரசித்தவனாய் விளையாடினான்.

''வேறென்ன...? இந்த ராஜகுமாரன் தேடிய ராஜ குமாரி நீங்கள் தான்! அதான் டிக் அடித்து உடனே ஓ.கே. செய்துவிட்டேன்!''

அவளுக்கு இப்போது மயக்கம் வராத குறைதான்!

என்ன சொல்கிறான்? ராஜகுமாரன் தேடிய ராஜ குமாரியா? அவன் சொன்னாலும் சொல்லா விட்டாலும் அந்த கம்பீரமான அழகிலும், உடல் பலத்திலும் அவன் ராஜகுமாரன் தான்!

ஆனால் அவள்...?

அவள் என்ன ராஜகுமாரியா...?

அவன் சொன்ன இந்த வார்த்தையை மட்டும் வீட்டில் போய்ச் சொன்னால் இரண்டு நாட்கள் விடாமல் விழுந்து விழுந்து சிரிப்பார்களே?

இவனுக்கு என்ன வந்தது...? கண்கள்.... பார்வையெல்லாம்... பார்க்க சரியாகத்தானே இருக்கிறது?

அவள் திகைப்பதைக் கண்டு அவள் விழிகளுக்கிடையே தனது விரல்களால் மென்மையாய் சொடுக்கிட்டு அவளை நிஜத்திற்கு கொண்டு வந்ததோடு மட்டுமில்லாமல், மேஜையில் இருந்த அவளது கை மேல் தனது கரங்களை வைத்து மெல்ல ஆறுதலான நிஜத்தை உணரும் அழுத்தமும் கொடுத்தான் அவன்.

முதன் முதலாய் ஒரு ஆணின் கை! அந்த விரல்களின் ஸ்பரிசம்! இதுவரை அவள் அனுபவித்திராதது! அதுவும் அவளது கை மேல் வைத்த அவனது கை... அந்த நிலை... கறுப்பும் சிவப்புமாய் ஏதோ கட்சிக் கொடியை நினைவு படுத்தியது போல்...!

அவளுக்கு திரும்பவும் நிஜமாகவே மயக்கம் வருவது போல்தான் இருந்தது.

இதுவரை அனுபவிக்காத சூழ்நிலையில் உணர்ச்சிகளில்... அவளுக்கு அது சங்கோஜமாகத்தான் இருந்தது.

எந்த ஆணிடமும் அவள் இப்படிப் பேசியதில்லை. எந்த ஆணும். இப்படி அவளிடம் முகம் கொடுத்து பேசியதும் இல்லை! இரண்டொரு வார்த்தைகள் அவள் பேசுவதற்குள் மேற்கொண்டு பார்க்கப் பிடிக்காதவர்கள் போல் பார்வையை வேறு எங்காவது திரும்பிக் கொள்வார்களே!



நிமிர்ந்து பார்த்த அவளுக்கு கன்னங்கள் சூடேற முகம் முழுவதும் சிவந்தது.

அவன் வைத்த கண் மாறாமல் அவளையே ஆவலாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

நம்மைப் போய் இந்தப் பார்வை பார்க்கிறானே...?

திகைத்து நம்பியும், நம்ப முடியாமலும் வெட்கம் பொங்க மறுபடியும் குனிந்தாள்.

திடும்மென அந்த சந்தேகமும் எழுந்தது.

நம்மை முன்பே பார்த்து விட்டதாய் சொன்னானே... எப்போது?

அதையே கேள்வியாய் கேட்க, மீண்டும் அவன் முறுவலித்து, ''அதான் தினம் தினம் உங்களை பஸ்ஸில் பார்க்கிறேனே...?'' என்றவன் அவள் வியப்பதைப் பார்த்து, ''நானும் இந்த கியூரான் சர்க்கிளில் தான் இறங்குகிறேன். எனது கம்பெனி உங்களது கன்சல்டன்சிக்கு எதிர்ப்புறமான ரோட்டில் இரண்டு பர்லாங்கு தூரத்தில் இருக்கிறது...'' என்பதோடு நில்லாமல், ''நான் இப்படி பஸ்ஸில் வருவதும் உங்களுக்குத்தான்!'' என அதிர வைத்தான்.

''என்ன சொல்கிறீர்கள்?''

''கம்பெனி கார் இருக்கிறது. இருந்தாலும் அதை போகச் சொல்லிவிட்டு உங்களுக்காக உங்களது பார்வையை தினம் தரிசிப்பதற்காகவே வந்தேன்...'' என தீர்மானக் குரலில் அவன் சொல்ல, சரிதான் இவனுக்கு தலையில் நட்டு எதுவோ கழண்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கே வந்து விட்டாள் அவள்.

அவனோ தொடர்ந்து, ''அப்படி ஒரு வாரமாய் உங்களைப் பின் தொடர்ந்து பஸ்ஸில் வருகிறேன். நீங்கள் நிமிர்ந்து என்னையோ... மற்ற ஆண்களையோ ஒரு பார்வை பார்க்க வேண்டுமே...? ம்கூம்...! குனிந்த தலை நிமிராமல் வேகமாய் நீங்கள் நடந்து... நின்று... சென்று வரும் அழகு... அப்பப்பா...! அதை ரொம்பவும் நான் ரசித்தேன்...!'' என்றான் சுவாரஸ்யம் தொனிக்கும் குரலில்.

எத்தனையோ லோ ஹிப், பாப் கட், மிடி என ''அழகு ரதிகள்'' மினுக்கி குலுக்கி வலம் வரும் அந்த பஸ்ஸில் தன்னைப் பார்க்கும் சில ரோமியோக்கள் பார்க்கக் கூடாததை பார்த்து விட்டது போல் முகம் சுழிக்குமே... என குனிந்தே நடந்தால் அது அழகாமே? அதை... இப்படி... இவ்வளவு தூரம் ரசித்திருக்கிறானே?

நிஜமாகவே இவன் பேசுகிறானா... அல்லது வீட்டில் எல்லோரும் நம்மைச் செய்வது போல் கிண்டல், கேலி... செய்து கடைசியில் பெரிதாய் சிரிக்கப் போகிறானா... என்ற பயமும் வந்தது.

ஆனால் அவன் பேச்சு தெளிவாகவே இருந்தது. முதலில் தரகர் அவனிடம் அவளது பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்தைக் காட்டி அவள் வேலை பார்க்கும் இடத்தையெல்லாம் சொன்னாராம்.

அப்போதே அவனுக்குப் பிடித்து விட்டதாம். இருந்தாலும் சம்பிரதாயத்திற்காக அவன் வீட்டுப் பெண்மணிகள், அதுவும் வெளியூரில் இருக்கும் சகோதரிகளை இதற்காக வரவழைத்து அனுப்பினானாம். அவர்களுக்கும் மணப்பெண்ணான அவளைப் பிடித்து விட்டதாம். இனி



முறைப்படி சம்பந்தம் பேச வேண்டியதுதானாம். அதற்காக இன்று மாலை அவள் வீட்டிற்கு வர எண்ணியிருக்கிறானாம்...'' என எல்லாவற்றையும் சொல்லி, ''இன்று பேச வரலாம் தானே?'' என அவன் கேட்டபோது, அவள் தலை கழுத்தில் இருந்து சுழன்று வெளியில் வந்து விழாதது ஆச்சரியமே!

அவளால் ஏற்பட்ட இன்ப அதிர்ச்சியில் மீண்டும் தலையசைக்க முடியவில்லை, ஏன் சின்னதாய் சிரிக்கக்கூட முடியவில்லை!

ஆனால் அவனோ அவளது மௌனத்தை சம்மதமாய் எடுத்துக் கொண்டவன் போல், ''ஓ.கே...! அப்படியானால் இன்று மாலை உங்கள் வீட்டுக்கு வருகிறேன். வீட்டாரிடம் சொல்லி விடுங்கள்!'' என்றபடி எழுந்து அவளிடம் விடைபெற்று கிளம்பி விட்டான்.

ஆடாமல் அசையாமல் கற்சிலை போல் அவன் போவதையே விழி மலர பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்!



## 3

தினகரன் அத்தோடு நிற்கவில்லை. சொன்னபடியே அன்று மாலை முன்பு வந்து பார்த்து விட்டுச் சென்ற அவனது இரு சகோதரிகளுடன் காரில் வந்து விட்டான்.

வீட்டில் முதலில் அவள் விஷயத்தைக் கூறியபோது கூட அவ்வளவு நம்பாதவர்கள், அவர்கள் வந்ததும் அதிசயித்து தான் போனார்கள். வீடே ரெண்டாகும்படி 'ஒரே தடபுடல் உபசாரம் தானாம். கவனிப்புதான்.'

அதிலும் அண்ணன் ருத்ரன் பம்பரமாய் சுழன்று நடமாடிக் கொண்டிருந்தான். தினகரன் அதிகம் பேசியதும் அவனுடன் தான்.

அவளை மறுபடியும் அலங்காரம் செய்யச் சொல்லி காஞ்சிபுரப் பட்டில் கூட்டிப் போய் நடு ஹாலில் பெட்ஷீட் விரித்து அவன் முன் உட்காரச் சொன்னபோது, அவள் உதயரேகா நெளியத்தான் செய்தாள்.

அவனும் அவளது தயக்கத்தைப் புரிந்தபடி, ''நோ பார்மாலிட்டிஸ்! பெண்ணை எல்லாம் பஸ் ஸ்டாப்பில் நான் எத்தனையோ முறை பார்த்தாயிற்று. பேசியாயிற்று. நான் பேச வந்தது உங்களுடன் தான்...?'' எனக் கூறி அவளை எழுந்து போகும்படி கூறினான். சாதாரண டிரஸ்ஸில் இயல்பாக வந்து பேச்சில் கலந்து கொள்ளும்படி உரிமையுடன் அவன் கூறியபோது பெருமிதமாகவே உணர்ந்தாள் அவள்.

அதைவிட அவளை பெரும் வியப்படையச் செய்தது, தங்கை ரமா அவன் முன் பலமுறை தன் அழகை மினுக்கிக்கொண்டு வேண்டுமென்றே அங்குமிங்கும் அலைந்தபோதும் அவன் தினகரன் அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை என்பதுதான்.

அதிலும் இந்த கடன்காரி வேண்டுமென்றே அவன் முன் நின்று போஸ் கொடுத்துக் கொண்டு ஏதேதோ உப்புச் சப்பில்லாத கேள்விகளை கேட்டபடி அடிக்கடி



சிரித்துக் கொண்டு (சிரிக்கும்போது அவள் இன்னமும் அழகாய் தெரிவதாக தோழிகள் சொல்லியிருக்கிறார்களாம்) என என்னென்னவோ செய்து பார்த்து விட்டாள்.

அவன் தினகரன் அவளை கொஞ்சமும் சட்டை செய்யவில்லை. அவளைப் பார்த்துவிட்டு எவ்வித சலனமுமில்லாமல் அப்படியே பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

இப்படி ஒரு 'நோஸ்கட்டை' எதிர்பாராத அவளது முகம் முதன்முறையாய் கறுத்து போவதை உதயரேகாவும் புளகாங்கிதத்துடன் கவனிக்கவே செய்தாள். படட்டும், எத்தனை முறை அவளை நோகடித்திருப்பாள் இவள்!

அதன் பின் சம்பிரதாயப் பேச்சுகள் நடந்தது. சீர்வரிசை பெரிதாய் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் போடுகிறது போதும் என உறுதியாய் சொல்லி விட்டார்கள்.

அத்தோடு அன்று தினகரன் விடவில்லை. தனியே உதயரேகாவிடம் ஒரிரு வார்த்தைகள் பேச வேண்டும் என அண்ணன் ருத்ரனிடம் பவ்யமாய் விண்ணப்பம் வேறு வைத்தான்.

இப்போது எல்லோருக்கும் கண்களை இமைக்க முடியாத அளவுக்கு ஆச்சரியம்!

அவளுக்கே அவன் செய்வதைப் பார்த்து உடம்பில் நடுக்கம் வந்து விட்டது.

ருத்ரன் தலையசைத்து எதிரே இருந்த தனியறையைக் காட்டியதும் விறுவிறுவென அங்கு போய் அவள்

வரவிற்காக கைகளைக் கட்டியபடி நின்று கொண்டான்
அவன்.

அவள் திகைப்பில் கால்களை அழுத்தி அழுத்தி
தரையில் பதித்தவாறுதான் உள்ளே போனாள்.

அவள் உள்ளே வந்ததும் பின்னால் நடந்து அந்த
அறையின் கதவை ஓசையில்லாமல் மெல்ல சாத்தி
னான்.

கீழ் உதட்டை அழுந்தக் கடித்தபடி தலையை அது
வரை குனிய வைத்திருந்தவள் மெல்ல நிமிர்ந்தாள்.

மறுபடியும் கைகளைக் கட்டிக் கொண்டு அவளையே
ஒரு பார்வை...

அதுவும் விழுங்கும் பார்வை...

ஐயோ...! என்ன இது...? நம்மை இந்தப் பார்வை
பார்க்கிறானே...? ஒருவேளை முன் சரியாய் பார்க்கவில்
லையோ...? இப்போது இப்படி தனியாய் வந்து உற்றுப்
பார்த்து... கடைசியில் இவனும் பிடிக்கவில்லை... என்று
சொல்லிவிடப் போகிறானோ...?

அவள் நிஜமாகவே பயந்தபடி நினைக்க... அவன்
கேட்ட கேள்வியோ அவள் பயத்தை நீக்கி அவளை
வியப்பில் தடுமாற வைத்தது.

''என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?'' என்றான்
அவன்.

இந்தக் கேள்வியை அவள் சற்றும் எதிர்பார்க்க
வில்லை தான்.



நெடு நெடு உயரத்தில் சிவப்புத் தோலும், வாட்டச்
சாட்டமான உடற்கட்டுமாய், அடர்ந்த சிகை, அடர்ந்த
மீசை இருக்கும் அந்த கம்பீர முகத்தில், பேசும் போதும்
சரி, பேசாமல் இருக்கும்போதும் சரி, இதழ்களில் முறு
வலாய் ஓடும் அந்த வசீகரப் புன்னகை... என இதெல்
லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் அல்லவா
இருக்கிறது? இவனைப் போய் யாராவது பிடிக்கவில்லை...
என்று சொல்ல முடியுமா?

அவள் அவன் பக்கத்தில் போய் நின்றால், 'பொருத்த
மில்லை. கொஞ்சமும் இவள் அவனுக்குப் பொருத்த
மில்லை என்று வேண்டுமானாலும் சொல்லலாம். சொல்
லக்கூடும்!

உண்மையும் அதுதானே!

அவள் பதில் சொல்லாமல் இருப்பதைப் பார்த்து,
''என்ன பதில் சொல்லுங்கள்...? என்னை உங்களுக்கு
பிடித்திருக்கிறது தானே...?'' என்றான் மறுபடியும்.

அவள் அதே திணறலோடு, ''ம்ம்... ம்ம்... பிடித்திருக்
கிறது... ரொம்பவும் பிடித்திருக்கிறது...'' என்றாள் தட்டுத்
தடுமாறியவளாய்.

''எனக்கு உங்களை ரொம்பவும் பிடித்திருக்கிறது.
அதை வெறும் வார்த்தைகளால் மட்டுமல்ல. செய்தும்
உங்களுக்கு புரிய வைக்கிறேன்...'' என்றபடி பக்கம்
நின்றவளை அவள் சற்றும் எதிர்பாராத அந்த தருணத்
தில் சட்டென இழுத்து வேகமாய் அணைத்தான் அவன்.
அவள் கன்னங்களில் ஒரு இதழ் அணைப்பும் செய்து
விட்டு அதே வேகத்தில் விடுவித்து விட்டான்.

ஐயோ! என்ன... இது?

கூச்சத்தில் அப்படியே சிலிர்த்துப் போனாள் அவள். அவனோ தொடர்ந்து குனிந்தவன், அவள் முகத்தை உற்றுப் பார்த்தவாறு, ''இந்தக் காலத்தில் வெட்கத்தில் இப்படி கன்னங்கள் சிவப்பதை உங்களிடம் தான் பார்க்கிறேன். அது வெகு அருமை!'' என்று பாராட்டு வேறு செய்ய, மறுபடியும் கன்னங்களில் ரோஜா பூக்க நிஜமாகவே சிவந்தாள் அவள்.

அதற்குப் பின் பேச வேண்டியதை பேசிவிட்டது போல் அறைக் கதவைத் திறந்து கொண்டு அவன் விறுவிறுவென ஹாலுக்குச் சென்று விட்டான்.

உணர்வுகளில் சிக்கிய அவள் பாடுதான் திண்டாட்டமாய் இருந்தது. அவளால் சரியாக நிற்கக்கூட முடியவில்லை. வந்தான். ஒரு வார்த்தை பேசினான். வெகு நாள் பழகிய காதலியை அணைப்பது போல் வேகமாய் அணைத்தான். முத்தமிட்டான். சென்றுவிட்டான்!

நடந்ததெல்லாம் நிஜம்தானா?

நிஜமாகவே இவனுக்கு என்னைப் பிடித்திருக்கிறதா? என்னை இவ்வளவு தூரம் விரும்புகிறானா?

ஒரே நாளில் அவ்வளவு கொடுத்து வைத்தவளாய் நாம் ஆகிவிட்டோமா?

இனியும் நம்ப முடியாமல் என்ன...? நம்பித் தான் ஆக வேண்டும்!

கொஞ்சம் தலை நிமிர்ந்தவளாகவே வெளியே வந்தாள்.

என்னவெல்லாம் வீட்டில் பேசினார்கள்?

எப்படியெல்லாம் நோகடித்தார்கள்?



கறுப்பழகி! கரிச்சான் குஞ்சே! அழகற்றவள்! என்றெல்லாம் சொல்லி ஆனந்தப்பட்டார்களே! இன்று என்ன செய்யப் போகிறார்கள்?

அவள் விரும்பிய மாதிரியே கட்டழகு ராஜகுமாரன் ஒருவன் அவளைத் தேடி வந்துவிட்டானே? வந்தது மட்டுமில்லாமல் அவளை விரும்பவும் செய்கிறானே?

இவர்கள் பார்த்த அழகு மதிப்பீட்டை எல்லாம் தூக்கிப் போட்டுவிட்டு அவன் வேறுவிதமாய் அல்லவா அவளைப் பார்க்கிறான்?

அவளது அடக்கம், வெட்கம் எல்லாம் அழகு என்று சொல்லி அதை ரசிக்கவும் செய்கிறானே?

அப்படியானால்?

அவளும் ஒரு விதத்தில் அழகுதான்!

மற்ற எல்லாவற்றையும் விடுவோம். அழகான கம்பீரமான பர்சனாலிட்டி கொண்ட ஒருவனால் அவள் நிஜமாகவே விரும்பப்படுகிறாள். அப்படி விரும்பப்படுவதே ஒரு அழகுதானே?

எது தனக்குக் கிடைக்கவில்லை என்று நினைத்தாளோ... எது தனக்குக் கிடைக்காமல் போய்விடும் என்று மற்றவர்கள் நினைத்தார்களோ... அது கிடைத்து விட்டதே!

இனி என்ன கவலை?

அந்த சந்தோஷத்தில் மகிழ்ச்சி பொங்கத்தான் அவள் அன்று முழுவதும் நிமிர்ந்தவாறு நடமாடினாள்.

அந்த சந்தோஷ திளைப்பில் அண்ணனும், அம்மாவும் கிசுகிசுப்பாய் கூடி நின்று அடிக்கடி பேசியது அவள் கவனத்திற்கு வராமல் போனது ஆச்சரியமே!



# 4

உதயரேகாவால் அன்று இரவு தூங்க முடியவில்லை தான்!

அன்று என்னவெல்லாம் நடந்துவிட்டது.

திடீரென எங்கிருந்தோ குதித்து அவள் வாழ்க்கையில் இப்படி புகுந்து விட்டான் தினகரன்!

அத்தோடு நில்லாமல் தனியறையில் வைத்து அவன் செய்தது...

அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லையே...!

அந்த இறுக்கமான அணைப்பும், கன்னங்களில் சட்டென அவன் முத்தமிட்ட விதமும்... அப்போது அவன் காட்டிய வேகமும்...

அவ்வளவு அன்பு அவள் மேல் அவனுக்கு ஏற்பட்டு விட்டதா? அந்த ஒரே செய்கையில் அதை உணர்த்தி விட்டானே...?

எத்தனையோ முறை பார்க் ஓரங்களில், ஒதுக்குப்புற இடங்களில் காதல் ஜோடிகள் அணைத்துக் கொஞ்சிக் கொண்டிருப்பதை எல்லாம் பார்த்திருக்கிறாள்.

அப்போதெல்லாம், ம்கூம்! இது போன்ற ஆசையான அணைப்புகள், கொடுப்பினை நமக்கு இந்த ஜென்மத்தில் இல்லை... என்று விரக்தியாய் நினைத்திருக்கிறாளே...!



ஆனால் இன்று...?

அவளும் கொடுத்து வைத்தவள்தான் என ஒரே நாளில் புரிய வைத்து அவளை மகிழ்ச்சியில் திக்கு முக்காட வைத்துவிட்டானே இந்த தினகரன்?

அவனை ஒரு கணம் நினைத்ததும் அந்த கம்பீர முகம், வசீகரமாய் ஓடும் புன்முறுவல் சிரிப்பு, கனிவுக் குரலில் அவன் பேசியது என எல்லாமே அவள் ஞாபகத்திற்கு வந்து இனம் புரியா அந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இவன் நம்மை விரும்புகிறானா? இவன் நமக்கு கணவனாய் வரப் போகிறானா?

அவ்வளவு பாக்யசாலியா நாம்?

அந்த அர்த்த ராத்திரியில் படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந்துகொண்டு வாய் பிளக்க வியக்கத்தான் செய்தாள் அவள்!

வியப்பு அவளுக்கு மட்டுமல்ல... வீட்டில் உள்ள அனைவருக்கும் தான்! அவர்கள் சென்றதும் ரமா ஓடி வந்து, ''அப்படி என்னடி தனியே சந்தித்து பேசியபோது சொக்குப்பொடி போட்டாய்? இவ்வளவு பர்ஸனாலிட்டியான ஆள் உன்னைப் பார்த்து இந்த வழி வழிகிறாரே?'' என்றாள்.

'அடி வயிறு பற்றி எரிகிறது என்று சொல்வார்களே... அது இதுதானா?' என நினைத்துக் கொண்டவள், அவளைக் காயப்படுத்த விரும்பாதவளாய் கொண்டிருந்த புன்முறுவலை பெரிதாக்கியபடி, ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை!'' என்றாள்.

அடுத்து வந்து நின்றவள் அம்மா.

''என்னடி ரொம்ப நாள் பழக்கமா? வீட்டுக்குத் தெரியாமல் நீயே பழகிவிட்டு, பின் ஒன்றும் தெரியாதது போல் உன்னைப் பெண் கேட்க வரச் சொன்னாயா?'' என்றாள் குதர்க்கமாய்.

''அப்படியெல்லாம் இல்லைம்மா...!'' என்றாள் பொறுமையாய் வந்த கோபத்தை அடக்கிக்கொண்டு. அம்மா விடுவதாயில்லை. ''பின் எப்படி டி... நம்புவது? ரொம்ப நாள் பேசிப் பழகியது போல் உன்னிடம் பேசுகிறான். உன் முக லட்சணத்தையும், கறுப்பு நிறத்தையும் பார்த்து எந்தவித முகச் சுழிப்போ... அதிர்ச்சியோ கொள்ளவில்லை?''

எதோ பெரிய கண்டுபிடிப்பு போல் பேச அவளுக்கு பற்றிக் கொண்டு தான் வந்தது. பெற்ற தாய் ஒருத்தி தன் மகளையே குத்திக்காட்டி பேசுகிற பேச்சா இது? ஏன் தான் இந்த அம்மா இப்படி இருக்கிறாளோ! என தனக்குள் நொந்துகொண்டு, ''அவர் மற்றவர்களைப் போல் இல்லை. குணத்தை மட்டும் பார்க்கிறவர்...!'' என்றாள் அழுத்தத்தோடு.

''ஆமாம்... உன் குணத்தை... அந்த தங்கமான மனசை வெளியே கயிற்றில் கட்டித் தொங்க விட்டிருக்கிறாய் அல்லவா? அதான் ரொம்பவும் டாலடித்து அவரைக் கவர்ந்து விட்டது போலும்...!'' என அதற்கும் கிண்டலடித்தாள் தங்கை.

இவர்களிடம் என்ன பேச்சு? நான் தேடிய ராஜகுமாரன்... எனக்காக கடவுள் அனுப்பி வைத்த ராஜகுமாரன் வந்து விட்டான்... அது போதும்!



அதற்கு மேல் எதுவும் பேசாமல் உதடுகளை இறுக்கிக் கொண்டாள் அவள்.

ஆனால் வழக்கமான அண்ணனும், அண்ணியும் இந்த அவளை கிண்டலடிக்கும் வைபவத்தில் உற்சாகமாய் கலந்து கொள்பவர்கள்... இன்று ஒன்றும் பேசாது ஒருவரையொருவர் ஒரு அர்த்தத்தில் பார்த்தவாறு கடந்து சென்றது அவளை ஆச்சரியப்படுத்தியது.

அன்று மாலையும் சரி, இரவும் சரி அவர்களது ரூமைக் கடக்கும்போது கேட்ட பேச்சு சப்தமும் அவளை வெகுவாய் சலனப்படுத்தியது.

அண்ணன் மெதுவான குரலில், ''இன்னும் வீட்டில் யாரிடமும் சொல்லிவிடவில்லை. சொல்லிவிடவா? சொல்லி விடவா?'' என்று கேட்க, பதிலுக்கு அண்ணியின் குரல் ஒய்யாரமாய் உயர்ந்து, ''ஒன்றும் நீங்கள் சொல்ல வேண்டாம். கல்யாணம் முடியட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம். அதுவரை பொறுமையாய் யாரிடமும் உளறிக் கொட்டாமல் இருங்கள். புரிகிறதா?'' என விரட்டிக் கொண்டிருந்தாள்.

அவர்கள் பேசிய பேச்சின் அர்த்தம் முழுவதும் புரியாதவளாய் திகைத்தாள்.

கல்யாணம்... விஷயம்... என்று சொல்கிறார்களே... எதைப் பற்றி இருக்கும்? என நினைத்தவளுக்கு குழப்பமே மிஞ்சியது.

கடைசியில், என்னவும் பேசிக்கொண்டு போகட்டும்... எப்படியும் இருந்து விட்டுப் போகட்டும்... எல்லாம் இன்னும் கொஞ்ச வாரம்... கொஞ்ச நாட்கள் தான்...

அதற்குப் பின்... கல்யாணம் தான்... அவள் சிறகு முளைத்த பறவை போல் இந்த வீட்டை விட்டு பறந்து போய்விடுவாள்.

துன்பச் சிறையில் இருந்து அவளுக்கு நிரந்தரமாய் விடுதலை கிடைத்துவிடும்!

கேலி, கிண்டல், குத்தல் பேச்சுக்களை எல்லாம் காதில் வாங்க வேண்டிய அவசியம் இருக்காது. நிம்மதிதான். அதுவே பெரும் நிம்மதிதான்!

அதே நினைப்புடன் அவள் உற்சாகமாகவே நடமாடினாள். கல்யாண வேலைகளும் பரபரப்பாய் நடக்க ஆரம்பித்தன.

நகை, சீர் வரிசைகள் எல்லாம் உங்கள் இஷ்டம் என தினகரன் சைடில் இருந்து தெளிவாய் சொல்லி விட்டதால் வீட்டில் அவளுக்கென முன்பே பேசி சேர்த்து வைக்கப்பட்ட முப்பது பவுன் நகைகளும், பண்ட பாத்திரங்களும் என முடிவாயிற்று.

முகூர்த்த நாள், கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் அடுத்த இரு நாட்களில் முடிவு செய்யப்பட்டன. இன்னும் இருபது நாளில் கல்யாணம். இந்த மாதத்தின் கடைசி முகூர்த்த நாள் அதுதானாம்.

அண்ணன் ஐயர் ஒருவரிடம் நாள் குறித்து மாப்பிள்ளை வீட்டாரிடம் போய் ஏற்பாடு செய்துவிட்டான்.

அம்மாகூட, ''என்னடா இது அவசர அவசரமாய்? கல்யாணத்திற்கு ஒரு மாதமாவது அவகாசம் வேண்டாமா...?'' எனக் கேட்டபோது அண்ணன், ''அம்மா அவர்கள் அவசரப்படுகிறார்கள்...'' என்று முடித்து விட்டாள்.



அதைவிட எளிமையாய் கோயிலில் தான் கல்யாணம் என்றபோது உதயரேகாவிற்கும் அது புதிராயிருந்தது. பெரிய கம்பெனி ஒன்றில் உயர் பதவியில் இருப்பவன் எல்லோரையும் அழைத்து தடபுடலாய் மண்டபத்தில் நடத்துவதை விட்டுவிட்டு எதற்காக கோயிலில் நடத்த வேண்டும்? என்ற நினைப்பு ஓடியது.

அதையும் அண்ணன், ''அதுவும் நமக்கு நல்லது தான் அம்மா. நிறைய பணம் மிச்சமாகும். மற்ற சீர் வரிசை செலவுகளுக்கு அதை பயன்படுத்திக் கொள்ளலாம்...'' என்று அடக்கி அமர்த்தினான்.

அவளும், அதை பெரிசு படுத்தவில்லை. இறைவன் சந்நிதியில் நடைபெறுவது நல்லது தானே... என இருந்து விட்டாள்.

அந்த இடைப்பட்ட இருபது நாட்களில் கல்யாண வேலைகள் துரிதமாய் நடந்தது.

மறுநாளே கல்யாண இன்விடேஷன் டிசைன் எல்லாம் பார்த்து அடித்து வந்து விட்டது, நண்பர்களுக்கு உறவினர்களுக்கு என வரிசைப்படுத்தி விநியோகிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள்.

இடையில் ஓரிரு முறை தினகரன் அவள் அலுவலகத்திற்கு போன் செய்து அவளிடம் பேசினான். சாதாரண நல விசாரிப்புகளும் அவளது அலுவலகத்தில் அவள் லீவிற்கு அப்ளை செய்து விடுவது பற்றியெல்லாம் பேசினான். போனில் ஒலித்த அவனது கனிவும், குரலும் அவன் காட்டிய அன்பான விசாரிப்பும் அவளைத் தடுமாற வைத்தது. நம் மீது இவ்வளவு அக்கறை வைத்திருக்கிறானா? என சிலிர்க்கத்தான் செய்தாள்.



# 5

நாட்கள் ஓடி அன்று பொலபொலவென பொழு விடிந்தது. இன்று மறக்க முடியாத நாள். அவளது ம நாள்! காலை ஒன்பது மணிக்கு நல்ல நேரம். கல்யாண முகூர்த்தம். பிரசித்தி பெற்ற சிவன் கோயிலில் சங்க ராமேஸ்வரர், பாகம்மரியாள் சந்நிதியில் அவளுக்கு மாலை சூடப் போகிறான் அந்த ராஜகுமாரன்!

அவளது மனதைப் போலவே, வீட்டிலும் பரபரவென தான் ஆளாளுக்கு நடமாடினார்கள். அவர்களுக்கு சொல் லிக் கொள்ளும்படி சொந்தங்கள் கொஞ்சமே ஆயினு கல்யாணத்திற்கு இரண்டு நாள் முன்னதாகவே அவர்க ஒத்தாசையாய் வந்திருந்தது எல்லோருக்கும் மகிழ் சியையே உண்டு பண்ணியிருந்தது.

ஆனாலும் அத்தைகள் இரண்டு பேரும் சொல்லி வைத்தது போல் அடிக்கடி அவள் காதுபட, ''ஆனாலும் நம் ரேகாவிற்கு வருகிற வரன்கள் எல்லாம் தட்டிப் போவதை கேள்விப்பட்டு... ரொம்பவும் வருத்தப்பட்டோம். நல்ல வேளையாய் நிறத்தையும், அழகையும், பாராமல் ஒரு மாப்பிள்ளை கிடைத்து விட்டானே... அந்த மட்டுக்கும் அவள் செய்த புண்ணியம்தான்!'' என்றார்கள்.



இது பாராட்டா... அல்லது அவள் வீட்டாரைப் போல் குத்திக் கிழிக்கும் ஆனந்தமா? என அவளுக்குப் புரியவில்லை. சொல்லப் போனால் உதயரேகா எல்லா வற்றையும் பொருட்படுத்தாமல் ஏற்றுக் கொண்டாள் என்று தான் சொல்ல வேண்டும்.

அதற்குக் காரணம் அவளது கவனம் முழுவதும் தினகரன் மீது, அவன் இதுவரை அவள் மீது காட்டிய அன்பிலும் மட்டுமே!

சொல்லப் போனால் அத்தைகள் சொன்னது போல் அவளது பூர்வ ஜென்ம புண்ணியம் தான் இப்படி தின கரனை அவளுக்கு மணமுடிக்க வைத்ததோ என்றுகூட எண்ணினாள்.

அதனாலே கல்யாண தினத்தன்றும் முகம் மலர உண்மையான மகிழ்ச்சியுடன் அவளால் இருக்க முடிந்தது.

அன்று அதற்கு மேல் அவளை யாரும் சிந்திக்க விட வில்லை.

படபடவென மாலைகள், பூக்கள் நெற்றிச்சுடி என அவளுக்கு அலங்காரம் செய்தார்கள். குனிந்த மணப் பெண்ணாய் தலை குனிய நடந்தவள், இருந்தவள், மணமேடையில் தினகரன் பக்கத்தில் வந்து உட்கார்ந்த போதுதான் நிமிர்ந்தாள்.

அப்போதும் அவளைக் கனிவாய்ப் பார்த்து குளிர் வான புன்னகையை வீசினான். அவளது அலுவலகத் தோழிகள் எல்லாம் பக்கத்தில் வந்து காதில் கிசுகிசுப் பாய், 'பெரிய ஆளுடி நீ. சரியான புளியங்கொம்பைத்

தான் பிடிச்சிருக்க. ஆளு அழகிலும் சரி, வசதியிலு
சரி... சூப்பர் தான்!' என்றனர்.

தன்னையும் பார்த்து பொறாமைப்பட ஆரம்பித்து விட்டார்களா...? என்று அவளுக்கு பெருமிதமாகத்தான் இருந்தது. அழகு சரி... தினகரன் பெரிய பளபளக் கா ஒன்றை வைத்திருக்கிறானே... அதை வைத்து அவனு வசதியை மதிப்பீட்டு விட்டார்களோ? என வியந்தாள்.

உண்மையில் அவர்கள் சொல்வது போல் அவ கொடுத்து வைத்தவள் தானே! கல்யாணமாகி, புது பெண்ணாய் அவள் அவனோடு ஜோடியாய் ஒவ்வொரு இடமாய் - கோயில், ஷாப்பிங் என அந்த பளபளக் காரில் செல்வது, சென்று இறங்குவது ஒரு கொடுப்பினை தானே!

எடுத்த எடுப்பிலேயே விமானம் ஜிவ்வென உய எழும்புவது போல் அவள் வாழ்க்கை காரில் தொடங்கி விடுகிறதே! தினம் தினம் தினகரன் அவளைக் காரில் ஏற்றி அவளது அலுவலகத்தில் அவளை விட்டு விட்டு அவனது அலுவலகம் செல்லப் போகிறான். மாலை வேலை முடிந்து அவள் தயாராய் நின்றால் திரும்ப காரில் வந்து பிக்-அப் செய்து கொள்வான்.

வாரம் ஒருமுறை ஹோட்டல், சினிமா, ஷாப்பிங் என அடிக்கடி எங்காவது சென்று கொண்டிருந்தால் நேரம் போவதுகூட தெரியாது. ஒவ்வொரு நிமிடமும் இன்ப மாய் சொர்க்கம் போல் தான் இருக்கும். அப்படி தினக னுடன் வாழப் போகும் நாட்கள் எவ்வளவு இனிமை யாகத் தான் இருக்கும்.



கல்யாண மேடையிலேயே அப்படிக் கனவுகளில் சட்டென மூழ்கி விட்டவளுக்கு மங்கல ஒலிகள் முழங்க தினகரன் அவள் கழுத்தில் தாலி கட்டிய போதுதான் உணர்வே வந்தது.

பின் சம்பிரதாயப்படி கைக்கட்டுடன் இருவரும் மணமேடையைச் சுற்றி வரும்போது அவளது கை விரல்களை இறுக்கமாய் ஒருவித அழுத்தத்தோடு அவன் பற்றியிருந்தது அவளை மீண்டும் சிலிர்க்க வைத்தது.

அதற்குப் பின் வழக்கமான சடங்குகள், கைகுலுக்கல்கள். புன்னகையுடன் கும்பிடுகள். ஆசீர்வாதங்கள்... என மாலை ரிசப்ஷன் வரை தொடர்ந்தது.

அன்று அவள் வீட்டு மேடையில் தனியறை ஒன்றில் முதலிரவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்க... சரியாக பத்து மணிக்கு குனிந்த தலையும், பால் சொம்புமாய் புது வெட்கத்துடன் நுழைந்தாள் அவள்.

பட்டு வேஷ்டி, பட்டுச் சட்டை பளபளப்பில் மெத்தையில் கம்பீரமாய் உட்கார்ந்திருந்தான் தினகரன்.

அவளைப் பார்த்ததும் அதே வசீகரப் புன்னகையை கனிவாய் வீசினான்.

தயங்கித் தயங்கி வந்தவளை ஆசையாய் கைப்பிடித்து இழுத்து பக்கத்தில் உரிமையுடன் உட்கார வைத்தான். அதே உரிமையில் கைகளை மறுபடி உயர்த்தி தோளோடு அவளை அணைத்தும் பிடித்துக் கொண்டான்.

''உன்னை எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு தங்கம். நீ கிடைக்க நான் ரொம்பவும் கொடுத்து வைச்சிருக்

கணும்...'' என அவன் முத்து உதிர்த்த போதும் நம் முடியாமல் கண்களை விரித்தால் அவள்.

அவனோ தொடர்ந்து, ''ஆமா தங்கம்... உன்னோ அன்பான இரக்கமுள்ள குணம் எனக்குத் தெரியு இப்படிப்பட்ட பெண் தான் எனக்கு மனைவி அமையணும்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். நான் நினை படியே நீ அமைஞ்சிட்ட... ஐ... ஆம்... ஸோ... லக்கி...!' என மீண்டும் பெருமிதமாய்ச் சொன்னது அவ உண்மையாகவே சொல்கிறான் என்பதை அவளுக் உணர்த்தியது.

'என்ன... இது... நாம் பேச வேண்டிய டயலாக்குகளை எல்லாம் இவன் பேசுகிறான்?' என அவள் விழிக்கத்தா செய்தாள்.

''என்ன தங்கம் அப்படி திகைப்பாய் பார்க்கிற?' என்றபடி அவளது விரிந்த வட்ட விழிகளை அதிசயமா பார்த்தவன், ''நான் உண்மையைத் தான் சொல்றேன்...' என்றபடி அவளது நெற்றியில் மென்மையாய் தன இதழ்களை ஒற்றி அவளை சிலிர்க்க வைத்தான்.

அவனது இதமான பேச்சில் மென்மையான அணை பில் திக்குமுக்காடிக் கொண்டிருந்தவள் தொடர்ந் ஆச்சரியமாகவே அவனைப் பார்த்தாள்.

வாட்டசாட்டமாய் நல்ல உடற்கட்டுடன் சிவப்பழகு கம்பீரமுமாய் பிரபல சினிமாக் கதாநாயகனை நினை படுத்துவது போல் இருக்கும் அவனது தோற்றம் எங்கே... கறுப்பாய் சுமாரான அழகுடன் அவனுக்கு சற்று பொருத்தமில்லாத அவளது தோற்றம் எங்கே?



ஒருவேளை இவன் விளையாடுகிறானா? ''தங்கம்... தங்கம்...'' என்று வேறு அடிக்கடி கூப்பிடுகிறான்...? காணாததைக் கண்டது போல் நம்மைப் பார்த்து இந்த உருகு உருகுகிறான்? நடப்பதெல்லாம்... நிஜமா...? இல்லை கனவா?

அலுவலகத்தில் அடிக்கடி வாய் பிளக்க கண்களைத் திறந்து வைத்தபடி கனவுகளில் மூழ்கிவிடுவாளே... அதுபோல் இன்றும் மூழ்கி விட்டாளா?

தன்னைத்தானே அவள் கேள்விகள் கேட்டுக் கொண்டபோது டக்கென மூச்சு முட்டுவது போல் அவள் உணர்ந்தாள்.

திடுக்கிட்டுப் பார்த்தபோது மூச்சு முட்டுமளவுக்கு அவளை இறுக அணைத்துக் கொண்டு முகத்தால் அவளது இதழ்களைத் தேடிக் கொண்டிருந்தான் அவன்.

கொஞ்சம் சிரமத்துடன் அவன் கைகளை விலக்கி முகம் நிமிர்த்தியவள், ''உங்ககிட்ட ஒண்ணு கேட்கணும்...'' என்றாள் தட்டுத் தடுமாறிய குரலில்.

அவள் சொல்லியதும் தான் தாமதம். சட்டென அவளை விடுவித்து தோளணைப்புக்கு கொண்டு வந்து அதே இறுக்கத்துடன் பிடித்தவன், ''கேளு தங்கம்... எதுவானாலும் கேளு'' என்றான்.

''நி... நி... நிஜமாகவே... என்னை உங்களுக்கு பிடித்திருக்கிறதா...?'' என்றாள் மீண்டும் திக்கித் திணறிய குரலில்.

''என்ன... கேள்வி... இது தங்கம்? உன்னை... நிஜமாவே எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு...'' என்றான்.

''எப்படி?'' என்றாள் அவள்.

''எப்படியா...? என்ன கேட்கிற தங்கம்?''

அவள் வெளிப்படையாகவே பேசிவிட வேண்டு என முடிவெடுத்தவள் மளமளவென கொட்டி விட்டாள்

''சிவப்பா... கம்பீரமா இருக்கிற உங்க அழகுக்கு மு னாடி... கறுப்பா... சுமாரா இருக்கிற... நான் கொஞ்சம்கூ பொருத்தமில்லாம இருக்கேன்... அதான்... அதான் கேட்கிறேன்... உங்களுக்கு உண்மையாவே என்னை பிடிச்சிருக்கா?''

அவன் பதில் சொல்லாமல் கடகடவென சிரிக்க ஆர பித்தான்.

இம்முறை அந்த அதீத சிரிப்பில் அவனது வரிசையா வெண் பற்கள் பளீச்சிட்ட போதும் அவளால் ரசிக் முடியவில்லை.

மாறாக அவன் சிரிப்பில் எழுந்த புது பயத்தை மேலு அவன் நெஞ்சை நோக்கி அவளை இறுக்கிய அவனு வலுவான கரங்கள் தான் போக்கியது.

காது மடல் வரை சூடாவதை உணர்ந்தாள் அவள் அவனது செயலைப் போல் பேச்சிலும் சூடேற்றினா அவன்.


''தங்கம், அழகு என்பது எதில் இருக்கிறது...? இங்கா...? என அவளது வாட்டமான முகத்தை விரல்களா வட்டமடித்துக் காண்பித்துவிட்டு, மறுப்பாய் அதற் வேகமாய் தலையசைத்தவன், ''அங்கு இல்லை.. தங்கம்... இங்கு...!'' என அவளது நெஞ்சைத் தொட்டு காட்டினான்.



அவள் விழிப்பதைக் கூர்ந்து பார்த்து விட்டு, ''இந்த கருவிழிகள் இப்படி அழகாக இமைகளை விரித்துப் பார்க்கும்போதுகூட எப்படி ரசிக்கும்படி இருக்கிறது தெரியுமா? இதில்கூட ஒருவித அழகு இருக்கிறதே...! உன்னை எப்படி அழகில்லை என ஒதுக்கிவிட முடியும் தங்கம்?'' என்றவன் மறுபடியும் தலையசைப்புடன், ''என்னைப் பொறுத்தவரை அழகு பற்றிய மதிப்பீட்டே தனி... உனக்குப் புரியும்படி விளக்குகிறேன்...'' என விவரிக்க ஆரம்பித்தான் அவன்.

''சிவப்புத் தோலும் முக லட்சணமாய் நாம் மதிப்பிடுகிற அழகு எல்லாம் ஒரு இருபதிலிருந்து நாற்பது வயதுக்குள் தான். அதற்கு மேல் கொஞ்சம் யோசித்துப் பார். யாரையாவது பார்த்து, அடடா... எவ்வளவு அழகாய் இருக்கிறார்கள்...? எனச் சொல்ல முடியுமா? வயது ஏற ஏற மாற்றங்களாகி... நடுத்தர வயதை எட்டும் போது யாருக்கும் 'அழகு' என்ற ஒன்றே இல்லாமல் போய் விடுமே? அதனால்தான் சொல்கிறேன். இந்த பளபளப்பு, பகட்டான அலங்காரம் எல்லாம் வெளித்தோற்றம் தான். ஒரு தற்காலிக மாயைதான்! உண்மையான 'அழகு' நம் மனதிலிருக்கும் அன்பிலும், நாம் அதை மற்றவர்களிடம் வெளிப்படுத்தும் விதத்திலும் தான் இருக்கிறது. இது இப்போது உனக்குப் புரியவில்லை என்றாலும் இன்னும் இரண்டொரு நாட்களில் புரிந்து கொள்வாய்...'' என முடித்தான் அவன்.

அவன் சொன்ன வார்த்தைகள் விளையாட்டல்ல. நிஜம்தான் என இரண்டு நாள் கழித்து அவள் அறிய வந்தபோது அதிர்ச்சியின் உச்சிக்கே சென்று விட்டாள் அவள்!



# 6

அன்றைய இரவு மறக்க முடியாத இரவாகத்தான் உதயரேகாவிற்கு அமைந்தது. அவளது வாழ்நாளிலே அவள் அவ்வளவு தூரம் சந்தோஷமடைந்ததில்லை. இந்த அளவு பூரிப்பு கொண்டதில்லை! அன்று அவ்வளவு இன்பமாய் சொர்க்கத்தில் மிதப்பது போல் தான் உணர்ந்தாள் அவள்.

தினகரன் அவளிடம் பேசிய வார்த்தைகளிலும் சரி, செய்த அணைப்பான செயல்களிலும் சரி, அன்பையும், இனிமையும் ஒரு சேரக் காட்டினான். அவளை ஏறக் குறைய திக்கு முக்காடத்தான் வைத்தான்.

இப்படி ஒருவன் அழகும், அன்பும், உயர்ந்த பண்பும் பொருந்தி இருக்க முடியுமா? அப்படி இருந்தாலும் அவன் அவளுக்கென மணாளனாய் வந்து அமைய முடியுமா? அப்படி ஒரு கொடுப்பினை... கொண்ட பாக்யசாலியா அவள்...? என அன்றைய இரவின் ஒவ்வொரு நொடியிலும் மெய்சிலிர்க்கத்தான் செய்தாள் அவள்.

அது மட்டுமில்லாமல் தினகரன் அவளிடம் நிறையப் பேசினான். அவளது விருப்பு, வெறுப்புகள், ஆசைகள் எல்லாவற்றையும் அக்கறையாய் கேட்டான்.



''சொல்லு... தங்கம்...! சொல்லு... தங்கம்...!'' என அவன் ஒவ்வொரு முறையும் அவன் விளிப்பது அவளுக்கே என்னவோ போல் தான் இருந்தது. கொஞ்ச வேண்டியது தான். அதற்காக ஒரேடியாய் இப்படியா? என சங்கோஜமாகவே நினைத்தாள் அவள்.

அதையும் அடக்க முடியாமல் அவள் வாய்விட்டு கேட்டும் விட்டாள். அதற்கும் வசீகரப் புன்னகையும் விளக்கமும் சொன்னான் அவன்.

அவள் குணம் தங்கமாம். அதை ஒவ்வொரு கணமும் அவளுக்கும் மற்றவர்களுக்கும் புரிய வைக்க அப்படிக் கூப்பிடுகிறானாம்!

அதிலும் அவளுக்கு ஒரு சந்தேகம் துளிர்த்தது.

அவன் அவளைப் பார்த்துப் பேசியது எல்லாம் ஒரு முப்பது... நாற்பது நாட்களுக்குள்தானே? அதற்குள் எப்படி அவள் குணத்தை அது தங்கமாகவே இருந்திருந் தாலும் அவன் அறிந்திருக்க முடியும்?

அதற்கும் சிறிதும் முகம் மாறாமல் விளக்கம் சொன்னான் அவன்.

அதாவது அவளுடன் பேசியதுதான் இந்த முப்பது நாட்கள். ஆனால் அதற்கு முன் ஒரு முப்பது நாட்கள் அவன் அவளுக்குத் தெரியாமல் அவள் வேலைக்குப் போகும் போது தினம் பஸ்ஸில் பின் தொடர்ந்தானாம்.

அவளது செய்கைகளை நடவடிக்கைகளை எல்லாம் கூர்ந்து கவனித்தானாம். பஸ்ஸில் வயதான பெரியவர், மூதாட்டிகளுக்கு தான் உட்கார்ந்திருக்கும் சீட்டைக் கொடுப்பது, பஸ்ஸின் கூட்ட நெரிசலில் ஏற

சிரமப்படும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு உதவு வது, யார் எது பேசினாலும் அதை காது கொடுத்துக் கேட்டுக் கொள்வது போல் புன்னகையுடன் தலையாட் டுவது, பஸ் ஸ்டாப் ஓரமாய் பஜாரில் குழந்தை குட்டி யுடன் பரிதாபமாய் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணிற்கு பக்கத்து ஹோட்டலில் இருந்து அவள் உணவுப் பொட்டலங்களையும், பிஸ்கட் பாக்கெட்டு களையும் வாங்கிக் கொடுத்தது... என அவளது ஒவ் வொரு செய்கையையும் உன்னிப்பாய் கவனித்ததை அவன் விளக்க... அதிர்ந்துதான் போனாள் அவள்!

அவன் சொன்னதெல்லாம் உண்மை தான். நடந்தவை கள்தான். அவ்வளவு தூரம் நம்மைப் பின் தொடர்ந்து வந்து கவனித்திருக்கிறானே...? என வியந்தாள்.

''இப்போது புரிகிறதா? என் தங்கத்தை... நான் தங்கமென்று கூப்பிடும் ரகசியம்?'' என்றபடி அவன் இறுக்கி முத்தமிட்டபோது அவனது நிஜமான அன்பை உணர்ந்து பரவசமடையத் தான் செய்தாள் அவள்.

இப்படியே அன்றைய இரவும் மறுநாளும் குதூகல மாய் ஓடியது. மூன்றாம் நாள் சம்பிரதாயப்படி புகுந்த வீடு கிளம்பி விட்டாள் அவள். ஒரு பெரிய வேன் பிடித்து எல்லோரும் கிளம்பினார்கள்.

தினகரனின் வீடு அவளது வீட்டிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரமுள்ள லயன்ஸ் காலனியில் அமைந் திருந்தது. விஸ்தாரமான பரப்பளவில் முன்புறம் புல் வெளியில் பின்புறம் தோட்டமுமான பங்களா டைப் வீடு. சுற்றிலும் மரங்கள் முன்புற கிரானைட் முகப்பு, வரிசையாய் ஏசி அறைகள், பெரிய ஹால் முன்புறம் கார் செட் என சகல வசதிகளையும் கொண்டிருந்தது.



தினகரன் எல்லோருக்கும் சுற்றிக்காட்டக்கூட வந்த அண்ணன், அண்ணி, அம்மா, தங்கை என எல்லோரும் வாய் பிளக்கத்தான் செய்தார்கள். ஏன் அவளுக்கே... அது அதிசயமாய் தன் தகுதிக்கு மீறிய ஒன்று என்றே தோன் றியது.

தினகரன் இவ்வளவு பெரிய பங்களாவில் எப்படி தனியாக வசிக்கிறான் என வியக்கவும் செய்தாள். அவனது சொந்தங்கள் என சொல்லப்படும் அக்காள்மார்கள் இருவரும் ஊரில் வேலைகள் இருப்பதாய் கூறி அவளை புகுந்த வீடு விட்ட கையோடு விடைபெற்றுக் கிளம்பி விட்டனர்.

அவள் வீட்டாரும் அன்று மாலை வரை அவளுடன் இருந்து விட்டு பிரியா விடை கொடுத்துக் கிளம்பினர். கண் கலங்க அவர்களுக்கு விடை கொடுத்தாள் அவள்!

முன்பு போல் இனி அவர்களை தினம் தினம் பார்க்க முடியாதே. அவர்களுடன் பேச முடியாதே என்ற உணர்வு வேதனையாய் அவளுள் எழுந்து அழுத்திற்று.

அதன் எதிரொலியாக பெருகிய கண்ணீர் துளிகளை படபடவென சிந்தவிட்டவள், தோளில் மென்மையாக அழுத்திய தினகரனின் ஆதரவுக் கரங்களைக் கண்டு தன்னைக் கட்டுப்படுத்தினாள்.

அன்றைய இரவும் தினகரனின் அன்புப் பிடிப்பில் அவளுக்கு இனிமையாகவே கழிந்தது.

மறுநாள் காலை தினகரன் சுறுசுறுப்பாய் வேலைக் கும் கிளம்பி விட்டான். அவளை பதினைந்து நாட்கள் லீவு முடிந்த பின் வேலைக்குச் செல்லவும் சம்மதம் தெரிவித்திருந்தான்.

அவனுக்குப் பிடித்த சமையல் அயிட்டங்களை கேட்டுத் தெரிந்து கொண்டு சுவைபட தயாரித்து பரி மாறினாள். மதிய லஞ்சுக்கான டிபன் கேரியருடன் கிளம்பினான் அவன்.

அவனது பளபள காரை ஷெட்டில் இருந்து வெளியே யிருந்து கம்பீரமாய் அவன் கிளம்பிப் போகும் அழகை கண்குளிரப் பார்த்தாள். சிறு குழந்தையாய் மாறி கார் மறையும் வரை டாடா காண்பித்து விடை கொடுத் தாள்.

அன்று மாலை சீக்கிரமே அலுவலகம் முடிந்து திரும்பியிருந்தான் தினகரன். அவளை மல்டி ப்ளெக்ஸ் தியேட்டர் ஒன்றுக்கு புதுப்படம் ஒன்றிற்கு அழைத்துச் சென்றான்.

பொதுவாக சினிமா பார்ப்பதில் அவ்வளவு நாட்ட மில்லாதவள், தோளோடு அவளை இறுகப் பற்றி அவன் படம் பார்த்த விதத்தில் இனிமையாகவே உணர்ந் தாள்.

மறுநாள் ஷாப்பிங், பூங்கா என சுற்றி வந்தார்கள்.

இப்படி ஐந்து நாட்கள் பொழுதும் சந்தோஷமும் பூரிப்புமாய் சென்றுவிட, ஆறாம் நாள்தான் அந்த பூகம்பம் மிகப் பெரிய இடியாய் அவள் தலையில் வெடித்தது.

அன்றும் வழக்கம் போல் தினகரன் அலுவலகம் சென்றுவிட வீட்டு வேலைகளை எல்லாம் முடித்து விட்டு சோபாவில் உட்கார்ந்தாள் அவள். பொழுது போகா மல் முன் டீப்பாயில் தினகரன் வாங்கிப் போட்டிருந்த வார மாத சஞ்சிகைகளை எடுத்து புரட்ட ஆரம்பித்தாள்.



அப்போதுதான் ஆட்டோ ஒன்று நிற்கும் ஓசையும் தொடர்ந்து காலிங் பெல் ஒலித்ததும் அவளை உணர் வுக்கு கொண்டு வந்தது.

'யாராக இருக்கும்?' என நினைத்தபடி எழுந்து முன் புறம் சென்று கதவைத் திறந்தவள் திடுக்கிடவே செய் தாள்.

வெளியே இருபது இருபத்திரண்டு வயது மதிக்கத் தக்க பெண் ஒருத்தி கையில் பெரிய சூட்கேஸ் ஒன்றைப் பிடித்தபடி,

அவள் கதவைத் திறந்ததும் தான் தாமதம் 'விடு விடு'வென அவள் பாட்டுக்கு உள்ளே நுழைந்தாள்.

நுழைந்து உரிமையாய் முன்புற இருக்கைகளில் தனது சூட்கேஸையும் உடைமைகளையும் வைத்துவிட்டு நிதானமாய் திரும்பி அவளைப் பார்த்தாள்.

''ஓ... நீ... தான்... அந்த புது மகாராணியா...? எப்படி யம்மா இருக்கிறாய்? கல்யாணம் எல்லாம் சிறப்பாய் சீர் செனத்தியோடு முடிந்ததா? ஹனிமூன் கிளம்பவில் லையா...? எப்போது கிளம்ப உத்தேசம்?'' என கேலியும் கிண்டலுமாய் கேட்டபடி அவள் சோபாவில் அதே வேகத்தில் உட்கார்ந்தவள் கால் மேல் கால் போட்டபடி உதயரேகாவை அலட்சியமாய்ப் பார்த்தாள்.

''என்ன ஒரேயடியாய் விழிக்கிறாய்? நான் யாரென்று தெரியுமா?'' என்றாள்.

''தெரியவில்லை... யார்... யார்... நீங்கள்?'' கேட்ட உதயரேகாவின் குரல் அவளையறியாமல் நடுங்கியது.

''நான் தான் தாரா... தினகரனின் முதல் மனைவி!'' என்றாள் அவள் அதிர்வாக!



# 7

சற்று நேரம் உதயரேகாவிற்கு ஒன்றும் ஓடவில்லை. தன் காதுகளில் சரியாக எதுவும் விழுந்திருக்காதோ? என்று தான் குழம்பினாள்.

ஆனால் வந்தவள் சொடுக்கிட்டு, ''என்ன விழிக் கிறாய்? நான் சொன்னது உனக்குப் புரியவில்லை? நான் தான் தாரா. தினகரனின் முதல் மனைவி...!'' என்றாள் தெளிவாய் அழுத்தந்திருத்தமான உச்சரிப்பில்.

இடி எங்கோ தூரத்தில் விழும் சத்தத்தைத் தான் இதுவரை அவள் கேட்டிருக்கிறாள். ஆனால் அப்படி அவள் தலையிலே அது விழுவதை இன்றுதான் அவள் உணர்ந்தாள்.

''தாரா...!''

''தினகரனின் முதல் மனைவி...!''

'என்ன உளறல் இது?' என்று கேட்கத்தான் அவளது குரல் எழப் போனது. ஆனால் அதற்குள் அவள் தாரா கைவிரல்களை மறுபடி சுண்டி சுவரின் வலது கோடியில் இருந்த அந்த புகைப்படத்தை காட்டினாள்.

நிமிர்ந்து பார்த்த உதயரேகாவிற்கு மூச்சே நின்று விடும் போல் இருந்தது.



அவள் சொன்னது உண்மைதான்...!

மணக்கோலத்தில் அந்தப் பெண்ணும் தினகரனும் சிரித்தபடி! அந்த போட்டோ அழகான சட்டங்களுடன் ஆணியில் தொங்கிக் கொண்டிருந்தது.

அதிர்விலிருந்து மீள முடியாமல், ''யாரும் எனக்குச் சொல்லவில்லையே?'' என்றாள் அப்பாவியாக.

''சொல்லாவிட்டால் என்ன? மூன்று நாட்களாய் இந்த வீட்டில்தானே நடமாடுகிறாய்? நிமிர்ந்து இந்த போட் டோவை ஒரு தடவை கூடவா பார்க்கவில்லை?''

அவள் கேட்பது நியாயமான கேள்விதான்! ஆனால் அவள் மணப்பெண்ணாய் இந்த வீட்டில் காலடி வைத்ததில் இருந்து தினகரனைத் தானே ஒவ்வொரு நொடியும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண் டிருக்கிறாள்... ரசித்துக் கொண்டிருக்கிறாள்... பின் அவளது பார்வையில் வேறு எது விழ முடியும்?

மறுபடியும் திகைத்து விழித்தவளை எரிச்சலாய் பார்த்தவாறு கொண்டு வந்திருந்த சூட்கேஸுடன் விறு விறுவென வீட்டினுள் நுழைந்து மாடிப்படிக்கு நேர் கீழாய் இருந்த ரூமின் முன் போய் நின்றாள்.

கையிலிருந்த சிறிய பர்ஸைத் திறந்து சாவியை எடுத்து கதவைத் திறந்தாள். திடுக்கிட்டு பார்த்த உதயரேகாவிற்கு முதல் நாள் வீட்டில் காலடியெடுத்து வைத்த அன்று, தினகரன் வீட்டைச் சுற்றிக் காண்பித்த போது, அந்த பூட்டிய அறையைக் காட்டி, 'பிறகு காட்டுகிறேன்...' என்று சொன்னதும் ஞாபகத்திற்கு வந்தது.

அப்படியானால் தெரிந்தே அவளை ஏமாற்றி இருக்கிறானா தினகரன்?

அவள் அதிர்ந்து நிற்க அதற்குள் பெட்டியைக் கொண்டு போய் அந்த ரூமில் வைத்துவிட்டு வெளிவந்த தாரா, ''இதுதான் எனது அறை. ஆமாம் உனக்கு எங்கு... கீழா... அல்லது மாடியிலா?'' என்றாள்.

தனது உடைமைகளை எல்லாம் வைத்திருக்கும் அந்த இடது கோடி அறையை பரிதாபமாய் காட்டினாள் உதயரேகா.

தாரா அவள் முன் வந்து கைகட்டி அப்போதுதான் நன்றாகப் பார்ப்பது போல் மேலும் கீழும் உற்று அளவெடுத்தாள்.

பின் தனது புருவங்களை உயர்த்தி முகத்தை ஒருவிதமாய் சுருக்கியபடி, ''ஆமாம். உன்னிடம் அழகுமில்லை. நிறமுமில்லை. எதைக் கொண்டு அந்த ஆளை மயக்கினாய்?'' என்றாள்.

உதயரேகா பேசாமல் அவளையே முறைத்தாள்.

''ரொம்பவும் முறைக்காதே. என்னால் உனக்கு எந்த வித பிரச்சனையும் இருக்காது. என் சம்மதத்துடன் தான் உன்னை இரண்டாம் தாரமாய் தினகரன் மணந்திருக்கிறார்...'' என்றாள்.

இரண்டாம் தாரம்...!

மறுபடியும் அந்தச் சொல் தீயாய் அவள் உள்ளுக்குள் நுழைந்து நெஞ்சைப் பொசுக்கி எடுத்தது. குமுறிய தணலை அடக்கிக் கொண்டு, ''எதற்காக...? எதற்காக இந்த இரண்டாம் தாரம்?'' என்றாள்.



''அதை நீ கேட்க வேண்டியது என்னிடம் அல்ல. போய் அவரிடம் கேள்...!'' என்றாள் தாரா விட்டேற்றியாக.

பின் ஏதோ நினைத்தவளாய் அவள் பக்கம் திரும்பியவள், ''ஒன்றும் தெரியாது என்கிறாய்... ஒரு மாதத்திற்கு முன் இதோ இந்த ஹாலில் இந்த சோபாவில் வைத்து தானே உனது கல்யாணப் பேச்சு நடந்தது? அது... யார்... உன் வீட்டிலிருந்து நெட்டையாய் ஒருவர்... உன் அண்ணன்... அவர் தானே வந்து எல்லா சம்பந்தப் பேச்சும் பேசினார்? அப்போது நானும் இங்கு தானே இருந்தேன்? தினகரனும் என்னை உன் அண்ணனுக்கு இவள் என் முதல் மனைவி என்றுகூட அறிமுகப்படுத்தினாரே...?'' என அவள் தாரா சொல்ல, மறுபடியும் தலையில் இடிதான் விழுந்தது உதயரேகாவிற்கு.

அண்ணனுக்குத் தெரியுமா?

இரண்டாம் தாரமாய் அவளை கட்டிக் கொடுக்கத்தான் சம்பந்தம் பேசினார்களா?

அவளிடம் ஒரு வார்த்தை சொல்லவில்லை?

அண்ணனுக்குத் தெரிந்தால் கூடவே அண்ணிக்கு... அப்படியே அம்மா, தங்கைக்கு கூட தெரிந்திருக்க வாய்ப்பிருக்கிறதே?

தெரிந்தும் எல்லோரும் மறைத்து விட்டார்களா?

ஏன்...? எதனால்...!

கட்டிக் கொள்ளப் போவது அவள் தானே? அவளிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் கொள்ளாமல் இப்படி இரண்டாம் தாரமாய் ஒருவருக்கு கட்டி வைக்க நினைப்பார்களா?

அப்படி ஒரு துரோகத்தை அவர்களால் அவளுக்கு செய்யத்தான் முடியுமா?

நினைத்துப் பார்த்தவள், ''நிச்சயமாய் முடியாது...'' என்ற முடிவுக்குத் தான் வந்தாள். 'இந்த தாரா பொய் சொல்கிறாள். அவள் வீட்டில் உள்ளவர்களுக்கு அவளைப் பிடிக்காதுதான். ஆனால் அதற்காக அவளுக்கு இவ்வளவு தூரம் தீங்கு செய்ய முயல்வார்களா? சே...! சே...! இருக்காது...!''

அவர்கள் மட்டும் என்ன... சதா அவளைத் தலையில் தூக்கி வைத்துக் கொள்ளாத குறையாய் ''தங்கம்... தங்கம்...'' என கொஞ்சும் தினகரன்கூட அவளுக்குத் துரோகம் செய்வானா? இல்லை துரோகம் செய்யத்தான் நினைப்பானா?

நிச்சயமாய் இருக்காது!

மனதுள் நினைத்தவளாய் அவளை நோக்கித் திரும்பி, ''நீங்கள் சொல்வதை நான் நம்பமாட்டேன்...!'' என்றாள்.

அவள் தாரா சிரித்தபடி மறுபடியும் சுவரில் தொங்கிய போட்டோவைக் காட்டினாள்.

''இதைப் பார்த்த பிறகுமா உனக்கு நம்பிக்கை வரவில்லை? அவ்வளவு பெரிய முட்டாளா நீ...?''

அவளது கேள்வி சுரீரென உரைத்தது.

'ஆமாம்! அத்தாட்சியாய் வீட்டில் தொங்கிக் கொண்டிருக்கும் போட்டோவைக் காட்டுகிறாளே!

மணக்கோலத்தில் இருக்கும் இவள் பக்கத்தில் ஈ-யென இளித்தபடி இருப்பது சாட்சாத் தினகரன்தானே?



ஒருவேளை அதுகூட போட்டோ ட்ரிக் ஏதாவது இருக்குமோ?' என்றே மறுபடியும் சந்தேகம் துளிர்த்தது.

அவள் முகம் போன போக்கை வைத்து அவளது சிந்தனையை யூகித்த தாரா படபடவென கைகளைத் தட்டினாள்.

''சரிதான்! உன்னை எல்லோரும் நன்றாகத்தான் ஏமாற்றியிருக்கிறார்கள்.

'உன் முகத்தைப் பார்த்தாலே ஒரு இளிச்சவாயத்தனம் தெரியத்தான் செய்கிறது. நீ ஒன்று செய்யேன். நேராக உன் வீட்டிற்கோ, இல்லை தினகரனின் அலுவலகத்திற்கோ சென்று விஷயத்தைக் கேள். எல்லா உண்மையும் உனக்குத் தெரிந்துவிடும் கிளம்புகிறாயா?''

எரிச்சல்படுத்துவதுபோல் கைகளை ஆட்டி விரட்டுவது போல் கேட்க, நிஜமாகவே எரிச்சலாகி அங்கிருந்து கிளம்பிவிட்டாள் உதயரேகா.

நேராக தெருமுனை வந்தது. ஆட்டோ பிடித்தாள். வீடு நோக்கி செல்லச் சொன்னாள். அரை மணி நேரத்தில் அவளது வீடு வந்து விட்டது.

உள்ளே அவளது அண்ணன் தனது அலுவலகத்திற்குக் கிளம்பத் தயாராகிக் கொண்டிருக்க... பின்னால் அண்ணியும் சற்றுத் தள்ளி அம்மாவும்...

புயலாய் உள்ளே நுழைந்தவளுக்கு மூச்சு தான் வாங்கியது.

ஆசுவாசப்படுத்திக் கொண்டு விஷயத்தைக் கேட்ட போது, சர்வ சாதாரணமாய் ஒரு பதில் வந்தது.

அவள் தலையில் மறுபடி ஒரு இடி விழுந்தது.



# 8

உதயரேகாவால் கொஞ்சமும் காதுகளை நம்ப முடியவில்லை!

''உண்மைதான்! அதனால் என்ன?'' என்றான் அண்ணன் சர்வ சாதாரணமாய்.

''என்ன... என்னவா...? இரண்டாம்... தாரம்... அவருக்கு ஏற்கனவே ஒரு மனைவி வேறு... என்ன சொல்கிறாய்...?''

அவள் துடித்துக் கேட்க அதற்கும் அசால்டாய், ''அதற்கென்ன... ஊர் உலகத்தில் நடக்காத விஷயமா? அங்கங்கே அவ்வப்போது நடந்து கொண்டிருக்கிற விஷயம்தான்... மேலும் முக்கியமாக...'' என நிறுத்தியபடி திரும்பி அம்மாவைப் பார்த்தான்.

''என்னை ஏன் பார்க்கிறாய்...? அதையும் நீயே சொல்லிவிடு...'' என்றாள் பெற்றவள்.

''உனக்கு வந்த வரன்கள் எல்லாம் தட்டிப் போகிறது. நீ ஒரு போணியாகாத கேஸ் போல் ஆகிக் கொண்டு வந்தாய். அதான் இப்படியொரு நல்ல வரன் வந்ததும்... நாங்கள் கொஞ்சமும் யோசிக்கவில்லை... தலையாட்டி விட்டோம்...''

அம்மாவை சேர்த்துக் கொண்டு அவன் பேசுவதைக் கண்டு திரும்பி அம்மாவை முறைத்தாள் அவள்.



''அம்மா, நீயும் இதற்கு உடந்தையா?'' என்றாள்.

''பிறகு தான் வேறு என்னடி செய்ய முடியும்? உனக்கோ வயது ஏறிக்கொண்டு போகிறது. வந்த வரன்கள் எல்லாம் வேண்டாம். பிடிக்கவில்லை என்று ஒரேடியாய் மறுத்துப் போகிறார்கள். அதான் இப்படி ஒரு முடிவிற்கு வந்து சம்மதிக்க ஆரம்பித்தேன். ஆனாலும் உன்னை ஒன்றும் பாழும் கிணற்றில் பிடித்து தள்ளிவிடவில்லையே...? நல்ல இடத்தில் தானே பார்த்து கட்டிக் கொடுத்திருக்கிறோம்...''

''ஆனால்... அது... அது இரண்டாம் தாரமாய்... அல்லவா?''

''இரண்டாம் தாரம் தான்! ஆனால் அதை விட்டால் வேறு வழி இல்லையே? நீ நெற்குதிர் போல் இங்கேயே அல்லவா உட்கார்ந்திருப்பாய்... உனக்குப் பின் தங்கை ஒருத்தி வேறு இருக்கிறாள். பின் அவளுக்கு எப்போது பண்ணுவது?''

''என்ன சொல்கிறீர்கள்...? தங்கை... ரமாவையா...? அவள் ப்ளஸ்டூ தானே படிக்கிறாள்... அவளுக்கு இன்னும் வயதிருக்கிறதே...?''

''ஆனால் உனக்கு வயது ஏறி விடுகிறதே...?'' என்றாள் பெற்றவள் பதிலுக்கு.

''அப்படியானால் விஷயத்தை ஏன் என்னிடம் மறைத்தீர்கள்? எதற்காக உண்மையை என்னிடம் சொல்லவில்லை? அதைச் சொல்லுங்கள்...!'' என்றாள் ரேகா நேரிடையாய் பிடிப்பது போல்.

அம்மா திரும்பி அண்ணனைப் பார்த்தாள்.

அண்ணன் ருத்ரனோ, கொஞ்சமும் சட்டை செய்யாமல் தோள்களைக் குலுக்கினான். ''வேறென்ன? உண்மையைச் சொன்னால் வேண்டாம் என குதித்திருப்பாய். கல்யாணம் நடந்திருக்காது. அதான் உன்னிடம் மறைத்தோம்...'' என்றான் சர்வ சாதாரணமாய்.

அவளுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. நாக்கில் நரம்பில்லாமல் எப்படிப் பேசுகிறான்? இதே போல் இவனுக்கு சொல்லாமல் கொள்ளாமல் செய்திருந்தால் சும்மா விடுவானா?

''இது அநியாயம்...! கூடப் பிறந்தவளுக்கு இப்படியா ஒரு துரோகத்தைச் செய்வது?''

''முட்டாள் மாதிரி பேசாதே!''

ருத்ரன் சிரித்தான். ''இதுவா துரோகம்...? உனக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்திருக்கிறோம். அதற்கு நீ தான் நன்றி சொல்ல வேண்டும்...'' என்றவன், அவள் திரும்பவும் முறைப்பதைப் பார்த்து, ''உன்னை ஒன்றும் பிச்சைக்காரனுக்கு கட்டிக் கொடுக்கவில்லை. அந்தத் தினகரன் பெரும் பணக்காரன். பரம்பரை கோடீஸ்வரன். கார், பங்களா என ஒரு வசதியான வாழ்க்கை உனக்கு அங்கு காத்திருக்கிறது. அதை நினைத்து சந்தோஷப்படு...'' என்றான்.

''எல்லாம் சரி. அங்கு முதல் மனைவி என்ற பெயரில் ஒருத்தி குத்துக் கல்லாட்டம் வந்து உட்கார்ந்திருக்கிறாளே... அதற்கு என்ன செய்ய...?''

அதற்கும் அண்ணனிடம் இருந்து சர்வ சாதாரணமாய் பதில் வந்தது.



''சகித்துக் கொள்...!'' என்றான் அவன். ''அவள் பாட்டுக்கு வீட்டின் ஒரு பக்கமாய் நடமாடிவிட்டுப் போகிறாள். மேலும் அவளுக்கு தினகரனை சுத்தமாய் பிடிக்காது. தினகரனுக்கும் அவளை சுத்தமாய் பிடிக்காது. அதனால் நீ எந்தக் கவலையுமில்லாமல் தினகரனுடன் சந்தோஷமாய் ஒரு வாழ்க்கையைத் தொடங்கலாம். புரிந்து கொள்!''

அதற்கு மேல் பேசி விளக்கம் சொல்ல விரும்பாதவன் போல் பேசி முடித்துவிட்டான் ருத்ரன்.

பக்கத்தில் அம்மா கற்பகம் நடந்து வந்து அவள் தோளைப் பிடித்தாள். ''இதோ பார் ரேகா. உனது மாப்பிள்ளை பெரிய பணக்காரர். பெரிய இடம். நம்ம நடுத்தர வாழ்க்கைக்கு அந்த வசதியான வாழ்க்கை சொர்க்கம் போலத்தான் இருக்கும். அதனால வீணா உன் மனசைப் போட்டுக் குழப்பாமல், அவரோட ஒரு நல்ல வாழ்க்கையைத் தொடங்கு...! நாங்க செஞ்சது எல்லாம் உன்னோட நன்மைக்குத் தான். அதையும் புரிஞ்சுக்கோ!''

அதற்குப் பின் அண்ணி, தங்கை என ஆள் ஆளுக்கு என்னென்னமோ பேசினார்கள். எப்படியெல்லாமோ அவளுக்கு உபதேசம் செய்தார்கள்.

இனி இவர்களிடம் பேசிப் பிரயோஜனமில்லை என அங்கிருந்து கிளம்பிவிட்டாள் உதயரேகா. இவர்களைப் பொறுத்தவரையில் தினகரன் கோடீஸ்வரன். அதனால் இரண்டாம் தாரமாய் என்ன... மூன்றாம் தாரமாய் இருந்தால் கூட... அவள் குடும்பம் நடத்த வேண்டியது தானே என்பார்கள்.

உதயரேகா அங்கிருந்து நேராய் தினகரன் அலுவலகத்திற்குத்தான் கிளம்பினாள்.

பிரபல மல்டி நேஷனல் கம்பெனி அது. அதில் சீனியர் மேனேஜர் தினகரன். இருபது நிமிட ஆட்டோ பயணத்திற்குப் பின் அதை அடைந்து ரிசப்ஷனை நெருங்கினாள்.

ரிசப்ஷன் பெண் நிமிர்ந்து என்ன... என்று கேட்ட போது, 'மனைவி' என்று சொல்ல விரும்பாமல் தனது பெயரை மட்டும் சொல்லிப் பார்க்க விரும்புவதாய் தெரிவிக்கச் சொன்னாள்.

அடுத்த ஐந்து பத்து நொடிகளில் பணியாள் ஒருவன் அழைத்துப் போக, கண்ணாடிக் கதவைத் திறந்து அவன் காட்டிய அந்தப் பெரிய அறையில் நுழைந்தாள்.

உள்ளே குஷன் சேரில் சாய்வாய் இருந்த தினகரன் அவளைப் பார்த்ததும் ஆவலாய் எழுந்து வந்து விட்டான்.

''வா... தங்கம்...! நானே உன்னைக் கூட்டி வந்து இங்கு ஆபீஸை எல்லாம் காட்ட வேண்டும் என்று நினைத்தேன். நீயே வந்து விட்டாயே...!'' என்றபடி முகம் மலர வரவேற்றவனை கூர்ந்துதான் பார்த்தாள் அவள்.

தங்கமாம்! கொஞ்சுகிறானாம். இதைத்தான் போலித்தனம், வேஷம் என்றெல்லாம் சொல்கிறார்களோ!

அவள் பேசாமல் அவனை முறைப்பது போலவே பார்த்தாள்.

''என்ன தங்கம்? என்ன விஷயம்?'' என பதைப்பானான் அவன்.

''முதலில் இந்த தங்கம், கிங்கம் என்று கொஞ்சுவதை எல்லாம் நிறுத்துகிறீர்களா? உங்கள் வேஷம் கலைந்து விட்டது!'' என்றாள் கோபமாய்.



''என்ன சொல்கிறாய் தங்கம்? வேஷமா...?''

''வீட்டுக்கு உங்கள் முதல் மனைவி தாரா வந்துவிட்டாள்...'' உறுதியான குரலில் சொல்லியபடி அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

எவ்வித அதிர்வும் இல்லாமல் தினகரன் லேசாக முகம் மாறி, ''ஓ... அதுவா விஷயம்? ஒரு வாரம் கழித்து வருவதாகத்தானே சொல்லிச் சென்றாள்... அதற்குள் வந்துவிட்டாளா...?'' என்றவன் தொடர்ந்து அதே குரலில், ''அதனால் என்ன தங்கம்? அவள் பாட்டுக்கு அவள் ரூமில் அடைந்து கிடப்பாள். நீ.... உன் வேலையைப் பார் தங்கம். உன் விஷயத்தில் அவள் கொஞ்சமும் தலையிட மாட்டாள். தலையிடக் கூடாது என்று கண்டிப்பாய் அவளிடம் சொல்லியிருக்கிறேன்...'' என முடித்தான்.

அந்த பதிலில் மிகவும் எரிச்சலானவளாய், ''ஆனால் அப்படி ஒருத்தி உங்கள் முதல் மனைவி என்று ஏன் என்னிடம் சொல்லவில்லை. ஏன் மறைத்தீர்கள்?'' என்றாள் குரல் உயர.

தினகரனின் முகம் பெரும் ஆச்சரியத்திற்குப் போனது. டக்கென அவள் பக்கம் வந்து அவளது தோள்களைப் பிடித்தான்.

''என்ன சொல்கிறாய் தங்கம்? உனக்கு அதை யாரும் சொல்லவில்லையா? உன் அண்ணனிடம் கூட...'' என குரல் கம்ம அவன் சொன்னபோது இடைவெட்டியவள், ''நீங்கள் என்னிடம் சொல்லவில்லையே? ஏன்...? அதைச் சொல்லுங்கள்...!'' என்றாள் கறாராய்.

அதற்கு பதில் சொல்ல முடியாமல் திகைப்பில் வாயடைத்தவனாய் அப்படியே நின்றுவிட்டான் தினகரன்.



# 9

தினகரன் அவளை அங்கேயே இருக்கை ஒன்றில் உட்கார வைத்து நிறைய விஷயங்களை விளக்கினான்.

அவனுக்கும் தாராவிற்கும் சரியாக ஆறு மாதங்களுக்கு முன் திருமணம் நடந்ததாம். தாரா நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த பள்ளி ஆசிரியர் ஒருவரின் மகளாம். அவள் அழகாய் இருக்கும் ஒரே காரணத்திற்காக, சீர்வரிசைகள் எல்லாம் பெரிதாய் எதிர்பார்க்காமல் இருதரப்பும் பேசி கல்யாணம் முடிந்ததாம்.

கல்யாணம் முடிந்த அன்றைய இரவிலிருந்தே தாராவிற்கும் அவனுக்கும் பிரச்சனை ஆகிவிட்டதாம். அவளுக்கு அவனை சுத்தமாய் பிடிக்கவில்லையாம்.

அவனை மட்டும் என்ன? நடந்த கல்யாணமே பிடிக்கவில்லையாம். அவளது சம்மதம் பெறாமலே அவளது கண்டிப்பான தந்தை அவளுக்கு கல்யாணம் பண்ணி வைத்துவிட்டாராம். அவளுக்கு நடந்தது கிட்டத்தட்ட கட்டாயத் திருமணம் தானாம்!

அதனாலே அவளுக்கு தினகரனையும், பிடிக்காமல் போயிற்றாம். அவனுடன் வாழத் தயாராயில்லையாம்... என்றெல்லாம் முதலிரவன்றே தாரா புலம்பிவிட



தினகரன் தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டானாம்.

அதற்குப் பின் மறுநாள் தாராவின் தந்தையிடம் தினகரன் விஷயத்தைக் கொண்டு போக... அவர் தாராவை அவன் முன்னிலையிலேயே கண்டித்தாராம். அப்படியும் பயனில்லையாம். இரண்டு நாள் கழித்து மறுபடியும் தாரா சண்டையிட்டாளாம். எதற்கெடுத்தாலும் எரிந்து விழுந்தாளாம்.

அவனுடன் படுக்க விரும்பாமல் தனக்காக ஒதுக்கப்பட்ட அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொள்வாளாம். தினகரனும் சரி... கொஞ்சம் விட்டுப் பிடிப்போம். சரியாகிவிடும் என பொறுமையாய் இருந்தானாம்.

ஆனால் தாரா மனம் மாறுகிற மாதிரியே இல்லையாம். நாளாக நாளாக அவன் மேல் கோபத்தையும் எரிச்சலையும் கூட்டி சண்டையிடுவதிலேயே குறியாயிருக்க... தினகரன் ஒரு முடிவெடுத்தது போல் அவளுடன் பேசுவதையே நிறுத்தினான்.

அதற்கும் தாரா அசரவில்லையாம். அவள் பாட்டுக்கு மூன்று வேளையும் தின்றுவிட்டு தூங்கி எழுந்தாளாம். வீட்டு வேலைகளை சமையல்காரம்மாள் பார்த்துக் கொண்டதால் அவள் எந்த வேலையும் செய்வதில்லையாம். இப்படியே இரண்டு மாதம் ஓடியதாம். அவள் திருந்துவாள் என்ற நம்பிக்கையே தினகரனுக்கு போய் விட, திரும்பவும் அவள் தந்தையைச் சந்தித்துப் பேசினானாம்.

தாராவிற்கு காதல் போன்ற சமாச்சாரங்கள் ஏதும் உண்டா? அதனால் தான் இப்படியெல்லாம் நடந்து

கொள்கிறாளா...? என்றெல்லாம் கேட்டுப் பார்த்தானாம். அப்படியெல்லாம் ஒன்றுமில்லை என்பதையும் தெரிந்து கொண்டானாம்.

தாராவின் தந்தையும் அதற்குப் பின் எவ்வளவோ கண்டித்தும், புத்திமதி சொல்லியும் பார்த்திருக்கிறார். ஆனால் தாரா கொஞ்சமும் தனது தினகரனைப் பிடிக்காத சுபாவத்தை மாற்றிக் கொள்ளவில்லையாம்.

கடைசியில் பொறுத்துப் பொறுத்து பார்த்த தினகரன் அவளை 'டைவர்ஸ்' செய்து விடுவதுதான் நல்லது என்ற முடிவிற்கு வந்து, அவள் தந்தையைக் கூப்பிட்டு சொல்லிவிட்டானாம்.

ஆனால் அவரோ கையெடுத்து கெஞ்சி காலிலே விழுந்து விட்டாராம். இவளுக்குப் பின் கட்டிக் கொடுக்க வேண்டிய இரண்டு சகோதரிகள் இருக்கிறார்கள். இவள் மட்டும் வாழாவெட்டியாய் திரும்ப வீட்டுக்கே வந்து விட்டால் பெரும் தலைகுனிவு ஏற்படும். மேலும் அந்த இரண்டு மகள்களின் வாழ்க்கையும் பாழ்பட்டு விடும். நடுத்தர வர்க்கத்து தந்தையான அவரால் இதையெல லாம் தாங்கிக் கொள்ள முடியாது. பின் குடும்பத்தோடு தூக்கில் தான் தொங்க வேண்டியிருக்கும் என்றெல்லாம் மன்றாட... தினகரனும் டைவர்ஸ் பண்ணும் நினைப்பை விட்டு விட்டு... அவரிடமே யோசனை கேட்க... அவர் தான் தாரா சம்மதத்துடன் இன்னொரு கல்யாணம் பண்ணும் யோசனையைச் சொல்லியிருக்கிறார்.

முதலில் தினகரன் அதை மறுத்தாலும், பின் தனக்கென ஒரு வாழ்க்கை வேண்டுமே? என்ற காரணத்தினால் சம்மதித்தானாம். அதனாலே இம்முறை அவனே



விஷயத்தில் இறங்கி கல்யாணத் தரகர்களுடன் தொடர்பு கொண்டு பெண் தேடினானாம்.

அப்படித் தேடுகையில் தான் தரகர் மூலம் அவளது போட்டோவும், அவளைப் பற்றிய விபரமும் அவன் கைக்கு வர... தற்செயலாய் மறுநாள் நடந்து வந்த போது பஸ் ஸ்டாப் ஒன்றில் அவள் வேலைக்குச் செல்வதை பார்த்துவிட... அவளைப் பற்றி அறியும் நோக்கத்தில் பின் தொடர ஆரம்பித்தானாம் அவன்.

அதன்பின் தான் அவளைப் பிடித்துப் போய் அவள் வீட்டில் வந்து பேசி கல்யாண ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தானாம். தாராவும், ''அதற்கென்ன? தாராளமாக கட்டிக் கொள்ளுங்கள். ஆனால் நானும் இந்த வீட்டில் தான் இருப்பேன்'' என்று சொல்லிவிட்டாளாம்.

பேச்சை நிறுத்திய தினகரன், ''நான் என் முதல் கல்யாணம் பற்றி உன்னிடம் முன்பு சொல்லாதது தவறு தான். அதற்காக மன்னிப்பும் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் நான் எந்த விஷயத்தையும் மறைக்கவும் இல்லை. உன்னிடம் வேஷம் போடவும் இல்லை. உன் அண்ணனிடம் தாரா பற்றி எல்லா விபரங்களையும் விரிவாய்ச் சொல்லி விளக்கியிருந்தேனே... அவர்கள் உன்னிடம் சொல்லவில்லை...?'' எனறான்.

''சொல்லவில்லை... வேண்டுமென்றே சொல்லாமல் மறைத்து விட்டார்கள்...'' என்றாள் இறுக்கமாக.

''ஏன்... ஏன் சொல்லவில்லை தங்கம்?''

அவன் அக்கறையாய் கேட்பது கண்டு மீண்டும் எரிச்சலானவள், ''எல்லோரும் உங்களைப் போல தான்!

அவர்களாகவே ஒன்றை நினைத்துக் கொண்டு அவர்களாகவே முடிவு எடுத்துக் கொண்டு சொல்லாமல் விட்டு விட்டார்கள்...''

தினகரன் மறுபடியும் முகம் மாறி கெஞ்சல் பார்வை பார்த்தவன், ''ஐ... ஆம்... ஸாரி... நான் திரும்பவும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்... ஆனால் உன்னை சிறிதளவும் நான் ஏமாற்ற நினைக்கவில்லை. உன் அண்ணனிடம் சொல்லி இருந்ததில் இருந்தே நீ அதைப் புரிந்து கொள்ளலாம். என்ன இந்த தாரா விஷயத்தை உன்னிடம் அன்று சொல்ல ஒருவித சங்கடமாய், சங்கோஜமாய் இருந்தது. மற்றபடி என் மனதில் எந்தவித ஒளிவு, மறைவும் கிடையாது. எனக்கு அது பிடிக்கவும் பிடிக்காது!'' என்றபடி தனது நீண்ட உரையை முடித்தான்.

பின் கைகளை கட்டியபடி அவளையே பார்த்தான்.

ஓரிரு நிமிடம் அப்படியே சிலை போல் அமைதியாக இருந்துவிட்டு அவனிடம் எந்தவித பதிலும் சொல்லாமல் அங்கிருந்து கிளம்பினாள் அவள்.



# 10

தினகரன் அலுவலகத்தை விட்டு வீராப்பு கொண்டவள் போல் விறுவிறுவென வெளிவந்து விட்டாள் உதயரேகா.



வெளியே சாலைக்கு வந்த போதுதான், எங்கு போக? இனி என்ன செய்ய? என்ற நினைப்பு ஓடியது.

காற்றில் அலையடிப்பது போல் பரந்த நீண்ட கூந்தலை ஒதுக்கியபடி யோசித்தாள்.

கோபமாய் அவள் வீட்டிற்கு பிறந்த வீட்டிற்குச் சென்று விடலாம்.

ஆனால் அங்கு... அப்படி என்ன நடந்து விடப் போகிறது?

அண்ணன் ருத்ரன் அதே பேச்சு பேசுவான். அம்மா அவனுக்கு ஒத்து ஊதி அதே குத்தலைத் தொடர்வாள். பின் பழையபடி வழக்கமான பேச்சுக்கள். ஏச்சுக்கள் என நரகமாகிவிடும்!

பின் வேறு எங்கு செல்ல?

பேசாமல் ஏதாவது லேடீஸ் ஹாஸ்டலில் போய் தங்கிக் கொள்ளலாம். வேலை பார்ப்பதால் பணத்துக்கும் பிரச்சினையில்லை. ஆனால்?

கல்யாணம் ஆன ஒரே வாரத்தில் திருமண பந்தம் முறிந்து விட்டதா? அப்படி என்ன பிரச்சினை...? என ஆளு ஆளுக்கு கேட்க ஆரம்பித்து விடுவார்கள்.

பின் பதில் சொல்ல முடியாது!

அப்படியே பதில் சொன்னாலும் 'இரண்டாம் தாரம்' என்கிற விஷயத்தை நாமே ஊர் முழுக்க கொட்டடிபபது போல் ஆகிவிடும்!

வேறு என்ன செய்ய? என்னதான் வழி?

திடும்மென தினகரன் முகம் புன்னகையுடன் ஞாபகத்திற்கு வந்தது, ''நான் அது பற்றி உன்னிடம் சொல்லாதது

தவறுதான். ஆனால் பார். நான் விஷயத்தை மறைக்க வில்லை. முறைப்படி உன் வீட்டுப் பெரியவர்களிடம், உன் அண்ணனிடம் தெரிவித்து இருக்கிறேன். அவர்கள் உன்னிடம் இதைச் சொல்லாமல் மறைத்து விடுவார்கள் என நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை...'' என தெளிவாய் பேசியது அவளை மீண்டும் யோசிக்க வைத்தது.

அவன் சொல்வது உண்மைதானே?

தினகரன் அவனிடம் சொல்லவில்லை என்றாலும், அவன் அண்ணனிடம் எல்லா விஷயத்தையும் சொல்லித்தானே பெண் கேட்டிருக்கிறான்? அதற்கு இந்த அண்ணனும் தலையாட்டி சம்மதிக்கத்தானே செய்திருக் கிறான்?

தினகரனுக்கு அண்ணனின் இந்தப் 'பாசமான' குணம், வீட்டில் உள்ளோர் 'அன்பு' வார்த்தைகளால் அவளை குத்திக் கிழிக்கும் விதம் எல்லாம் எப்படித் தெரிந்திருக்க முடியும்?

அவனைப் பொறுத்தவரையில் பெண்ணுடைய அண்ணனிடம் விஷயத்தைத் தெரிவித்தாயிற்று. அவன் வீட்டின் எல்லோருக்கும் சொல்லியிருப்பான். எல்லோருக் கும் அது சம்மதம் தான் போலும்! என்று தானே நினைத் திருப்பான்?

அதனால் அவனை தினகரனை ஒரேடியாய் குற்றஞ் சாட்டுவதில்... அவனை குற்றவாளிக் கூண்டில் நிற்க வைப்பதில் நியாயம் இல்லைதான்!

தவறு செய்தது எல்லாம் அண்ணனும், அவளது வீட் டாரும்தான்!



அதனால் தினகரனை தண்டிப்பது... நியாயமற்ற ஒன்றுதான்!

படபடவென கேள்விகளை எழுப்பி சிந்தித்தவள், முடிவெடுத்தவள் போல் தினகரன் வீடு நோக்கி ஆட்டோ பிடித்தாள்.

மீண்டும் அரை மணி நேர பயணத்திற்குப் பின் அங்கு நுழைந்த போது முன்புற ஹாலில் சோபாவில் சாய்ந்தபடி ஹாயாய் டி.வி.யை பார்த்துக் கொண்டிருந் தாள் தாரா.

அவள் வந்ததை உணர்ந்தும் பார்வையைத் திருப்பா மலே, ''என்ன மகாராணி உங்களது சந்தேகம் எல்லாம் தீர்ந்ததா? தினகரன் மன்னர் தீர்த்து வைத்தாரா?'' என்றாள் கிண்டல் குரலில்.

உதயரேகா திரும்பி அவளை நன்றாக அளவெடுத்துப் பார்த்தாள். தினகரன் சொல்வது போல் அவள் நல்ல அழகிதான்! சுண்டினால் சிவக்கும் சிவப்பு நிறத்தில் வில் புருவங்கள், கயல்விழிக் கண்கள், அடர்ந்த கூந்தல், சின்ன இடை, நளினமான உடலமைப்பு என எந்த ஆணையும் அப்படியே வசீகரிக்கும் பேரழகுதான்!

தினகரன் முதலில் இவள் அழகைப் பார்த்து மயங்கி கல்யாணம் செய்து கொண்டதும் வியப்பில்லை தான்! என நினைத்துக் கொண்டாள்.

ஆனால் பிடிவாத குணமும், எப்போதும் சீறும் பாம் பாய் விரட்டும் குரலில் பேசும் சுபாவமும் தான் இந்த தாராவை என அவள் நினைக்கும்போதே, ''உன்னைத் தான் கேட்பது காதில் விழவில்லை? பதில் சொல்லு...!'' என விரட்டினாள் தாரா.

''என்ன பதில் வேண்டும்?'' என்றாள் இவளும் கோப
மாய்.

''உன்னிடம் கல்யாண விஷயத்தை மறைத்தது என்
என்று கேட்டாயா?''

''கேட்டேன்...''

''என்ன சொன்னார்...?''

''உன் அண்ணனிடம் தான் சொல்லியாயிற்றே என்று
சொன்னார்...''

''நயவஞ்சகர்கள். உன்னை ஏமாற்றித்தான் கல்
யாணம் செய்திருக்கிறார்கள்...''

இதற்கு பேசாமல் தான் உதயரேகா இருந்தாள்.

அவள் அப்படியே நிற்பதைப் பார்த்துவிட்டு, ''இப்போது என்ன செய்யப் போகிறாய்? பெட்டியைத் தூக்கிக் கொண்டு உன் வீட்டிற்குக் கிளம்பப் போகிறாயா?'' என்றாள்.

ரேகா திரும்பி அவள் பக்கம் முறைத்தாள். 'ஓஹோ! இதுதான் உன் ஆசையா...?' என நினைத்தவள், ''நான் ஏன் கிளம்ப வேண்டும்?'' என்றாள் பதிலுக்கு.

''உன்னை ஏமாற்றியிருக்கிறாரே... உனக்கு கோபம் வரவில்லை...?''

''வந்தது...'' என்றாள் ரேகா வேண்டுமென்றே ஒன்றைச் சொல்லாக.

''பின் என்னாயிற்று?''

''ஒன்றும் ஆகவில்லை. வந்த கோபம் வந்த வழியே போயிற்று...!''



கைகளை விரித்துக் காட்டினாள் ரேகா.

''நீ என்ன கிளிப்பிள்ளையா? சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறாய்? நான் சொல்வது உனக்குப் புரியவில்லை...?'' எரிச்சலுடன் கேட்டாள் தாரா.

''புரிகிறது... நான் கிளிப்பிள்ளைதான்!'' என வேண்டுமென்றே சொல்லி மீண்டும் அவள் எரிச்சலைக் கூட்ட, தாராவிற்கு அவள் தன்னைப் போலவே பதிலுக்குச் சீண்டுகிறாள் என்பது புரிந்துவிட்டது.

பின் வாயை மூடிக் கொண்டவள், ''எப்படியும் போ...'' என்பது போல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

இவளுக்காகவாவது இந்த வீட்டில் இருந்து இவள் கொட்டத்தை அடக்க வேண்டும் என நினைத்தாள் உதயரேகா.

என்ன பெண்தான் இவள்? அழகும் பணமும் ஒரு சேர கம்பீரமான தினகரன் கணவனாய் கிடைத்தும், அதன் அருமையை உணராமல் இப்படி சண்டித்தனம் பண்ணுகிறாளே? அவளும் வாழாமல் அடுத்தவரையும் வாழவிடாமல் இப்படி பண்ணுவது எந்தவிதத்தில் நியாயம்?

முடிந்தால் இவளுக்கு சரியான புத்தி புகட்ட வேண்டும். அப்படிச் செய்துவிட்டுத் தான் இந்த வீட்டை விட்டு அகல வேண்டும் என தனக்குள்ளே சூளுரைப்போல் நினைத்துக் கொண்டாள் அவள்.

மாலை ஆறு மணிக்கு வேலை முடிந்து அவள் இருக்கிறாளா இல்லை, கோபித்துக் கொண்டு பிறந்த வீடு

போய்விட்டாளா...? என்ற பயத்துடனே நுழைந்தான் தினகரன்.

ஆனால் உதயரேகா நிற்பதைப் பார்த்து நிம்மதி யடைந்தவனாய் பக்கத்தில் வந்தான்.

"ரொம்பவும் நன்றி தங்கம். எனது வார்த்தைகளுக்கு மரியாதை கொடுத்து இங்கு இருக்கிறாயே... அதுவே எனக்குப் போதும்!" என்றான்.

அவனிடம் கோபப்படுவதா... இல்லை இயல்பாய் பேசுவதா என நினைத்துக் குழம்பியவள், ஒன்றும் பேசாமல் அங்கிருந்து அகன்றாள்.

ஆனால் எல்லாவற்றுக்கும் மேல் இரவில் ஒரு பெரும் பிரச்சினையைக் கிளப்பினாள் தாரா.

தினகரன் டிபன் முடித்து டி.வி. பார்த்துவிட்டு தன் ரூமிற்கு படுக்கச் செல்ல... அவனை உதயரேகா பின் தொடர, தனது ரூமிலிருந்து டக்கென வெளிப்பட்டு அவளை இடைமறித்தாள் தாரா.

"எங்கே போகிறாய்? இன்று அவருடன் நான் படுக்கப் போகிறேன்...!" என்றாள்.

"என்ன...?"

உதயரேகா திகைத்து விழிக்க, தாராவோ சர்வ சாதாரணமாய், "அதான் மூன்று, நான்கு நாட்கள் படுத்து கொஞ்சிக் குலாவியிருப்பாயே. அது போதாதா? இன்று முதல் நீ ஒரு நாள். நான் ஒருநாள். அப்படி 'டர்ன்' போட்டுத்தான் சென்று தினகரனுடன் படுக்க வேண்டும். என்ன சொல்கிறாய்?" என்றாள் கைகளை இடுப்பில்



வைத்துக் கொண்டு அதிகாரமாய், வெட்கமில்லாமல் கேட்டாள் தாரா.

சக்காளத்தி சண்டை என்று சொல்வார்களே... அது இதுதானா?

தலையில் கைவைத்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டாள் உதயரேகா!



# 11

தாரா இப்படிச் செய்வாள் என்று உதயரேகா எதிர்பார்க்கவில்லை! ஆனால் வேண்டுமென்றே இந்த விஷயத்தில் தலையிட்டுச் சண்டையிடுவது என அவள் முடிவு பண்ணிவிட்டாள்... என்பதை அவளது பிடிவாதமான முகமே எடுத்துக்காட்டியது.

மேலும் இந்த விஷயத்தை பெரிதுபடுத்தி தினகரன் வரை சென்று பஞ்சாயத்து செய்யக்கூட அவள் முயற்சிப்பாள். அப்படியெல்லாம் நடந்தாள் அது மேலும் மேலும் அசிங்கப்படுத்துவது போலவே ஆகும்.

அதனால் சட்டென முடிவெடுத்த உதயரேகா உடனடியாய் பின்வாங்கினாள். "தாராளமாய்... நீ படுக்கப் போ! நான் என் ரூமிலே படுத்துக் கொள்கிறேன்!" என்றபடி திரும்பி நடந்தாள்.

அவள் சண்டையிடுவாள் என நினைத்த தாராவிற்கு அவளது செய்கை பெரும் ஏமாற்றமாகவே இருந்தது.

உதயரேகா தன் ரூமிற்குச் சென்று பட்டென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

கொஞ்ச நிமிடங்களில் தாரா படியேறிச் செல்லும் ஓசையும் கேட்டது. மேலும் பத்து பதினைந்து நிமிடங்கள் கழிந்ததும் உதயரேகா மெல்லக் கதவைத் திறந்து ஓசையில்லாமல் வந்தாள்.

அப்படியே மாடிப்படி பக்கம் போய் தினகரன் ரூமைப் பார்த்தாள். அது திறந்திருந்தது. உள்ளே கட்டிலில் முதுகைக் காட்டியபடி தினகரன் திரும்பிப் படுத்திருந்தான். கீழே தரையில் பாய் விரித்து தாரா படுத்திருந்தாள்.

தினகரன் முன்பு சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. கல்யாண ஆன நாள் முதல் இப்படித்தான் கீழே படுத்துக் கொள்வாள். மேலும் தங்களுக்குள் எந்த ஒட்டும், உறவும் இல்லை என்பதை மற்றவர்களுக்கும் தெரிவிக்கும் வகையில் அறைக் கதவையும் திறந்தே வைத்திருப்பாளாம்!

சரிதான்! இதற்கா இப்படி படுப்பதற்கா இன்று இந்த வரத்து வந்தாள்?

நினைத்தபடியே உதயரேகா தன் ரூமிற்கு வந்தாள். இப்படியே அந்த வாரம் முழுவதும் ஒருநாள் அவள் ஒரு நாள் உதயரேகா என தினகரனுடன் படுக்கும் கூத்து நடந்தது.



தினகரன் அவளிடம், ''இதற்காக கவலையோ, அருவருப்போ கொள்ள வேண்டாம் தங்கம். அவள் வீம்புக்காக செய்கிறாள். கொஞ்ச நாளில் விட்டுவிடுவாள்...'' என்றான் அவன்.

அவன் சொல்வது புரிந்தாலும், ''சரி தங்கம். நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் படுங்கள்!'' என தினகரனிடம் அவனைப் போலவே கோபமாய் பதிலுக்குச் சொல்லியபடியே போர்வையை இழுத்து மூடிக் கொண்டாள் அவள்.

ஆனால் தினகரன் சொன்னபடியே ஒரு பத்து நாட்களில் சலித்துப் போனவளாய் இந்த கூத்தை நிறுத்தினாள் தாரா. ''யம்மா... மகாராணி! இனி நீயே உன் மணாளனோடு தினம் படுத்துக் கொள். நன்றாக கொஞ்சிக் குலாவு. நான் போட்டிக்கு வரப் போவதில்லை...'' என்றாள்.

''இப்படிப் பேச உனக்கு வெட்கமில்லை?'' என்றாள் உதயரேகா.

உடனே முகம் சிவந்தாள் தாரா.

''கட்டிய பெண்டாட்டியான நான் குத்துக் கல்லாட்டம் இருக்கிறேன். நீ தான் வெட்கமில்லாமல் தாலியை வாங்கிக்கொண்டு இரண்டாம் தாரமாய் வந்திருக்கிறாய்... தூ! உனக்குத்தான் வெட்கமில்லை...!'' என்றாள்.

அவள் சொல்வது சுரீரென உள்ளே குத்தினாலும் அதை வெளிக்காட்டதவளாய், ''எல்லாம் தினகரனை உனக்குப் பிடிக்காததால், நீ சம்மதிக்கப் போய் சட்டப்

பூர்வமாய் நடந்தது தானே? நீ... ஏன் அப்படி சம்மதித்தாய்?'' என்றாள் பதிலுக்கு.

''அது என் இஷ்டம்...'' என்றாள் தாரா.

''உனக்கு ஏன் தினகரனைப் பிடிக்கவில்லை? அதை வெளிப்படையாகச் சொல்லு பார்ப்போம்...!''

''அது என் சொந்த விஷயம்...'' என்றாள் அதற்கும் பதிலுக்கு.

பின் உதயரேகாவிடம் மேலும் பேச விரும்பாதவள் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

ஆனால் உதயரேகா அவளது முதுகுப் பகுதியையே வெறித்தவள், இவளுக்கு தினகரனையும், நடந்த கல்யாணத்தையும் பிடிக்காமல் போனதற்கு ஏதாவது வலுவான காரணம் இருக்க வேண்டும் என்று நம்பினாள்.

தாரா அந்த வீட்டில் யாரோ ஒரு தங்க வந்த விருந்தாளி போலவே நடமாடினாள். காலை அவளது அறையைத் திறந்து வெளிவந்தாள், சமையல்காரம்மாள் தயாராய் வைத்திருக்கும் டிபனை சாப்பிட்டு விட்டு சோபாவில் உட்கார்ந்து பேப்பர் படிப்பாள். சில சமயங்களில் ஹாலில் உட்கார்ந்து டி.வி. பார்ப்பாள். பின் அவள் பாட்டுக்கு தன் ரூமிற்குச் சென்று கதவைச் சாத்திக் கொண்டால், பின் மதிய உணவுக்குத்தான் வெளிவருவாள். அது முடிந்ததும் திரும்பவும் அறைவாசம்தான்.

அப்படி அறையை பூட்டிக் கொண்டு என்னதான் செய்வாள்? பேசாமல் படுத்துத் தூங்கி விடுவாளா? என்று உதயரேகா நினைத்தாள்.



அவள் நினைத்தது போலவே பாதி நாட்கள் தூக்க கலக்கத்துடன் தூக்கம் விலகாத விழிகளுடனே அவள் தாரா வெளிவந்தாள்.

மற்றபடி தினகரனுக்கு காலை வணக்கமோ, பரபரப்பாய் அலுவலகம் கிளம்பும் அவனுக்கு எந்தவொரு ஒத்தாசையோ செய்வது கிடையாது. அவ்வளவு ஏன் அவனுடன் பேசுவதுகூட அபூர்வமே!

அவளுக்குத் தேவையான பொருட்கள் பற்றியோ அல்லது அவளது செலவிற்கான பணம் பற்றியோ பேசத் தான் தினகரன் பக்கமே போவாள் அவள்.

அவள் வாயைத் திறந்ததுமே பர்ஸைத் திறந்து சில ஐநூறு ரூபாய் தாள்களை எடுத்து அவளது கையில் திணித்தவாறு அகன்று விடுவான் அவன். அவன் தினகரனும் சரி, அவளிடம் முகம் கொடுத்து எதுவும் பேசுவதும் கிடையாது. அப்படி முயற்சிப்பதும் கிடையாது.

தினகரன் அவளிடம் சொல்லியது சரிதான். இருவரும் திருமணம் ஆனது முதல் இப்படி பிடிக்காமல் போய் யாரோ... எவரோ... போல்தான் வீட்டில் நடமாடிக் கொண்டிருக்கின்றனர். இது என்ன வாழ்க்கை? எதற்காக இந்த கூத்து?

''அதை விடு தங்கம். அவள் பாட்டுக்கு அவள் இஷ்டப்படி இந்த வீட்டில் ஒரு ஜடம் போல் வாழ்ந்துவிட்டுப் போகட்டும். எல்லாம் அவளுக்காக அல்ல. அவளது வயதான... என் காலில் விழுந்து கெஞ்சும் தந்தைக்காக! அவருக்காக இதை எல்லாம் சகித்துக் கொள்கிறேன்...'' என்றான் ஒரு நாள் இது பற்றி கேட்டபோது.

''இப்படி தாரா நடந்து கொள்வதற்கு ஏதாவது வலுவான காரணம் இருக்க வேண்டுமே... நீங்கள் விசாரிக்கவில்லையா?'' என்றாள்.

பதிலுக்கு நீளமாய் மூச்சிழுத்து விட்டான் தினகரன்.

''விசாரிக்கவில்லை... எனக்கு அந்த அளவுக்கு எல்லாம் பொறுமையில்லை தான். மேலும் தாராவைக் கட்டிக் கொண்டதில் ஏற்பட்ட தோல்வி எனது மன நிம்மதியைப் பறித்து விட்டது. ஆனால்...'' என நிறுத்தியவன் தொடர்ந்து, ''இனி நீ வந்து விட்டாய் அல்லவா தங்கம்? என் வாழ்க்கையில் ஆனந்தமும், சந்தோஷமும் இப்போது இனிய தென்றல் போல் வீச ஆரம்பித்து விட்டது. இனி அவளைப் பற்றி நன்கு விசாரிக்கிறேன். நீ சொல்வது போல் தாரா அப்படி நடந்து கொள்வதற்கு ஏதாவது வலுவான காரணம் இருக்கத்தான் செய்யும்!'' என்று முடித்தான்.

பின் அவனே உதயரேகாவின் பக்கம் வந்து அவளது கைகளை எடுத்து தனது கையினுள் வைத்துக் கொண்டு, ''இதையெல்லாம் நினைத்து நீ ஒன்றும் குழம்ப வேண்டாம் தங்கம். எல்லாம் சரியாகப் போய்விடும். உன்னை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. என் மனங்கவர்ந்த மயிலாள் நீதான்...!'' என்றான் தினகரன் புன்னகை முழுவதும் மலர...

குப்பென சிவந்த முகத்தின் வெட்கத்தை மறைத்துக் கொண்டு, ''குழப்பமில்லை. ரொம்பவும் சங்கோஜமாக இருக்கிறது...!'' என தனது நிலையை தெளிவுபடுத்தினாள் உதயரேகா.





# 12

மறுநாளில் இருந்து உதயரேகா தனது அலுவலக லீவு முடிந்தவளாய் வேலைக்குப் போக ஆரம்பித்து விட்டாள்.

தினம் தினகரன் அவளை அலுவலகத்தில் கொண்டு போய் தன் காரில் ட்ராப் செய்து விடுவதாய் கூறியும் மறுத்து விட்டாள். பஸ்ஸிலேயே சென்றாள்.

அது என்னவோ தாரா ஒருத்தி இருப்பதால் அவளுக்கு தினகரன் மீது உரிமை கொண்டாடவே ஒருவித சங்கோஜமாய் இருந்தது. அதனாலே அவன் செய்ய வரும் உதவிகளை கூடுமானவரை தவிர்த்தாள்.

காலையில் அவனும் அவளும் அலுவலகம் சென்று விட்டால் மாலைதான் வீடு திரும்புவார்கள். அதுவரை தாரா தனியாகத்தான் இருப்பாள்.

பெரும்பாலும் டி.வி.யை வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டோ ஏதாவது வார மாத சஞ்சிகைகளை படித்துக் கொண்டோ... இருப்பது அவளது வழக்கம்.

அப்போதும் அப்படி அவள் வேலைக்குக் கிளம்பும் போதும், ''என்ன வேலைக்குக் கிளம்பியாயிற்றா? பின் மாலை தானே வீடு திரும்புவாய்? ஆனால் பார்... எனக்கு தெரியாமல் வேலை முடிந்ததும் ஜாலியாய் அவருடன்

பார்க், பீச் என சுற்ற நினைத்தால்... அவ்வளவுதான், நான் பொல்லாதவளாகி விடுவேன்...!'' என போலியாய் பழிப்பு காட்டி அவள் எச்சரிக்கும் போது உதயரேகாவிற்கு சிரிப்பே வரும்.

அவளது பேச்சுக்களை கொஞ்சமும் சட்டை செய்யாமல் சென்று விடுவாள். அவள் பேச்சை மட்டுமல்ல, தன் வீட்டினரின் பேச்சைக் கூடத்தான்.

அன்று அவள் வீட்டிற்குச் சென்று சண்டையிட்டு வந்ததிற்குப் பிறகு அண்ணன் மட்டும் ஒருமுறை வந்து எட்டிப் பார்த்தான். ''என்ன சரியாகி விட்டாயா? ஒழுங்காய் குடும்பம் நடத்துகிறாயா?'' என்றான்.

அதற்கும் வேண்டுமென்றே பற்கள் முழுவதையும் காட்டி ஈயென இளித்தபடி, ''ஆமாம் ஆமாம்...! ஒருவருக்கு இரண்டு பெண்டாட்டிகளாய் நாங்கள் இருவரும் இங்கு சந்தோஷமாய் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இதையே வீட்டிலும் போய்ச் சொல்லு...!'' என விரட்டியக்காத குறையாய் அவனிடம் சொல்லி அனுப்பி வைத்தாள்.

சொல்லப்போனால் தினகரனை கட்டிக்கொண்ட அந்த முதல் ஐந்து தினங்கள் தான் அவள் மகிழ்ச்சியாய் இருந்தாள். என்று தாரா வந்து இறங்கினாளோ, அன்றே அவள் மகிழ்ச்சி முழுவதும் போய்விட்டது.

உள்ளூர ஒருவித எரிச்சலுடனே எப்போதும் நடமாடினாள். தினகரன் கொஞ்சமும் மாறாமல் முதலில் அவளிடம் காட்டிய அன்பும் பரிவும் குறையாமலேயே நடந்து கொண்டான். 'தங்கம், தங்கம்' எனக் கொஞ்சம் குறையாத கனிவுக் குரலிலே பேசினான்.



ஆனால் அவள் தான் விலகிப் போனாள். இந்த அன்பும் பரிவும் நிஜமானது தானா? அல்லது தாரா மேல் உள்ள எரிச்சலில் அவளை வெறுப்பேற்ற இதையெல்லாம் செய்கிறானா? என்ற சந்தேகம் அவளுக்கு!

ஏனெனில் தாரா முன்னிலையில் சிலமுறை வேண்டுமென்றே தங்கம், தங்கம் என கொஞ்சிப் பேசுவதையும் அவன் அகன்ற பின் தாரா அவளைப் பார்த்து, ''தங்கம் என்று உன்னையா கொஞ்சுகிறார்? அவருக்கு கண் பார்வை சரியில்லை... உடனடியாய் டாக்டரிடம் டெஸ்ட் பண்ணச் சொல்ல வேண்டும்!'' என்பாள் அவளைச் சீண்டும் விதமாய்.

அதைவிட தினகரன் சனி, ஞாயிறு தினங்களில் ஏதாவது சினிமாவுக்குப் போகலாம் என அவளை அழைப்பான். தொடர்ந்து அவனது அழைப்புகளுக்கு எல்லாம மறுப்பவள், அதை மறுக்க மனமில்லாமல் கிளம்புவாள். அவள் அப்படிக் கிளம்புவதைப் பார்த்த தாரா உடனடியாக தானும் ரெடியாகி சினிமாவுக்கு வருவதாய் அடம் பிடிப்பாள்.

தினகரன் திரும்பி சங்கடமாய் உதயரேகாவைப் பார்ப்பான். அவனது நிலைமையைப் புரிந்து கொண்டவள் சரி வரட்டும் என்பது போல் தலையசைப்பாள்.

சினிமா ஹாலிலும் வேண்டுமென்றே இருவரும் நடுவில் உட்கார்ந்து எரிச்சல்படுத்துவாள். அப்படி அவள் உட்கார்ந்திருப்பதால் தினகரனும் ரேகாவும்கூட பேச முடியாது.

ஆகையால் படம் முடியும் வரை மூன்று பேருமே உம்மென படம் பார்த்துவிட்டுத் திரும்புவர். அதே

போல் ஏதாவது ஹோட்டல் சென்றாலும் இதே நிலைமை தான். தாரா, தானும் பேச மாட்டாள். அவர்களையும் பேச விடமாட்டாள்.

அதனாலே நாளடைவில் தினகரன் வெளியே இரு வரையும் அழைத்துப் போவதை வழியில்லாமல் நிறுத்த வேண்டியதாயிற்று.

இரவிலும் உதயரேகா தினம் தினகரனுடன் படுத் தாலும் மெத்தையில் உட்கார்ந்ததுமே போர்வையை இழுத்து விட்டவாறு அவனுக்கு முதுகு காட்டி படுத்துக் கொள்வாள். ஒரு சில நிமிடங்களிலே வேறு எந்த சிந் தனையுமில்லாத கண்களை இறுக மூடி தூங்கியும் விடுவாள்.

சில சமயம் தினகரன் அவளை தன் பக்கம் இழுத்து கைகளால் அவளது தோள்களைப் பற்றி ஏதாவது அலு வலக விஷயங்களை பேசுவான். அப்போதும் அதைக் கேட்டுவிட்டு பின் அவன் கைகளை மெல்ல விலக்கி விடுவித்துவிட்டு திரும்பிக் கொள்வாள்.

தினகரனும் அவளது நிலைப்பாட்டை புரிந்தவன் போல் அதற்குமேல் அவளை வற்புறுத்தாமல் விட்டு விடுவான்.

இப்படியே இந்த நாடகம் எவ்வளவு நாட்களுக்கு? என்ற கவலையும் அவளுள் எழுந்தது.

ஒருபுறம் தாராவை நினைத்தும் அவளுக்கு பரிதாபமே மிஞ்சியது. மூன்று நேரம் உண்பதும், டி.வி. பார்ப்பதும் உறங்குவதுமாய் எத்தனை நாளுக்கு அவளால் இருக்க முடியும்? மேலும் அவளுக்கென ஒதுக்கப்பட்ட அந்த




அறையில் எவ்வளவு நேரம் தான் அப்படி முடங்கிக் கிடக்க அவளால் முடிகிறது? எனவும் அதிசயித்தாள்.

மேலும் தாராவை அவளால் சாதாரணமாக எண்ண முடியவில்லை. மனதில் எதையோ எழுத்தமாய் வைத்துக் கொண்டுதான் இப்படியெல்லாம் செய்கிறாள், நடமாடு கிறாள் என்ற முடிவிற்கும் வந்தாள்.

அப்படி பிடிவாதம் நெஞ்சழுத்தம் கொள்ளும் அள வுக்கு என்ன விஷயம் அவளிடம் இருக்க முடியும் என்ற கேள்வியை எழுப்பி அதை தினகரனிடமும் சொன்னாள்.

தினகரன் அதற்கு புன்னகைத்தவாறு, ''இன்னும் ஒரு பத்து நாட்கள் பொறு தங்கம். தாரா பற்றிய சில விபரங்களை ஒரு தனியார் துப்பறியும் நிறுவனம் மூலம் விசாரிக்க ஏற்பாடு செய்துவிட்டேன். விரைவில் அதற்கு விடை கிடைத்து விடும்...'' என்று ரேகாவை சமாதானப் படுத்தினான்.

தினகரன் சொன்ன அந்த பத்து நாட்களில் தாராவைப் பற்றிய அதிர்ச்சியான தகவல் ஒன்றுதான் அவர்களுக்கு வந்து சேர்ந்தது.



## 13

பத்து நாட்கள் கழித்து மாலை வீடு திரும்பிய தினகரன் தனது காரில் இன்னொரு நபரை கூட்டிக்கொண்டு வீட்டினுள் நுழைந்தான்.

வாட்டசாட்டமாய் வேஷ்டியும், முழுக்கை சட்டை மாய் அசல் கிராமத்து ஆளாய்த் தெரிந்த அந்த முப்பது வயது நபரைப் பார்த்து உதயரேகா புரியாமல் விழிக்க... தற்செயலாய் வெளிவந்து அவனைப் பார்த்த தாரா பேயறைந்தது போல் ஆனாள்.

''சரவணன்... நீங்களா...?''

தன்னையும் அறியாமல் வாய்விட்டு அலறியும் விட்டாள் அவள்!

மறுகணமே தினகரனும் உதயரேகாவும் தன்னையே உற்றுப் பார்ப்பதை உணர்ந்து வாயடைத்தவளாய் சட் டென தலைகுனிந்தாள்.

தினகரன் பக்கத்தில் நின்று கொண்டிருந்தவனை நோக்கித் திரும்பி, ''வாங்கள் சரவணன், உங்களுக்குக் காட்ட வேண்டிய விஷயங்கள் சில இருக்கிறது!'' என்ற படி வீட்டினுள் கூட்டிப் போனான்.

நேராக தாராவின் அறைக்குச் சென்று அங்குள்ள கட்டிலையும் தாராவின் உடைமைகளையும் காட்டினான்.

''பாருங்கள் கடந்த எட்டு மாதமாய் இதுதான் அவளது உலகம். இதற்கு அடங்கி முடங்கித்தான் ஒரு உப்புச் சப்பில்லாத வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறாள். நீங்களே பாருங்கள்! அவள் நிலை குறித்து முடிவெடுங் கள்...!'' என்றான்.

தினகரன் சொல்ல சரவணன் விடுவிடுவென அந்த அறைக்குள் சென்று ஆராய்ந்தான். மேலும் கீழும் பார்த்தான். சங்கடப் பார்வையுடன் வெளிவந்து தாராவை நோக்கிப் போனான்.



அவனைப் பார்த்ததும் பேச வார்த்தைகள் எழாதது போல் மறுபடியும் தலை குனிந்தாள் அவள்.

''சொல்லு தாரா! எதற்காக இந்த போலித்தனம்... யாருக்காக இந்த போலியான வாழ்க்கை? சொல்லு...!'' என்றான்.

அவன் கேள்விக்கு மெல்ல நிமிர்ந்த தாராவின் முகத் தில் கண்கள் குளமாயிருந்தது. தாரை தாரையாய் கண் ணீர்த் துளிகள் பெருகி உருண்டோடியது.

எவ்வளவு இறுமாப்புடன் நெஞ்சழுத்தம் கொண்டவ ளாய் இருந்தவள் இப்படி அழுகிறாளே... என உதய ரேகாவும் திகைத்தாள்.

தினகரன் அவள் பக்கம் வந்து, ''கொஞ்ச நேரம் அவர் களை தனியே விடுவோம். அவர்கள் பேசட்டும்...'' என்றான் மெல்லக் குரலில்.


புரிந்தவள் போல் அவன் பின்னாலே உதயரேகா நடந்து வீட்டு முன்புற தோட்டத்துக்கு வந்து விட்டாள்.

தனித்து விடப்பட்ட சரவணனும், தாராவும் ஒரு மணி நேரம் பேசி இருப்பார்கள்.

பின் ஒரு முடிவெடுத்தவர்கள் போல் இருவரும் வெளி வந்தார்கள்.

''நான் தாராவை மனப்பூர்வமாய் ஏற்றுக் கொள்கிறேன். கல்யாணம் செய்து கொள்கிறேன்...!'' என்றான் சரவணன்.

''உங்கள் இருவருக்கும் எரிச்சல் படுத்துவது போல் நிறைய விஷயங்களை செய்துவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்!'' என்றாள் தாரா.



# 14

மூன்று நாட்கள் கழிந்திருந்தது.

அந்த மூன்று நாட்களுக்குள் தாரா சட்டப்பூர்வமாய் தினகரனுடனான திருமண பந்தத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு... மறுநாளே மலையடிவார முருகன் சந்நிதியில் வைத்து அவளும் சரவணனும் மாலை மாற்றினார்கள்.

இருவருக்கும் இனிதே கல்யாணம்! தாரா கிடைத்த சந்தோஷத்தில் தினகரனின் கையைப் பிடித்து தழுதழுத்தான் சரவணன்.

ஆனந்தக் கண்ணீர் மல்க, இருவருக்கும் நன்றிப் பெருக்கோடு கையெடுத்துக் கும்பிட்டு நன்றி சொன்னாள் தாரா.

புரியாமல் அங்கு திருதிருவென விழித்தது உதயரேகா மட்டுமே!

''எல்லாவற்றையும் விளக்கமாக இரவில் சொல்கிறேன்...'' என்று அவள் காதுகளில் கிசுகிசுத்துவிட்டு அகன்ற தினகரன், தாராவின் பெற்றோர்களையும் சமாதானப் படுத்தி புது மணமக்களான சரவணன் தாராவை சரவ



ணனது சொந்த கிராமத்திற்கு உரிய மணப்பெண் சீர் வரிசையோடு அனுப்பி வைப்பதில் மும்முரமாய் இருந்தான்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் புது தம்பதிகளை வாடகை டாக்ஸி ஒன்றில் புன்னகையுடன் இருவரும் வழியனுப்பவும் செய்தார்கள்.

அன்று இரவு -

''வா தங்கம்!'' என அவளை ஆவலாய் இழுத்து உரிமையோடு அணைத்தான் தினகரன்.

அவளும் உரிமையோடு அவனது நெஞ்சினில் புதைந்தவள், ஒன்றும் புரியாதவளாய் அவனது அணைப்பில் சிறைப்பட்டவள், அப்படியே முகம் நிமிர்த்தி தனது மலர் விழிகள் படபடக்க அவனைப் பார்த்தாள்.

''எதற்காக இந்த பரபரப்பு... பதட்டம் தங்கம்? எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்கிறேன்...'' என்றபடி அவளது நெற்றியில் மென்மையாக முத்தமிட்டான் தினகரன்.

சிலிர்த்தவள் தொடர்ந்து, ''சீக்கிரமாகச் சொல்லுங்கள். எனக்கு தலையே வெடித்துவிடும் போல் இருக்கிறது. என்ன தான் தாரா விஷயத்தில் நடந்தது? அந்த ரகசியம் தான் என்ன?'' என்றாள் துடிப்புக் குறையாதவளாய்.

தினகரன் தன் வெண்பற்கள் தெரிய கடகடவென அவள் தவிப்பை ரசித்துச் சிரித்தவன், பின் அமைதியாகி, ''காதல்...'' என்றான்.

''என்ன சொல்கிறீர்கள்... காதலா?''

''ஆமாம் தங்கம். அதை விளக்கமாகவே உனக்குச் சொல்கிறேன். அப்போதுதான் உன்னால் புரிந்துகொள்ள முடியும்...'' என்றபடி ஆரம்பித்தான்.

''அந்த சரவணன் வேறு யாருமல்ல. தாராவின் சொந்த அத்தை மகன். முறைப் பையன்தான். பக்கத்தில் ஐம்பது கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் புவனாகரம் கிராமத்தில் வசிப்பவன். தனக்கு இருக்கும் ஐந்து ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து பிழைக்கும் விவசாயி.

அவனுக்கும் தாராவிற்கும் சிறு வயது முதலே ஈர்ப்பு ஏற்பட்டு நாளாவண்ணத்தில் அது காதலாகவே மாறி விட்டது. இருவரும் ஒருவரையொருவர் மனதார விரும்பி னார்கள். ஆனால் தாராவின் தந்தை சிவஞானத்திற் குத்தான் இது கொஞ்சமும் பிடிக்கவில்லை.

சரவணன் படிப்பறிவில்லாத கிராமத்துக்காரன். அவனைக் கட்டிக் கொண்டு அந்த குக்கிராமத்தில் போய் நீ என்ன செய்யப் போகிறாய்? நீயும் வயலில் இறங்கி அவனுடன் உழப் போகிறாயா? அதனால் சரவணன் பற்றிய நினைப்பை எல்லாம் மறந்துவிடு. அது நடக்காத விஷயம்... என உறுதியாய் தெளிவுபட சொல்லிவிட் டார் தாராவின் தந்தை.

ஆனால் தாராவின் மனதில் இதைக் கேட்டு சரவணன் மீதான காதல் கூடியதே தவிர குறையவில்லை. அவள் தந்தைக்கு தெரியாமல் சரவணனுடன் பேசினாள். ரகசிய மாய் சந்தித்தாள்.

ஒரு கட்டத்தில் தாராவிற்கு மாப்பிள்ளை தேடுவதில் சிவஞானம் தீவிரம் காட்ட இனி பொறுத்தால் அவ்வளவு



தான் என முடிவெடுத்த தாரா பெட்டியைத் தூக்கிக் கொண்டு வீட்டை விட்டு ஒரு நாள் வெளியேறி விட் டாள்.

நேராய் சரவணனைத் தேடிப் போனாள். விஷயத்தைச் சொல்லி இருவரும் ரிஜிஸ்டர் கல்யாணம் செய்வது ஒன்றுதான் வாழ்க்கையில் இணைவதற்கான வழி... என்று சரவணனை வற்புறுத்தினாள்.

சரவணனும் வேறு வழியில்லாமல் சம்மதித்தான். அடுத்த நாளே ரிஜிஸ்டர் ஆபீஸில் நண்பர்கள் துணை யுடன் இருவரும் மாலை மாற்றத் தயாராக... அப்போது சரவணன் ஏதோ சிந்தனையுடன் போனை எடுத்து யாருக்கோ டயல் செய்திருக்கிறான்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் அங்கு சிவஞானம் வந்து விட்டார். சரவணன் தாராவிற்குக் கூடத் தெரியாமல் போன் செய்தது சிவஞானத்திற்குத் தான்! தந்தையைக் கண்டு தாரா திகைக்க சரவணன் விளக்கினான்.

''தாரா... இப்படித் திருட்டுக் கல்யாணம் செய்வதில் எனக்கு கொஞ்சமும் இஷ்டமில்லை. உன் தந்தையின் சம்மதத்துடன் நடப்பதையே விரும்புகிறேன். நீ என்னை எவ்வளவு தூரம் விரும்பியிருக்கிறாய் என்பது அவருக் குப் புரியட்டும். அதனாலே இப்படிச் செய்தேன்...'' என்றான்.

கேட்ட தாராவிற்கு மயக்கம் வராத குறைதான். சிவ ஞானமோ, ஆவேசமாகி, 'ஒரு போதும் சரவணனுக்கு கட்டிக் கொடுக்க தனக்குச் சம்மதமில்லை...!' என்றார்.

பதிலுக்கு சரவணனும் ஆவேசமாகி, 'அவர் சம்மதம் இல்லாமல் திருட்டுக் கல்யாணம் பண்ண தானும் தயாராக இல்லை...!' என அறிவித்தான்.

அப்படியே தலையில் கை வைத்தபடி இடிந்து போனாள் தாரா.

கடைசியில் சிவஞானம் கைகளைப் பிடித்து தரதர வென தாராவை இழுத்துச் சென்று விட்டார்.

அன்று தாராவிற்கு தன் தந்தையைவிட, தன்னிடம் கூடச் சொல்லாமல் ரிஜிஸ்தர் ஆபீஸுக்கு தந்தையை வரவழைத்து பிடிவாதம் பிடித்த சரவணன் மீதே கோபம், ஆத்திரம் பாய்ந்தது.

எவ்வளவு பெரிய முட்டாள் இவன்! இந்த காலத்தில் இப்படிப் போய் நியாய தர்மம் பார்த்துக் கொண்டு... போயும் இவனைக் காதலித்தேனே? என நொந்து கொள்ளத்தான் செய்தாள் அவள்.

அந்நேரம் தான் சிவஞானமும் தாராவை இனி அப்படியே விடக்கூடாது என பயந்து தினகரனுக்கு சம்பந்தம் பேசி தாராவை கட்டாயப்படுத்தி தினகரனுடனான கல்யாணத்தையும் தாராவிற்கு பண்ணிவிட்டார்.

தாராவிற்கோ ஒரே எரிச்சல், கோபம்! ஆத்திரம்! அவளுக்கு புது மண வாழ்க்கையும் பிடிக்கவில்லை. தான் காதலித்த சரவணனையும் அவனது நியாயமான பிடிவாதத்தை நினைத்துப் பிடிக்கவில்லை. நீ தினகரனுடன் சேர்ந்து வாழாவிட்டால் தூக்கில் தொங்கி விடுவேன் என மிரட்டிய தந்தையையும் அவளுக்குப் பிடிக்கவில்லை. அதனாலே வாழ்க்கையை வெறுத்தவள்



போல் ஒரு அறைக்குள்ளே முடங்கினாள். நம் எல்லோரையும் எரிச்சல் படுத்தினாள்.

இதையெல்லாம் தனியார் துப்பறியும் நிறுவனம் மூலம் கண்டுபிடித்து அறிந்து கொண்ட நான் உடனடியாக சரவணனைத் தொடர்புகொண்டு தாராவின் நிலைமையை விளக்கினேன்.

தாராவின் பிடிவாதத்தால் நம் நான்கு பேரின் வாழ்க்கையும் கேள்விக்குறியாய் ஆகி வருவதை அவனுக்கு உணர்த்தினேன்.

சரவணன் எல்லாவற்றையும் நன்கு புரிந்து கொண்டான். அதனாலே அவனையே இங்கு கூட்டி வந்து தாராவின் நிலைமையை நேரிடையாய்க் காட்டிப் பேசவும் வைத்தேன். நான் நினைத்தது போல் இருவரும் யோசித்து தெளிவாய் ஒரு நல்ல முடிவையும் எடுத்து விட்டார்கள்.

எனது குடும்ப வக்கீல் ஒருவர் மூலம் சட்டச் சிக்கல்களை எல்லாம் முறைப்படி தீர்க்க வழி செய்து தாராவின் தந்தையையும் சம்மதிக்க வைத்தேன். கடைசியில் திரைப்படங்களில் வரும் சுபம் போல் எல்லாம் இனிதே மங்களகரமாய் முடிந்துவிட்டது... என்ன புரிகிறதா தங்கம்?''

தனது நீண்ட உரையை முடித்து ஆர்வமாய் உதய ரேகாவைப் பார்த்தவாறு கேட்டான் தினகரன்.

சந்தோஷமாய் காது மடல்களை படபடவென ஆட்டியவள், கூடவே, ''இன்னுமொரு சந்தேகம்...'' என்றாள் சிணுங்கலாய்.

''எதுவானாலும் கேளு தங்கம்...'' என்றபடி சொல்லியதோடு மட்டுமில்லாமல் செயலிலும் அவள் கன்னங்களில் இதழ்களைப் பதித்துக் கொஞ்சினான் அவன்.

''என்னை நிஜமாகவே உங்களுக்கு பிடித்திருக்கிறதா? இல்லை... நீங்கள் விரும்பிக் கட்டிய அழகான தாரா தனது குரங்கான குணத்தினால் உங்களை நோகடித்ததால் அதற்காக அழகையே பிடிக்காமல் போய் அதற்கு மாற்று மருந்து போல் என்னை நீங்கள் விரும்பி...''


அவள் மேற்கொண்டு முடிப்பதற்குள் அவசரமாய், ''ஸ்டாப்...! ஸ்டாப்...!'' என்றபடி அவள் உதடுகளில் கை வைத்து தடுத்தவன், இனிமையாய் சிரித்தவாறு, ''தங்கம் நீ யூகித்துச் சொன்னதில் பாதிதான் உண்மை. அதாவது தாரா, எனக்கு ''ஒரு பெண்ணிற்கு வெளித் தோற்றமான அழகு மட்டும் முக்கியம் இல்லை. உள்புறமான மனது அழகாய் இருப்பதுதான் முக்கியம்'' என்பதை பாடம் போல் எடுத்து உணர்த்தினாள்.

அதனாலே உண்மையை உணர்ந்து நான் பெண் தேடினேன். தங்கமான உன்னைக் கண்டு பிடித்து மணமும் முடித்தேன். நான் முன்பே சொன்னது போல், ''உண்மையான அழகு என்பது நம் மனதில் இருக்கும் அன்பிலும், அதை நாம் மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் விதத்திலும் தான் இருக்கிறது... என்ன இப்போது எல்லாம் புரிந்து விட்டதா தங்கம்?'' எனக் கேட்டபடி அதற்கு மேல் பேச பொறுமையில்லாதவன் போல் பேச்சை முடித்த தினகரன் அப்படியே அவளை இறுக அணைத்து முத்த மாரி பொழிந்தான்.



சந்தோஷத்தில் திக்கு முக்காடி திணறியவளின் முகம் நிமிர்த்தி, ''இந்த தங்கத்தை இன்று இரவு முழுவதும் உரசிப் பார்க்கப் போகிறேன். சரியா? சம்மதமா?'' என கிறுகிறுப்புக்காட்டி தினகரன் சொன்ன விதத்தில் சென்னிற ரோஜாவாய் சிவந்த முகத்துடன் மெய்சிலிர்க்க ஆரம்பித்தாள் அவனது அன்பு மனைவி உதயரேகா!

# டியர், மிஸ். அழகுரதி



## 1

குன்றலும் கோபமுமாகக் கன்றிச் சிவந்த போதும், 'இது என்ன பைத்தியக்காரத்தனம்?' என்றே அழகுரதிக்குத் தோன்றியது.

நேற்று பிரதீபனுடன் பேசியது எல்லாம் மறுபடி அவள் நினைவுக்கு வந்தது.

''லுக் பேபி, என்னுடைய பொறுமையை ரொம்பவும் சோதிக்கிறாய்? இப்படி மௌனமாய் இருந்தால் அதற்கு என்னதான் அர்த்தம்?'' என்றான் பிரதீபன். அந்த அமைதியான வெளிநாட்டுப் புல்வெளி ரெஸ்ட்டாரண்டில் தனது குரலை உயர்த்தியவாறு.



முன் வைத்திருந்த சாண்ட்விச் ப்ரெட்டையும், ப்ரூட் சாலட் ஐஸ்க்ரீம்களையும் ரொம்ப நேரம் பார்த்தவாறு தொடர்ந்து அவள் மௌனமாயிருந்தாள்.

பிரதீபன் எரிச்சலானான்.

''கமான், ரதி பதில் சொல்...!'' என்றாள் மறுபடியும்.

மெல்ல அவள் நிமிர்ந்து மை விழிகளை விரித்து அவனை உற்றுப் பார்த்தாள். இதுவரை பிரதீபனிடம் பார்க்காத அந்த எரிச்சலும், கோபமும் அவளை முதல் முறையாய் கலவரப்படுத்தியது.

''நான் நிறைய யோசிக்கணும்...'' என்றாள்.

வெடித்தான் பிரதீபன்.

''இன்னும் என்ன யோசித்துக் கிழிக்கப் போகிறாய்? பேசாமல் நான் சொன்னபடி செய். நானும் உன்னுடன் வருகிறேன். உன் தந்தையால் அந்த 'ராயல் கிங் டீ எஸ்டேட்... அது என்ன முந்நூறு கோடி பெறுமா. அதை ஒரே வாரத்தில் எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் மூலம் பிரபல அரசியல் புள்ளி ஒருவருக்கு நாம் விற்று விடலாம். அவர் பணப் பரிமாற்றத்தை அப்படியே அமெரிக்க டாலரில் இங்கு நம் அக்கவுண்டில் கொட்டி விடுவார். அவருக்கு அரசியல் செல்வாக்கு ஜாஸ்தி என்பதால் டீலிங்கில் எந்தவிதப் பிரச்சினையும் இருக்காது.

பின் அந்தப் பணம் முழுவதையும் எடுத்து நான் திட்டமிட்டு செயல்படுத்திக் கொண்டிருக்கும் மினியேச்சர் சாப்ட்வேர் பிராஜக்ட்டுக்கு பயன்படுத்திக் கொள்வோம். ஒரே வருடத்தில் நாம் உலகமே வியக்கும் கோடீஸ்வரர்களில் ஒருவராகி விடுவோம்.

பிறகு என்ன? வாழ்க்கையில் சாதித்த திருப்தியில் உன்னை அடுத்த நிமிடமே கலிபோர்னியா முருகன் சந்நிதியில் வைத்து ஜாம் ஜாம்மென கல்யாணமும் செய்து கொள்கிறேன். என்ன... கொஞ்சம்... நினைத்து... நான் சொல்வதை அப்படியே கனவு கண்டு பார்...! எவ்வளவு இனிப்பாய், சந்தோஷமாய் மனதுக்குள் நீ உணர முடியும்...? என்ன உணர்கிறாயா?'' என்றான் பிரதீபன் ஆர்வமான குரலில்.

அவன் பேசி முடித்ததும் அவளையறியாமல் அவள் தலைவெட்டி மறுதலித்தாள்.

''எனக்கு இஷ்டமில்லை...!'' என்றாள் தெளிவான குரலில்.

பிரதீபன் முகத்தில் முதல் முறையாய் அதிர்ச்சி ஒன்று பரவியது.

''என்ன இஷ்டமில்லையா?''

அழகுரதி நிமிர்ந்து தீர்க்கமாய் அவன் கண்களைப் பார்த்தாள். ''பிரதீபன், எனக்கு அப்பாவின் சொத்துக் களை விற்பதில் நாட்டமில்லை...'' என்றாள்.

''நாட்டமில்லை... என்றால் எப்படி? பின் அந்த ட எஸ்டேட்டை யார் கவனிப்பார்கள்? உன் தந்தையின் மரணத்துக்குப் பிறகு பொறுப்பேற்ற உனது ஒரே உறவான சகோதரனும் சில வருடங்களிலே கொடிய போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி சுய நினைவிழந்து தீவிர மருத்துவ சிகிச்சையில் இருக்கிறான். இந்நிலையில் அந்த முந்நூறு கோடி ரூபாய் எஸ்டேட்டை இங்கிருந்து நீ எப்படி நிர்வகிக்க முடியும்? மேனேஜர், ஊழியர், பணியாள் என அனைவரும் சுருட்டி ஏப்பமிட்டுவிட மாட்டார்களா?''



அவன் உரையை முடிப்பதற்குள், ''நான் இந்தியா போகப் போகிறேன்...'' என்றாள் அவள் அதே தீர்க்கக் குரலோடு.

இதை சற்றும் எதிர்பாராத பிரதீபன் அப்படியே வாயடைத்து விட்டான்.

இருந்தும், ''என்ன... இந்தியா போகப் போறாயா?'' என்றான் தடுமாறும் குரலில்.

''யெஸ்... பிரதீபன்...!''

''இதுதான் உன் முடிவா...?''

அவள் பதில் சொல்லாமல் தலையை மட்டும் ஆட்டினாள்.

ஓரிரு நிமிடங்கள் பெரும் அமைதி நிலவியது.

பின் பிரதீபனும் தெளிவடைந்தவன் போல் நிமிர்ந்தான்.

''அப்படியானால் என்னை மறந்து விடு ரதி...!'' என்றான்.

''பிரதீபன்...''

''ஐ... ஆம் ஸாரி ரதி! உனக்கு ஒரே ஒரு சாய்ஸ்தான். நான் வேண்டுமென்றால் எனது சாப்ட்வேர் பிராஜக்டுக்கு உன்னுடைய தந்தையின் முந்நூறு கோடி ரூபாய் பணமும் எனக்கு வேண்டும். இல்லையென்றால் என்னை விட்டுவிடு. மறந்து விடு! நான் வேறு ஒரு பணக்கார இந்தியப் பெண்ணைத் தேடிக் கொள்கிறேன். இட் இஸ்... ஜஸ்ட்... எ... டீஸ்... அவ்வளவுதான்!''

அவன் லேசாய் ஆரம்பித்து ஊசியேற்றுவது போல் அவ்வளவையும் சொல்லி முடித்து விட்டான்.

அவளால் அவன் பேசியதைக் கொஞ்சமும் நம்ப முடியவில்லை.

காதுகள் செவிடாகி கற்சிலையாய் ஆனது போல் கொஞ்ச நொடிகள் இருந்தவள், லேசாக அசைவு பெற்று, ''பிரதீபன் அப்படியானால் நாம் இவ்வளவு நாள் பழகியது... நம் காதல்...?'' என்றாள் அதிர்வு விலகாமல்.

''எல்லாம் வேஸ்ட்! ஜஸ்ட் பர்கெட்! மறந்து விடு பேபி...!'' என்றான் அவன் கூலாக.

அவளுள் ஏதோ நொறுங்கி காலடியே நழுவியது போல் உணர்ந்தாள்.

இருந்தும் அவனுக்குப் புரிய வைக்க விரும்புவது போல், ''ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள் பிரதீபன். என் தந்தை ஒரு சாதாரண கூலித் தொழிலாளியாகத்தான் தன் வாழ்க்கையைத் தொடங்கி, தன் உழைப்பையும், வியர்வையும் சிந்தி, படிப்படியாய் வாழ்க்கையில் உயர்ந்தார். அங்கு குன்னூரில் இவ்வளவு பெரிய டீ எஸ்டேட்டை உருவாக்கினார். இன்று அந்த எஸ்டேட்டை நம்பி முந்நூறு குடும்பங்கள் இருக்கிறது. அவர்களை தனது சொந்தக் குடும்பமாய் பாசம் காட்டி அரவணைத்து தான் என் தந்தை நடத்தி வந்தார்...'' எனச் சொல்லி வந்தவள், வார்த்தைகளை முடிக்கும் முன்பே, ''ஸோ... வாட்?'' என்றான் பிரதீபன்.

இப்படி கேள்வி கேட்பவனிடம் எதைச் சொல்வது?

''அதனால் என் தந்தை உருவாக்கிய அந்த சாம்ராஜ்யத்தை விற்கவோ... அந்த முந்நூறு குடும்பங்களின் வாழ்க்கையை, யாரோ முன் பின் தெரியாத ஒரு நபரிடம்



ஒப்படைப்பதிலோ எனக்குத் துளியும் இஷ்டமில்லை. தயவு செய்து என்னைப் புரிந்து கொள்ளுங்கள் பிரதீபன்... ப்ளீஸ்...''

அவனிடம் கேட்கும், கெஞ்சும் கடைசி முயற்சியாகத் தான் அந்த வார்த்தைகளை உச்சரித்தாள் அழகுரதி.

ஆனால் பிரதீபன் முகத்திலோ எரிச்சலும் கோபமும் ஒரு சேர கைகோர்த்துக் கொண்டு தாண்டவமாடியது.

''இவ்வளவு நாள் என்னுடன் பழகியிருக்கிறாய். நீ தான் என்னைப் புரிந்து கொள்ளவில்லை! இது ஹைடெக் உலகம். இங்கு பணம்தான் பிரதானம், முக்கியம். அதை விட்டுவிட்டு தந்தை, குடும்பங்கள் என செண்டிமெண்ட்ஸ் பார்த்துக் கொண்டிருந்தால் எல்லாம் நம் கதைக்கு ஆகாது. ஒன்று செய் ரதி இன்று முதல் நாம் பிரிந்து விடுவோம். நீ உன் வழியில் செல். நான் என் பாதையைப் பார்த்துக் கொள்கிறேன்...'' என்றபடி சீட்டை விட்டு எல்லாம் பேசி முடித்தது போல் எழுந்தும் விட்டான் பிரதீபன்.

அவள் அதிர்ச்சியோடு கண்களின் கருவிழிகள் நிலைகொத்தி அவனையே பார்க்கத் தவிக்கத்தான் செய்தாள். கடைசியில் பொறுக்க முடியாமல் அந்தக் கேள்வியையும் கேட்டு விட்டாள்.

''அப்படியானால் பிரதீபன் நீங்கள் என்னுடன் பழகியது, காதலித்தது எல்லாம் என் பணத்துக்காக... அந்த ருநூறு கோடி ரூபாய் சொத்துக்களுக்காக... அப்படித் தானே?''

பிரதீபன் கொஞ்சமும் அதற்கு தயங்கவில்லை,. வேகமாக தலையாட்டி ஆமோதித்தான். ''அதில் சந்தேக

மென்ன? நான் உன்னைக் காதலித்ததே என்னுடைய சாப்ட்வேர் ப்ராஜக்ட்டிற்கு உன்னுடைய பணம் கிடைக்கும் என்பதினால்தான்! மற்றபடி ரோமியோக்கள் போல் உன் அழகில் மயங்கி என்று நினைத்து விட்டாயா?'' என நிறுத்தி அதற்கும் அசூயையாய் தலையை வெட்டியவன், ''சே... சே...! நான் அந்த ரகம் இல்லை. காசை விட்டெறிந்தால் என் காலில் ஆயிரம் அழகிகள் தவம் கிடப்பார்கள். தி இஸ் அமெரிக்கா. யூ.எஸ். அதைப் புரிந்து கொள் பேபி... சரி ஓ.கே...! இனியும் உன்னுடன் பேசி என்னுடைய நேரத்தை வேஸ்ட் பண்ண விரும்பவில்லை. கிளம்புகிறேன்...! பை...! குட் பை...!'' என்ற படி பெரிய டாட்டா ஒன்றைக் காட்டிவிட்டு விறுவிறுவென ரெஸ்ட்டாரண்ட்டை விட்டு நடக்க ஆரம்பித்து விட்டான் பிரதீபன்.

அவள் அப்படியே எவ்வளவு நேரம் சிலை போல் உட்கார்ந்திருந்தாள் என்று அவளுக்கே தெரியாது.

ரெஸ்ட்டாரண்ட் பணியாள் பில்லுக்காக மீண்டும் மீண்டும் அவளை அழைத்தபோது தான் உணர்வுக்கு வந்து எழுந்தாள்.

ரெஸ்ட்டாரண்டை விட்டு வெளி வந்து காரில் ஏறிய போது ஓரளவு பாரம் விலகி மனது தெளிவடைவது போலவும் உணர்ந்தாள்.


அதே உணர்வோடு தனது மேல் படிப்பு ஆசையை துரத்தி விட்டு உடைமைகளை பாக் செய்து இந்தியாவிற்கான பிளைட்டில் ஏறினாள்.

நேராக பெங்களூர் வந்து இறங்கி அவளது குடும்ப நலன் விரும்பியும், அப்பாவின் நெருங்கிய நண்பரு



மான ஆடிட்டர் ராமநாதன் அங்கிள் முன் வந்து தான் நின்றாள்.

''உங்கள் விருப்பப்படியே அப்பாவின் பிஸினஸை கவனிக்க வந்து விட்டேன் அங்கிள்!'' என உற்சாகமாய் அவள் சொன்னபோது, அவளுக்கே தானா இவ்வளவு மாறிவிட்டோம்? என்று ஆச்சரியமாகவே இருந்தது.



# 2

அடுத்து குன்னூருக்குச் சென்ற அழகுரதி சென்ற இடம் எம்.ஆர். ஹாஸ்பிடல் மற்றும் மறுவாழ்வு சிகிச்சை மையம்.

அங்கு தான் அவளது அண்ணன் 'தனா அண்ணா...' என அவள் செல்லமாய் அழைக்கும் தனசேகரனை சிகிச்சைக்காக சேர்த்திருந்தார்கள்.

அளவுக்கதிகமாக போதை வஸ்துகளை உட்கொண்டிருந்ததால் சுயநினைவு இழந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்திருந்தார்கள்.

கண்ணாடி ரூம் ஒன்றில் பெட்டில் வைக்கப்பட்டிருந்த அவனை கண்ணாடி வழியாகத்தான் அவளால் பார்க்க முடிந்தது.

அவளுக்கு பலத்த அதிர்ச்சிதான்!

செய்தியாய் கேட்டதைவிட நிலைமையை நேரில் பார்க்கும்போது கண்களில் நீர் தாரை தாரையாய் கோர்த்து வழிந்தது.

தனா எப்படி துறுதுறுவென வருவான்? படிப்பில் படு சுட்டி, காலேஜில் கோல்ட் மெடலிஸ்ட், அப்பாவிடம் இருந்து தேயிலை பிஸினெஸை கையில் எடுத்த ஒரே வருடத்தில் பத்து லட்ச ரூபாய் அதிக லாபம் ஈட்டி அப்பாவின் பாராட்டைப் பெற்றவன்!

அது மட்டுமா?

தங்கையான அவள் மீதும் அவனுக்கு அளவு கடந்த பாசம் உண்டு. 'ரதிம்மா... ரதிம்மா...' என்று தான் அன் பொழுக அழைப்பான்.

கடைசியாகச் சென்ற மாதம் போனில் பேசிய போது கூட, ''அப்பாவையும் நாம் இழந்து விட்டோம். இனி சொந்தமாக இருப்பது நாம் இருவர்தான். எதற்காக நாம் பிரிந்து தனித்தனியாக வாழ வேண்டும்? யூ.எஸ். மேற் படிப்பு எல்லாம் போதும், கிளம்பி வாயேன்மா...!'' என்று கெஞ்சலாய் கேட்டிருந்தான்.

அப்போதுகூட கூட அழகுரதி, ''ஐயோ! கவலைப் படாதீர்கள் தனா அண்ணா... இன்னும்... ஒரு ஆறு மாதம். ஜஸ்ட் சிக்ஸ் மன்த்ஸ் என் படிப்பெல்லாம் முடிந்து விடும். நானும் ஆர்க்கிடெக்ட். மாஸ்டர் டிகிரியோடு இந்தியா வந்துவிடுவேன். அதன் பின் உன்னுடைய பாசமழையில் தான் தினம் தினம் நனையப் போகிறேன்...? அதனால் ப்ளீஸ்... எனக்காக கொஞ்சம் காத்திரு... தனா... அண்ணா...!''

அவளும் கொஞ்சலாகவே அவனிடம் கொஞ்சினாள்.



ஆனால் இரண்டே மாதங்களில் எல்லாம் தலைகீழாய் போய்விட்டது.

பாழாய்ப் போன போதைப் பழக்கம் அவனை எப்படித் தான் பிடித்துக் கொண்டதோ... அதை தினம் தினம் எடுத்து அதற்கு அடிமையாகி... ஒரு நாள் அதை அதிக மாக உட்கொண்டு பங்களாவிலே மயங்கிக் கிடந்து... மேனேஜர் பார்த்து பதறிப் போய் அவளுக்கு போன் செய்தது எல்லாம் பழைய விஷயம்.

அவளும் பதறி உடனே பெங்களூரில் இருக்கும் ராமநாதன் அங்கிளுக்கு போன் செய்ய, அவர் உடனே குன்னூர் ஓடி வந்து தனசேகரனை நல்ல ஹாஸ்பிடல் ஒன்றில் சேர்த்து... அவன் உடல்நிலை சரியாக ஆறு மாதத்திற்கு மேலாகும், நீ இந்தியா வருவதைத் தவிர வேறு வழியில்லை...'' என்று சொல்லிவிட, அவள் ஆர்க்கி டெக்ட் படிப்பிற்கு அவசரமாய் குட்பை சொல்லிவிட்டு கிளம்பி விட்டாள்.

ஒரு பெருமூச்சுடன் நடந்ததை நினைத்தபடி டாக் டரின் அறைக்குப் போனாள்.

அந்த வழுக்கைத் தலை டாக்டர் புன்னகையோடு அவளை எதிர்கொண்டார். வாடி வதங்கியது போல் அவ ளது அழகான முகம் போனதைக் கண்டு நன்கு உணர்ந் தவராய், ஆறுதலான வார்த்தைகளைத் தெரிவித்தார்.

''டோண்ட் வொரிம்மா...! எல்லாவற்றையும் சரிப் படுத்திவிடலாம். எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது...'' என்றார்.

டாக்டரின் வார்த்தைகளில் கொஞ்சம் தெம்பு கொண்ட வளாய் நிமிர்ந்தாள்.

''என்னதான் அண்ணாவுக்கு ஆயிற்று டாக்டர்...?''

''டிரக் அடிக்ட்..! போதைப் பழக்கம் எப்படியோ... அவரை பிடித்து விட்டது. அபின், பிரவுண் ஷுகர் வரி சையில் இரண்டையும் கலந்த ஒரு போதைப் பொருளை அளவுக்கதிகமாக எடுத்திருக்கிறார். அது மூளையை மயங்கச் செய்து சுய நினைவை இழக்கச் செய்து விட்டது...''

''அப்படியானால் கோமா ஸ்டேஜிற்கு சென்று விட் டாரா டாக்டர்?'' என்றாள் பயத்துடன்.

''நிச்சயமாக அப்படி இல்லை. ஆனால் இரண்டு நாள் சிகிச்சை அளிக்க தாமதித்திருந்தால் அந்த நிலைக்குப் போயிருப்பார்...'' என்றவர் மறுபடியும் முகம் முழுவ தையும் புன்னகையைக் கொண்டு வந்தவராய், ''நடக் காததைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? பை காட்ஸ் கிரேஸ், உன் அண்ணனுக்கு அந்த நிலை இல்லை. இது ஜஸ்ட் டிப்ரஷன் ஆஃப் மைண்ட். இதை எளிதாகச் சரி பண்ணிவிட முடியும். பட் வி நீட் டைம். கொஞ்சம் மாதங்கள் பிடிக்கும். அதுவரை அவர் எங்கள் கண்காணிப்பில் தான் முழுக்க முழுக்க இருக்க வேண் டும். அது முக்கியம்...''

டாக்டர் விளக்க புரிந்து கொண்டவளாய் தலையை மெல்ல அசைத்தாள் ரதி.

ஆனாலும் அவளுக்கு அண்ணன் கண் திறந்து பார்க்க மாட்டானா? அவனிடம் ஓரிரு வார்த்தையாவது பேசிவிட வேண்டும் என்று ஆவல்!

டாக்டரிடம் அதையே சொல்ல மீண்டும் மென்மை யாய் சிரித்தார் அவர்.



''அவசரப்பட வேண்டாம் கண்மணி. உன் அண்ணனது நிலைக்கு நீ அவரைப் பார்க்கப் பார்த்துப் பேச இன்னும் இரண்டு மாதங்கள் வரை ஆகலாம்...'' என்றார்.

''டாக்டர், என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் அவளும் அதிர்ந்து.

''உன் அண்ணனை நினைவுக்குக் கொண்டு வருவது பெரிய விஷயமல்ல. போதை வஸ்துக்களால் அவரது மூளை நரம்புகள் எல்லாம் பலவீனம் கொண்டுள்ளது. அதனால் அவருக்கு அதிர்ச்சி எதுவும் கொடுக்காமல், சிறிதும் உணர்ச்சி வசப்படாமல் அவரை அப்படியே முழு நினைவை கொண்டு வந்து அவர் ஒரு பக்குவப்பட்ட நிலையை அடைய வேண்டும். அதன் பின் தான் நீ அவரிடம் பேச வேண்டும். டோண்ட் வொரி! இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் எல்லாம் சரியாகி விடும்...''

டாக்டர் சாதாரணமாய் சொல்லி விட்டார்.

என்ன... கண்ணாடி ரூம் வழியாக பொம்மை போல் அண்ணனை மூன்று மாதங்கள் பார்த்துவிட்டுச் செல் வதா? பேசவே முடியாதா? என்ன இது?

தொண்டையை திக்கென அடைத்த உணர்வுகளை அடக்கிக் கொண்டு டாக்டருடன் நடந்தாள்.

டாக்டர்தான் கொடுக்கப் போகும் ட்ரீட்மெண்ட்டு களைப் பற்றியெல்லாம் விலாவாரியாய் விளக்கினார்.

குன்னூரின் பிரசித்தி பெற்ற மருத்துவமனை, டாக்டரும் இதற்காகச் சிறப்புப் படிப்பு படித்து பயிற்சி பெற்றவர். இவரை தைரியமாக நம்பலாம். எப்படியும்

அண்ணனை பழைய 'தனா'வாக ஆக்கி அவளிடம் ஒப்படைத்து விடுவார்.

நம்பிக்கை பொங்க டாக்டரிடம் விடை பெற்று காரை நோக்கி நடந்தாள்.

ஹாஸ்பிடல் காம்பவுண்டை விட்டு வெளியே காரை எடுத்து செலுத்தியபோது, பனி படர்ந்த புல்வெளிகள், மேகம் படர்ந்த மலைக் குன்றுகள், மெல்லிய குளிருடன் இதமான சூரிய ஒளி... அடர்ந்த மரங்களுக்கு நடுவே கோடு போன்ற பாதை... என எல்லாமே இயற்கை அழகோடு ரம்மியமாய்த் தெரிந்தன.

மற்ற நேரம் என்றால் இதைப் பார்த்ததும் அப்படியே காரை நிறுத்தி, அங்கே நின்று மணிக்கணக்காய் இயற்கையை ரசித்திருப்பாள்.

ஆனால்... இப்போது...?

எதையும் ரசிக்கும் மனநிலையில் அவள் இல்லையே...?

ஏதோ ஒரு குழப்பம்! அவள் தீர்மானித்த வாழ்க்கை எல்லாம் அவள் கையை விட்டு போவது போன்ற உணர்வு!

சூழ்நிலைக் கைதியாய் அவளது ஆர்க்கிடெக்ட் கனவுகளை எல்லாம் கலைத்துவிட்டு, தேயிலை எஸ்டேட்டில் உட்கார வேண்டிய கட்டாயம்!

ஒரே மாதத்தில் என்னென்னவோ நடந்து, அவள் வாழ்க்கையே மாறிவிட்டதே.

இருந்த ஒரே சொந்தமான அண்ணனிடம் கூட ஒரு வார்த்தை பேச முடியாமல், அவனும் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் அகப்பட்டுக் கொண்டு...




ஆமாம் தனா... அண்ணா... எப்படி இந்த போதைப் பழக்கத்திற்கு அடிமையானான்?

ப்ரெண்ட்ஸ்... பெண்கள் என்றாலே பிடிக்காமல் காத தூரம் ஓடுவானே... பின் எப்படி?

அந்தக் கேள்விக்குத்தான் இதுவரை அவளுக்கு விடை கிடைக்கவில்லை!

ராமநாதன் அங்கிளிடம் கேட்டபோது கூட, 'எனக்கும் புரியவில்லையே... எப்படிம்மா இது சாத்தியம்?' என உதடுகளைத்தான் பிதுக்கினார்.

அதனால் அதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும் என தீவிர யோசனையில் ஆழ்ந்தாள் அழகுரதி.



# 3

அழகுரதி தன் பங்களாவிற்குச் சென்று ஒரு மணி நேரம் ஓய்வெடுத்துவிட்டு எஸ்டேட் அலுவலகத்திற்கு கிளம்பிவிட்டாள்.

மேனேஜரிலிருந்து பணியாளர் பலர் வரை அவள் பார்த்த முகங்கள் தான். அப்பாவுடன் எத்தனையோ முறை வந்திருக்கிறாளே!

எல்லோரும் பலமாய் வரவேற்று பாசத்தைக் காட்டினர். ''நல்ல வேளை நீங்க வந்தீங்கம்மா. நீங்க தான் எங்களை

வழி நடத்தணும்...!'' என்று மேனேஜர் சொன்ன போது அவளுக்கு சங்கடமாய்த்தான் இருந்தது.

அவளுக்கு இந்த டீ எஸ்டேட் உற்பத்தி, விற்பனை, சந்தை நிலவரம் என எதுவும் தெரியாதே! சரி படித்துக் கொள்ள வேண்டியது தான் என்ற நினைப்புடன் உள்ளே நுழைந்தாள்.

அலுவலக நிர்வாக அறை. தனசேகரன் மேனேஜிங் டைரக்டர்... என பளபளத்த முகப்பு போர்டு. அண்ணன் இங்குதான் அமர்ந்து வேலை பார்த்திருக்கிறான். அதையே தனதாக மாற்றிக் கொண்டாள்.

அடுத்து அவளுக்கு மேனேஜர் அறிமுகப்படுத்திய நபர் மிஸ். நிம்மி. செகரெட்டரி அண்ணனின் நேர்முக உதவியாளினி.

இருபது வயதில் தயக்கமாய் புன்னகைத்து கை குவித்த நிம்மியை இருக்கையை விட்டு எழுந்து சென்று ஆவலாய் கட்டிக் கொண்டாள் அழகுரதி.

அண்ணன் தனசேகரன் போனில் அடிக்கடி அவளைப் பற்றிச் சொல்லியிருந்தது நினைவில் ஓடியது. 'நிம்மி தான் எல்லா கணக்கு வழக்குகளையும் சரி பார்த்து என் முன் வைப்பாள். நான் ரப்பர் ஸ்டாம்ப் போல் கையெழுத்து மட்டும்தான் போடுவேன். என செகரெட்டரி வேலையில் படு சுட்டி!' எனப் புகழ்ந்திருந்தான்.

ஒரு வகையில் அழகுரதிக்கு பெரும் நிம்மதியாகவும் இருந்தது. எங்கு தொழில் பற்றி கணக்கு வழக்குத் தெரியாமல் திணற வேண்டுமே என்ற கவலையும் குறைந்தது.



அதனாலே, ''இனிமேல் எனக்கு செகரெட்டரியும் நீங்கள் தான்!'' என்றாள்.

நிம்மி பதறி, ''ஐயோ! நீ என்றே கூப்பிடுங்கள். உங்கள் வயதுதான் எனக்கும்!'' என்றாள்.

''ஓ.கே. நிம்மி... நான் அப்படியே கூப்பிடுகிறேன். நீயும் என்னை ரதி என்றே அழைத்துவிடு. சரியா?'' என்றாள் தோழியிடம் பேசுவது போல்.

''ஓ.கே. மேடம்...! ஆனால் ப்ளீஸ்... மேடம்... இந்த மேடம் என்று அழைப்பது தான் கொஞ்சம் மரியாதை கொடுப்பது போல் ஆபீஸை பொறுத்தவரையில் மற்றவர்கள் பார்ப்பதற்கும் நன்றாக இருக்கும்... மேடம். அதனால் சரியா மேடம்? இப்படியே நான் 'மேடம்' போட்டு அழைக்கட்டுமா மேடம்? என்ன சொல்கிறீர்கள் மேடம்? உங்களுக்கு ஓ.கே. தானா மேடம்?''

நிம்மி சிரிப்புடன் கேட்க அவளும் அடக்க முடியாமல் கலகலவெனச் சிரித்து விட்டாள்.

''ஐயோ! ஒரு மேடம் போதும் நிம்மி...!'' என அவள் தோள்களைத் தட்டினாள்.

நிஜமாகவே பேசிய ஒரு ஐந்து நிமிடத்திலேயே இருவரும் நீண்ட நாள் பழகிய தோழிகள் போல் ஆகி விட்டனர். அழகுரதிக்கு எடுத்த எடுப்பிலேயே நிம்மியை ரொம்பவும் பிடித்துப் போயிற்று.

நிம்மதியும் பெற்றோரை இழந்து மெர்ஸி ஹோம் ஒன்றில் வளர்ந்து படித்து உருவானவள். அதனாலே அண்ணன் இரக்கப்பட்டு நல்ல சம்பளத்தில் இந்த செகரெட்டரி வேலையை கொடுத்ததாய்ச் சொன்னாள்.

அவள் தங்கியிருப்பதும் அலுவலகத்தை ஒட்டிய எஸ்டேட் குவார்ட்டர்ஸ் தனியான அறை ஒன்றில்தான் என்பதை அறிந்ததும் அழகுரதி யோசித்தவள், ''நிம்மி, நீ நாளை முதல் என்னுடன் வந்து பங்களாவில் தங்கி விடு. நான் ஒருத்தி ஒரு பெரிய பங்களாவில் தனியே இருப்பது ரொம்பவும் போரடிக்கத்தான் செய்கிறது...!'' என்றாள்.

ஆனால் கேட்ட நிம்மி பதறத்தான் செய்தாள்.

''ஐயோ...! வேண்டாம் மேடம்... உங்களுடன் நான் எப்படி...? அது... அது... சரியாக வராது... மேடம்...''

''ம்ஹூம்! அது சரியாகத்தான் வரும். நாளை முதல் உன் உடைமைகளோடு என் பங்களாவிற்கு நீ வந்து விடுகிறாய். இது உன் மேடத்தின் கட்டளை...!'' என உரிமையாய்ச் சொல்ல நிம்மியும் சிரித்து விட்டாள்.

பதிலுக்குச் சிரித்த அழகு ரதியும், ''பின் என்ன நிம்மி? தோழிகள் போல இருவரும் பழகிவிட்டோம். இனி இந்த பார்மாலிட்டிஸ் எல்லாம் பார்க்கக் கூடாது...'' என்றவள், அவள் இன்னும் முதலாளி என்ற பயத்துடன் ஓரளவு விழிப்பதைப் பார்த்து, மறுபடியும் அவள் பக்கம் போய் அவளை இறுகக் கட்டிப் பிடித்தாள். ''அன்பை வெளிப் படுத்த 'பேக்கு' மாதிரி விழிக்காமல் இப்படி ஒரு சின்ன அணைப்பு கூட செய்யலாம்... நிம்மி!'' என்றாள்.

நிம்மியும் ஒரு கணம் அதிர்ந்தவள், ''மேடம் என்னையா பேக்கு மாதிரி என்கிறீர்கள்?'' என்றாள்.

அழகுரதி ஸ்டைலாக காது மடல்கள் அதிர தலையாட்டி, ''ம்ம்... உன்னைத்தான்...! அதான் நாம் தோழிகள்




ஆகி விட்டோமே... இனி நாம் ஒருவரையொருவர் கிண்டல் செய்வதில் தப்பில்லையே...?' என்றாள் வழக்கமான கிண்கிணிச் சிரிப்போடு.

''நீங்கள் சொன்னால் சரிதான் பேக்கு மேடம்...!''

நிம்மியும் சொல்லிவிட்டு பதிலுக்குச் சிரிக்க, ''ஏய்... விட்டால் என்னையே கிண்டல் செய்கிறாயா?'' என்றபடி அவள் காதைப் பிடித்துப் போலியாய கிள்ளப் போனாள்.

அப்போது, ''இது என்ன அலுவலகமா? அல்லது இரண்டு விடலைப் பெண்கள் கூத்தடிக்கிற இடமா?'' என்ற கணீர் குரல் கேட்டு இருவருமே ஸ்தம்பித்து திரும்பினர்.

அறை வாயிலில் வாட்ட சட்டமாய் நெடு நெடு உயரத்துடன் கம்பீரமாய் அவன் நின்று கொண்டிருந்தான்.



## 4

அந்த கணீர் குரல் கேட்டு இருவரும் திடுக்கிட்டு விட்டார்கள்.

ஆனால் அதைவிட அதிர்ச்சியாய் அவன் எவ்வித அனுமதியும் கேளாமல், அவன் பாட்டுக்கு அறையினுள் நுழைந்து சீட் ஒன்றில் கம்பீரமாக உட்கார்ந்து கொண்டான்.

கால் மடித்துப் போடாத குறையாய் இருவரையும் பார்த்தான்.

''ஹலோ மிஸ்டர், யார் நீங்க?''

அவன் பதில் சொல்லாமல் ஓரிரு நிமிடம் ஆழமாய் பார்த்துவிட்டு, ''கூல் டவுண்... லேடீஸ். முதல்ல... உங்க சீட்டுல உட்காருங்க...!'' என்றது இருவருக்குமே ஆச்சரியத்தைக் கூட்டியது.

நம் ரூமுக்குள் நம்மையே உட்காரச் சொல்லுகிற இவன் யாராய் இருக்கும்?

அவர்களது கேள்விகளுக்கு பதில் அவனிடமிருந்து நிதானமாக வந்தது.

''உங்க கம்பெனிக்கு புதுசா வந்திருக்கிற ஆடிட்டர் 'சரவணன் நான்தான்...!'' என்றான்.

''ஆடிட்டரா... நான் தான் இந்தக் கம்பெனியோட எம்.டி. எனக்குத் தெரியாம... யாரு நீங்க?''

குரலை உயர்த்தி சினம் பொங்கக் கேட்டவளை கைகளை உயர்த்தி சாந்தப்படுத்தினான் அவன்.

''என்னை ராமநாதன் அங்கிள் அப்பாயிண்ட்மெண்ட் பண்ணியிருக்காங்க. மற்ற விஷயங்கள் எல்லாம் அவங்களைக் கேட்டுக்கோங்க. இப்போதைக்கு இந்த அறிமுகம் நம்மிடையே போதும்னு நினைக்கிறேன்...''

சொல்லியபடி எழுந்து விட்டான் அவன். பின் அவள் பதிலுக்குக் காத்திராமல் அங்கிருந்து விறுவிறுவென அகன்று விட்டான்.

புயலடித்து ஓய்ந்தது போல் இருவரும் ஒரு கணம் விழித்தார்கள்.

முதலில் சுதாரித்தவள் அழகுரதிதான்!

'வந்தான். விரட்டினான். அவன் பாட்டுக்கு சென்று விட்டான். திமிரைப் பாரு...!'



'மேடம், அதுவும் உங்ககிட்டயே இவ்வளவு அலட்சியமா... அகங்காரத்தோட... ஆனா... பாருங்க ஆளு வாட்டசாட்டமா ஹாண்ட்சம்மா கம்பீரமா இருக்கான். ஆனா... நீங்க சொன்ன மாதிரி திமிர்தான் ஜாஸ்தி.'

நிம்மி சொன்னதும், அதுவும் கம்பீரமா ஹாண்ட்சம்மா என விளித்ததும் தான்... அவளுக்கு பொட்டிலடித்த மாதிரி மூளையில் ரிவைண்ட் ஓடி அவனது களையான அழகு மறுபடி பிரதிபலித்தது.

நிம்மி சொல்வது உண்மைதான். ஹாண்ட்சம் தான். அவனிடம் வசீகரமான ஒருவித அழகுதான்...! அவளும் எத்தனையோ நபர்களை தினம் தினம் சந்திக்கிறாளே... அவர்களிடம் எல்லாம் இல்லாத ஒரு வசீகரம்... ஒரு விதமான காந்தத் தன்மை இவனிடம் மட்டும் எப்படி?''

அப்படி அந்த காந்த வசீகரிப்பினால் தானோ அவளும் செய்வதறியாமல்... சில மணித்துளிகள் ஊமையாகி விட்டாளோ?

இல்லையெனில், 'கெட் அவுட்! கெட் லாஸ்ட்!' என்றெல்லாம் கத்தி ரகளை பண்ணியிருப்பாளே?

தனக்குத்தானே கேட்டு விழித்துக் கொண்டிருந்தவளை பக்கத்திலிருந்த நிம்மியின் குரல் மறுபடி கலைத்தது.

''மேடம், நம் கம்பெனியோட ஆடிட்டர் வயசாயிட்டதால வேலையில இருந்து ரிலீவ் ஆகி போயிட்டாரு. இந்த ஆள் சொல்றதைப் பார்த்தா அதனால நம்ம கம்பெனியோட வெல்விஷர் ராமநாதன் சார்தான் புது ஆடிட்டரா இவரை ஏற்பாடு பண்ணியிருப்பாங்களோ...?''

அழகுரதி யோசித்தாள்.

''அவரையே கேட்டிருவோம்...'' என்றபடி மேஜையிலிருந்த போனின் ரிசீவரை எடுத்தாள்.

மறுமுனை உயிர் பெற்றதும், ''அங்கிள்...'' என அவள் ஆரம்பிக்கும் முன்னரே, ''என்ன ரதி? சரவணன் அதற்குள் அங்கு வந்து விட்டானா? எதாவது ரகளை பண்ணியிருப்பானே?'' என்றார் சிரிப்போடு.

அழகுரதிக்கு மூச்சு வாங்கியது. அதனாலே மூச்சு விடாமல் படபடவென பொறிந்தாள்.

''அங்கிள்! யாரு அங்கிள் அது? என்னோட கம்பெனியில் நுழைஞ்சு என்னையே விரட்டுறான். கேட்டா ஆடிட்டர்ன்னு சொல்றான். நீங்க அப்பாயிண்ட்மெண்ட் பண்ணியிருக்கீங்கன்னு... திமிராப் பேசறான். அவனை... அவனை...'' என்றவள் சட்டென குரலை மாற்றி, ''அவரை எனக்கு சுத்தமாய்ப் பிடிக்கவில்லை...!'' என்றாள்.

''எனக்கும் தான்!'' என்றாள் நிம்மி பக்கத்தில் நின்று ஒத்து ஊதுபவளாய்.

மறுமுனையில் ராமநாதன் அடக்க முடியாமல் சிரித்துக் கொண்டிருப்பது துல்லியமாய் அவளுக்குக் கேட்டது.

''என்ன அங்கிள் சிரிக்கறீங்க?''

''ரதி, சரவணன் எப்போதும் அப்படித்தான். தடாலடியாய் போய்த்தான் யாருகிட்டயும் அறிமுகமாவான். ஆனாப் பாரு. அவன்கூடப் பேசிப் பழகின ரெண்டு நாளில எல்லோருக்கும் அவனைப் பிடிச்சுப் போயிரும்...''



அங்கிள் சொல்ல... ''என்ன இது...? உள்ளபடியே... உண்மையாகவே... அங்கிள் சொல்வது போல் நடந்து விடுமோ? என்னதான் வாய் அவனை வசை பாடினாலும் மனதில் அவனது அந்தக் காந்தக் கண்களும் குறும்பு படர்ந்த புன்னகையும், முகத்தில் தாண்டவமாடும் அந்த அசாத்திய கம்பீரமும் அப்படியே மனத்திரையில் ஒட்டிக் கொண்டு, மீண்டும் மீண்டும் நினைவு படுத்தி பிரதிபலித்துக் கொண்டுதானே இருக்கிறது?

இருந்தாலும் உள்ளதை மறைத்தவளாய், ''ஆனால்... எனக்குப் பிடிக்காது அங்கிள். அவன் ரொம்ப திமிர்க்கார்னாய் கர்வம் பிடிச்சவனாய் தெரியறான்...'' என்றாள்.

அவள் மறுபடியும் மூச்சு வாங்க பேசி முடித்ததும் ராமநாதன் அமைதியாக, ''ஆனா அவன் விஷயம் உள்ளவன் ரதி...!'' என்றார்.

''என்ன அங்கிள் சொல்றீங்க?''

''ரதிம்மா, அந்த சரவணன் பலாப்பழம் மாதிரி... பார்க்கிறதுக்கு கரடு முரடா முட்களாத் தெரிவான். ஆனா பலாச்சுளை மாதிரி நல்ல மனசு கொண்டவன். மேலும் அதைவிட முக்கியமான ஒரு விஷயம், ஒரு பாயிண்ட் நான் அவனை உன் கம்பெனிக்கு ஆடிட்டரா அனுப்பினதுக்கு இருக்கு...!''

''என்ன அங்கிள் அது?''

''பலவிதமான ஆங்கிளில் யோசிச்சு உண்மையான காரணத்தை கணக்குகளை போடுவதில் அவன் திறமைசாலி, மேலும் தன் சம்பளத்தை தவிர ஒரு நயா

பைசாக்குகூட ஆசைப்பட மாட்டான். அதே நேரம் தப்பு பண்றவங்களை லேசில விடவும் மாட்டான்...''

என்ன இது... அங்கிள் சினிமா டயலாக் போல என்னென்னவோ சொல்றாரா...? எனக் குழம்பியவள், ''அங்கிள் நீங்க சொல்றது ஒண்ணும் புரியலையே அங்கிள்?'' என்றாள்.

ராமநாதன் மறுமுனையில் ஒரு நிமிடம் மௌனமாய் இருந்துவிட்டுப் பேசினார்.

''ரதிம்மா...''

''சொல்லுங்க அங்கிள்...''

''இப்போ நான் சொல்லப் போறது உனக்கு அதிர்ச்சியா இருக்கும். ஆனா... அதுதான் உண்மை...''

''என்ன அங்கிள் அது?''

''உன்னோட ராயல் கிங் டீ கம்பெனி இப்போ ஒரு வருஷமா மிகுந்த நஷ்டத்தில் ஓடிக்கிட்டு இருக்கு... கிட்டத்தட்ட வருடத்துக்கு ஐம்பது கோடி நஷ்டம்...''


''அங்கிள்! என்ன சொல்றீங்க?''

அழகுரதி அதிர்ச்சியாக ராமநாதன் மெல்ல விளக்கினார்.

''உண்மையைத்தான் சொல்றேன் ரதிம்மா. உன்னோட அண்ணன் போதைப் பழக்கம் ஏற்பட்டு சரியா கவனிக்காததுனால கம்பெனி நஷ்டத்துக்கு போயிட்டு. இப்படியே போனா ஆறு மாசத்தில கம்பெனியை இழுத்து மூடிட வேண்டியதுதான்...!''

அவர் சொல்லச் சொல்ல நிலை கொத்திய கரு விழிகளுடன் பேச்சிழந்தாள் அழகுரதி.





# 5

ராமநாதன் அங்கிள் எல்லாவற்றையும் விளக்கமாய் விரிவாய் கூறிவிட்டார்.

''இதோ பார் ரதிம்மா, இதை முன்னாலயே உன் கிட்டச் சொன்னா நீ பயந்து அரண்டு போய்விடக் கூடாதுன்னு தான் சொல்லலை. மேலும் உன் தந்தை எவ்வளவோ பாடுபட்டு உருவாக்கின இந்த டீ எஸ்டேட் உன்னோட கையை விட்டு போயிரக்கூடாதுன்னு தான் என்னோட ஆசை. அதனால தான் இது போன்ற நஷ்டக் கம்பெனிகளோட கணக்கு வழக்குகள், வியாபார டீலிங்குகளைப் பார்த்து சரி பண்ணுற ஸ்பெஷலிஸ்ட் ஆன ஆடிட்டர் சரவணனை உன்கிட்ட அனுப்பி இருக்கேன். அந்த சரவணனுக்கு கணக்கு வழக்குகள் மட்டுமில்ல. இந்த தேயிலை உற்பத்தி பிஸினசும் தண்ணி பட்ட பாடு தான். பத்து வருஷங்களுக்கு மேலா பல டீ எஸ்டேட்டுகள்ல வேலை செஞ்சு பலவிதமான அனுபவங்களைப் பெற்றவன். நிறைய சூட்சுமங்கள் தெரிந்தவன். அதனால அவனை உபயோகித்துக் கொள்ள வேண்டியது உன்னோட பொறுப்பு...!''

சொல்லிவிட்டு ரிசீவரை வைத்து விட்டார் ராமநாதன்.

அன்று இரவு முழுவதும் அழகு ரதியால் தூங்க முடிய வில்லை. நல்ல லாபத்தில் ஓடிக் கொண்டிருந்த அவளது ட கம்பெனி எப்படி நஷ்டத்திற்கு வந்தது? தனா அண் ணாவின் கவனக் குறைவா? அல்லது அவரை யாரும் ஏமாற்றி விட்டார்களா?

என்ன நடந்தது?

ஆனால் அங்கிள் சொல்வது போல், அவளுக்கு வேறு வழியில்லை. இந்த தேயிலைத் தொழிலில் அவளுக்கு எந்த முன் அனுபவமும் கிடையாது.

நிம்மி கம்பெனியின் செகரெட்டரி என்று தான் பெயர். அவளுக்கும் ஒன்றும் தெரியவில்லை. கையைப் பிசை கிறாள்.

ஆக... அங்கிள் சொல்வது போல், இந்தத் தொழிலில் அனுபவம் உள்ள அந்தத் திமிர்க்காரன் தான் ஒரே வழி!

எப்படியோ... அவனை சகித்துதான் ஆக வேண்டும்!

யோசித்து அந்த முடிவிற்கு வந்தாள் அழகுரதி.

மறுநாள் அலுவலகத்திற்கு வந்தவளுக்கு பெரும் ஆச்சரியம் காத்திருந்தது.

அவள் வருவதற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே சரவணன் நுழைந்து எல்லாப் பிரிவுகளிலும் கணக்கு களை குடைந்து கொண்டிருந்தான்.

அவளைப் பார்த்ததும், 'குட் மார்னிங் மேடம்!' என் றொரு தலையசைப்புடன் அவன் பாட்டுக்கு குறிப்பு களை எடுத்துக் கொண்டு தான் கொண்டிருந்த வேலை யில் கவனமாய் இருந்தான்.



ஒரு அரை மணி நேரம் சென்றிருக்கும்.

அவளது அறைக் கதவை லேசாக தட்டியபடி நுழைந் தவனைக் கண்டு இம்முறை அழகுரதிக்கு வியப்புக் கூடியது.

நேற்று போல் முகத்தில் அகம்பாவக் களை இல் லாமல் மென்மையாய் வழிந்த வசீகரப் புன்னகையொன்று அவளை சாந்தப்படுத்த அவளும், ''வாங்க, மிஸ்டர் சரவணன்!'' என்றாள் லேசான புன்னகையோடு.

''மிஸ். ரதி...'' என ஆரம்பித்தவன் கடகடவெனப் பேசினான்.

''என்னைப் பத்தி ராமநாதன் அங்கிள் எல்லாத்தையும் சொல்லியிருப்பாரு. எனக்கு இந்தத் தேயிலைத் தோட்ட கணக்குகள் எல்லாம் அத்துப்படி. சரியா ஆறே மாசத்தில் கம்பெனியோட நஷ்டப் பிரச்சினையை எல்லாம் கண்டு பிடிச்சு திரும்பவும் கம்பெனியை லாபத்தில் கொண்டு வர வேண்டியது என்னோட பொறுப்பு. என்னோட சம்பளமா ஐம்பதாயிரம் எதிர்பார்க்கிறேன்... டூ யூ... அக்ரி?''

''யெஸ் ஐ... அக்ரீ...!'' என்றாள்.

''அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம்... கம்பெனியில எனக்கு முழு சுதந்திரம் வேணும். எந்த டிபார்ட்மெண்டுலயும் போய் தேவைப்படும் விபரங் களைச் சேகரிக்க எனக்கு அதிகாரம் வேணும்... ஆனா...'' என ஒரு நிமிடம் நிறுத்தியவன், தெளிவான குரலில், ''ஆனா என்னை யாரும் அதிகாரம் செய்யக்கூடாது. அது

எனக்குப் பிடிக்காது. அதுக்காக என்னோட வொர்க் மேல சந்தேகப் படத் தேவையில்லை. வேலைங்கிறது எனக்கு மூச்சு மாதிரி. ரொம்ப சின்சியரா இருப்பேன்...''

அவன் மீண்டும் நிறுத்த சம்மதிப்பதற்கு அறிகுறியாய் தலையாட்டினாள் ரதி.

''அப்புறம் என்னோட அகாமடேஷன் நான் தங்குறதுக்கு...?'' என இழுத்தான் அவன்.

''கம்பெனி கெஸ்ட் ஹவுஸ் என் பங்களாவை ஒட்டி இருக்கு. அங்க நீங்க தங்கிக்கலாம்!''

''இட்ஸ் ஓ.கே...!''

அலட்சியமாய் தலையசைத்தான் அவன்.

அழகுரதி அன்று என்னவோ வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

நெடுநெடு உயரத்தில், ஆஜானுபாகுவாய் திண் தோள்களோடு பரந்த நெற்றியில் சுருள் முடிகள் படர, அடர்ந்த மீசையும் அடிக்கடி இறுக்கம் தளர்ந்து சிரிக்கும் உதடுகளின் வசீகரப் புன்னகையும், கண் கருவிழிகளை சடார் சடாரென சுழற்றிப் பார்க்கும் அவளது காந்தப் பார்வையும் அவளை என்னவோதான் செய்தது.

அவளுக்கு பிரதீபன் ஞாபகமும் வந்தது. பிரதீபனிடம் இந்த வசீகரத்தன்மை பார்த்துக் கொண்டே இருக்கக் கூடிய கவர்ச்சி எதுவுமே கிடையாதுதான். எப்போதும் சிடுசிடுவெனத்தான் இருப்பான்.



ஆனால் இந்த சரவணனிடம் விரட்டல் இருந்தாலும் அடுத்தவர்கள் ஆளுமை செய்கிற கவர்ச்சியொன்று இருப்பதாகவே நினைத்தாள்.

அதனாலே சரவணன் வெளி ஊரில் இருக்கும் தன் தாய் தந்தையர் பற்றி முன்பு தான் வேலை செய்த டீ எஸ்டேட்களைப் பற்றி எல்லாம் விலாவாரியாகச் சொல்லியும் எதுவும் அவள் காதுகளில் ஏறவில்லை.

அவன் எல்லாம் பேசி முடித்ததும், ''ஆமாம் சரவணன் உங்களைப் பற்றி... உங்க பேமிலி பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்...'' என்றாள்.


''சரிதான்... விடிய விடிய ராமாயணம் கேட்ட கதைதான்...'' என சரவணன் சிரிக்க, பக்கத்தில் நின்றிருந்த நிம்மியும் குபுக்கென சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.

அழகுரதிக்குத்தான் ஒரு மாதிரியாய் போயிற்று.

பின் சிரிப்பை நிறுத்திய சரவணன், அழகுரதியை ஒருவித ஆழமான பார்வை பார்த்தவாறு, ''பெண்கள் இப்படி பேசும்போது தன் கவனத்தைச் சிதற விட்டால், அதற்கு ஒரே ஒரு காரணம்தான்... அது...'' என நிறுத்தி விட்டு கண்களைச் சுழற்றியவன், ''மனசை அலைய விடும் ஆபத்தான காரணம் தான்...!'' என்றபடி எழுந்து விட்டான்.

அதே வசீகரப் புன்னகையை விசிறியபடி அங்கிருந்து அகன்று விட்டான்.

அப்படி எதை இவன் கண்டு பிடித்து இருப்பான்? என திடுக்கிடலாய் யோசித்தாள் அழகுரதி.



# 6

மறுநாள் காலையிலேயே அவளுக்கு போன் வந்து விட்டது.

''நான் சரவணன் பேசறேன்...'' என ஆரம்பித்தான்.

''சொல்லுங்க சரவணன்...''

''இன்னிக்கு புரோகிராம் என்ன?''

''நீங்களே சொல்லுங்க...''

''எஸ்டேட் முழுசையும் சுத்திப் பார்க்கலாம்ன்னு நினைக்கிறேன். அப்புறம் மேனேஜர்கிட்ட நேற்று பேசின போது தினக் கூலித் தொழிலாளிகள் சம்பள உயர்வு கேட்டிருக்கிறதா ஒரு விஷயத்தைச் சொன்னார். அதை நாம உடனே கவனிச்சாகணும். இல்லைன்னா அவங்க திடீர்ன்னு ஸ்டிரைக் பண்ணிவிடக் கூடிய அபாயம் ஏற்பட்டுவிடும்...''

''நீங்க சொல்றது புரியுது...''

''புரிஞ்சா மட்டும் போதாது. அவங்ககிட்ட நேர்ல போய் பேசணும். அன்பா பக்குவமாப் பேசி ஒரு மூணு மாசம் பொறுத்திருங்க. சம்பள உயர்வு கண்டிப்பா கிடைக்கும்ன்னு உறுதியை கொடுத்து அவங்களை நம்ப வைக்கணும்... ஏன்னா இப்போ உடனே அவங்களுக்கு



சம்பளத்தை உயர்த்த போதுமான பண்ட்ஸ் நம்மகிட்ட இல்ல...''

''புரியுது... புரியுது... சரவணன்...! நாம எப்போ அங்கே போகணும்...?''

''இன்னும் பைவ் மினிட்ஸ்ல நான் ரெடியாயிருவேன்...''

''நானும் ரெடிதான்...!'' என்ற அழகுரதி, ''ரெடியானதும் அவுட் ஹவுசை விட்டு வெளியே வாங்க சரவணன். நான் காரில ரெடியா இருப்பேன்...'' என்றபடி ரிசீவரை வைத்தாள்.

சொன்னது போலவே தனது மாருதியொன்றில் ஏறி ஸ்டார்ட் செய்து ஷெட்டை விட்டு வெளி வந்தபோது அவுட் ஹவுசில் இருந்து கையில் ஃபைலுடன் சரவணன் விறுவிறுவென வருவது தெரிந்தது.

கண்களில் ஸ்டைலான கறுப்புக் கூலிங் கிளாஸ். அவனது கம்பீரத்தை இன்னும் உயர்த்தி அவன் கதவைத் திறந்து காரில் ஏறும் வரை அவளை இமைக்காமல் பார்க்க வைத்தது.

''ஓ.கே... போகலாம்!'' என்றதும் பார்வையைத் திருப்பி ஆக்ஸிலேட்டரை மிதித்தாள்.

''மிஸ்... ரதி...'' என ஆரம்பித்தவன், ''உங்களை, ரதி. நீ... வா... போன்னு... உரிமையாய் அழைக்கலாமா...? உங்களுக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லையே...?'' என்றான்.

அவன் சொன்ன 'உரிமையாய்' வார்த்தை அவளை மழுங்கடிக்க அவளையறியாமல் தலையாட்டினாள் அவள்.

''எனக்கு நெருக்கமானவங்களை எல்லாம் நான் அப்படிக் கூப்பிடறதுதான் வழக்கம்...'' என இன்னொரு அஸ்திரத்தை அவன் ஏவிவிட, ''அப்படியே கூப்பிடுங்க... வித் பிளஷர்...!'' எனச் சொல்லி மறுபடியும் வேகமாய் தலையாட்டினாள்.

''ரதி... நேத்து கம்பெனியோட ஜர்னல் லெட்ஜர், அக்கவுண்ட் மெயின்டெனன்ஸ் எல்லாம் பார்த்தேன். எல்லாம் கரெக்ட்டா இருக்கு. ஆனா நல்லா ஓடிக்கிட்டிருக்கிற கம்பெனி எப்படி திடீர்ன்னு நஷ்டமாச்சுன்னு தான் பிடிபடல...''

அவன் சொல்ல தன் பங்கிற்கும் ஏதாவது சொல்ல நினைத்தவளாய் யூகித்துப் பேசினாள்.

''சரவணன் எனக்கும் ஒண்ணு தோணுது...''

''சொல்லு ரதி...''

''கம்பெனியில சில வேலைகளுக்கு காண்டிராக்ட் விடுறதா மேனேஜர் சொன்னாரு. அதுல ஏதாவது மோசடி நடந்திருக்குமோ?''

அதை மறுப்பது போல் தலையை வெட்டினான் சரவணன்.

''அதையும் பார்த்துட்டேன் ரதி. நம்ம கம்பெனி பேக்கிங், டெஸ்பாட்ச்சிங்கிற்கு மட்டும் தான் காண்டிராக்ட் விடுது. அதோட மதிப்பும் சில ஆயிரங்கள் தான். அதனால அதுல மோசடி நடந்திருந்தாலும் இப்படிக் கோடிக்கணக்கான நஷ்டம் ஏற்பட வாய்ப்பில்ல...''

''பின்ன எப்படி சரவணன்?''



''அதைத்தான் கண்டு பிடிக்கணும். அதுக்கு ஒரு வழி இருக்கு. அதை நீ கண்டிப்பா பாலோ பண்ணணும்...''

''என்ன வழி சரவணன்?''

''மொதல்ல கம்பெனியோட ஸ்டாஃப்ஸ், ஊழியர்கள் கிட்ட எம்.டி.ங்கிற ஒரு பயத்தை உருவாக்கணும். ரொம்ப ஸ்ட்ரிக்ட்டா கண்டிப்பா நடந்துக்கிற மாதிரி ஒரு தோற்றத்தை நீ உருவாக்கணும்... மேலும்...''

''சொல்லுங்க சரவணன்...''

''கம்பெனி விஷயங்கள் தெரியுதோ... இல்லையோ... எல்லாம் தெரிஞ்ச மாதிரி காட்டிக்கணும் பேச்சைக் குறைத்து எல்லோர்கிட்டயும் அளந்து வைத்த மாதிரி தான் பேசணும்...''

''இதுவெல்லாம் எதுக்கு சரவணன்?'' புரியாமல் தன் புருவங்களை உயர்த்தினாள் ரதி.

''எல்லாம் காரணமாத்தான்! ரதி மொதல்ல பணியாளர்களுக்கு நீ எம்.டி.யா பொறுப்பேற்றதும் ஆள் எப்படி... கண்டிப்பான பேர்வழியா... விஷயம் தெரிஞ்சவரான்னு தெரிஞ்சுக்கிட ஆவலா இருப்பாங்க. அதனால நீ ஸ்ட்ரிக்ட்டான ஆளுன்னு தெரிஞ்சாத்தான் ஒரு பயம் வரும். அந்த பயம் வந்தாத்தான்... கணக்கு வழக்கில தப்பு, கோல்மால் பண்றவங்க இனிமே மாட்டிக்கக்கூடாதுன்னு பயப்படுவாங்க...''

''புரியுது சரவணன்...''

''அப்புறம் உன்னோட கையில எப்பவும் லேப்டாப்பை வைச்சிருக்கணும். அந்த சிஸ்டத்தில எப்பவும் கம்பெனியோட கணக்குகளை வரவு செலவுகளை ஏற்றி அப்டேட்

பண்ணிக்கிட்டே இருக்கணும். பார்க்கிறவங்களுக்கு கம்பெனியோட ஒவ்வொரு செயல்பாடும் உன்னோட ஃபிங்கர் டிப்ஸ்ல இருக்கிற மாதிரி ஒரு பிரமையை உண்டாக்கணும்...''

''செய்யறேன் சரவணன்...''

அதற்குள் கார் எஸ்டேட்டின் தேயிலைச் செடி சேகரிக்கும் தொழிலாளர்கள் பகுதிக்குள் நுழைந்து நின்றது.

இருவரும் இறங்கினார்கள்.

அவர்கள் வருவதைப் பார்த்துத் தொழிலாளர்கள் வேலையை நிறுத்திவிட்டு முன்னால் வந்து கூட ஆரம்பித்தனர்.

''நான் பேச மாட்டேன். நீ தான் பேசணும்...'' என்றான் சரவணன் கிசுகிசுப்பாய்.

அவசரமாய் தலையசைத்தாள் அவள்.

தொழிற்சங்க தலைவர் முன்னால் வந்து பெரிய வணக்கம் ஒன்று போட, பதிலுக்கு நமஸ்கரித்தாள் அவள்.

பின் தொழிற்சங்க தலைவர் தங்களின் பிரச்சினைகளை ஒவ்வொன்றாய் விளக்க, அமைதியாய் காது கொடுத்துக் கேட்டாள் அவள்.

சம்பள உயர்வு பற்றிய பிரச்சினைக்கு மூன்று மாதங்களுக்குள் கண்டிப்பாய் ஊதிய உயர்வு கொடுக்கப்படும் என எல்லோர் முன்னிலையிலும் அறிவித்தாள்.

பின் தொழிலாளர்கள் அத்தனை பேரையும் கம்பெனி நலனுக்கான பல வருடங்களாய் இரவு பகல் பாராமல் கடுமையாய் உழைப்பதை வாய்விட்டுப் பாராட்டினாள்.



அதற்கு அவள் அவர்களுக்கு புகழாரம் சூட்டி தனது நன்றியைத் தெரிவித்தபோது எல்லோரும் சந்தோஷத்தில் திக்கு முக்காடியவர்களாய் மகிழ்ச்சியாய் கை தட்டினர்.

பின் அவர்களிடம் இன்முகப் புன்னகையுடன் விடை பெற்றவாறு சரவணனுடன் கிளம்பினாள்.

காரில் ஏறி அங்கிருந்து வெளிவந்ததும் சரவணனின் முகத்தை ஆவலாய்ப் பார்த்தாள்.

அவள் கேள்வியைக் கேட்கும் முன்பே அவள் கைகளைப் பிடித்து படபடவென குலுக்கினான் அவன்.

''வெல்டன் ரதி! நானே எதிர்பார்க்கல...! என்ன ஒரு பேச்சு...! உன்னோட இந்த புகழுரை அப்ரோச்சில தொழிலாளர்கள் அத்தனை பேரும் மயங்கிட்டாங்க... நல்ல எஜமானியம்மான்னு என் காதுபடவே சொல்ல ஆரம்பிச்சுட்டாங்க...''

அவனது பாராட்டில் அப்படியே குளிர்ந்தவளாய், ''எல்லாம் நீங்க சொன்னதை வைச்சு யூகிச்சு செஞ்சேன் சரவணன். நீங்க சொன்ன மாதிரி தொழிலாளர்கள் மனசில ஒரு பயமும், முதலாளி நம் நலனில் அக்கறை காட்டுறவங்கங்கிற ஈடுபாடும் உள்ளவங்கன்னு அவங்களுக்குப் புரிய வைக்க நினைச்சேன். அதனால அப்படிப் பேசினேன்...'' என்றாள்.

சரவணன் விடாமல், ''பிரமாதம். உன்கிட்ட அறிவும், அழகும் சேர்ந்தே இருக்கு. யூ... ஆர் வெரி க்யூட் அண்டு ப்யூட்டிஃபுல்!'' என மேலும் புகழாரம் சூட்ட அப்படியே சொக்கித்தான் போனாள்.

அறிவைப் பாராட்டியவன், அப்படியே அழகையும் அல்லவா சேர்த்து பாராட்டுகிறான்? அப்படியானால் நம் அழகை ரசித்துப் பார்த்திருக்கிறானா? அப்படிப் பார்த்திருந்தால் தானே பாராட்டவும் முடியும்? என்றெல்லாம் அவளுள் நினைப்பு ஓடியது.

திரும்பி ஓரக் கண்ணால் லேசாய் அவனைப் பார்த்த போது அவனும் அப்படி அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு அகல்வது தெரிந்து மேலும் சிலிர்ப்பானாள்.

அன்று அவளுக்கு அது ஒரு வித்தியாசமான அனுபவமாகவே இருந்தது. இரவு தூக்கம் வராமல் திரும்பவும் சரவணன் நினைப்பு ஓடியபோது, என்ன... இது? என அதிர்ந்து எழுந்து உட்கார்ந்து விட்டாள்.

இப்போதுதான் பிரதீபனை தாம் தவறாக விரும்பியது, அவன் குணம் தெரியாமல் ஈடுபாடு கொண்டது எல்லாம் எவ்வளவு பெரிய ஆபத்து என தீயினுள் கையை விட்டது போல் சூட்டை உணர்ந்து கையை எடுத்திருக்கிறாள்... அந்தக் காயம் மனதில் ஆறுவதற்குள்... இன்னொரு நினைப்பு சரவணனை பார்த்ததும் ஓட ஆரம்பித்து விட்டதே...?

என்ன இது... நாம் அந்த அளவு பலவீனமாகிவிட்டோமோ? பின் சரவணன் கொடுத்த சின்ன பாராட்டுக்கு ஏன் தலை கால் புரியாத சந்தோஷம் உடம்பினுள் ஜிலீரென ஓட வேண்டும்?

தனது மனநிலையை உணர்ந்து திடுக்கிடவே செய்தாள் அவள்!

மறுநாள் அழகு ரதிக்கு அன்று எழுந்தது முதலே சிந்தனைதான். ஒரே எரிச்சலான சிந்தனைதான்!



யார் இந்த சரவணன்? திடீரென எங்கிருந்து முளைத்தான் இவன்?

அவன் வந்ததும் அவனைப் பார்த்ததும் இந்தப் பாழாய்ப் போன மனது ஏன் காணாததைக் கண்டது போல் சலனப்பட வேண்டும்?

அப்படி என்ன அவன் பெரிய மன்மதனா? இல்லை பெரும் ஒழுக்க சீலனா?

அவனைப் பற்றி என்னதான் தெரியும் அவளுக்கு? ராமநாதன் அங்கிள் சொன்னது போல் அவன் ஒரு திறமையான ஆடிட்டர். கம்பெனி நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளை எல்லாம் கண்டு பிடித்து சரி செய்யத் தெரிந்தவன்.

அவ்வளவுதானே?

பின் அதற்குப் போய் அவனிடம் பார்க்காததை பார்த்தது போல் ஏன் மயங்க வேண்டும்?

எதனால் அவனது முகம், அவன் பேசிய பேச்சு, எல்லாம் தினம் தினம் அவன் இல்லாத நேரங்களிலும் அவள் மனதில் பிரதிபலிப்பாய்த் தோன்றி இம்சிக்க வேண்டும்?


அவன் கொஞ்சம் கடிந்து பேசினால்கூட ஏதோ பெரிய துன்பம் நேர்ந்து விட்டாற் போல் ஏன் அழுகை முட்டிக் கொண்டு வர வேண்டும்?

எதனால்? சரவணனை நாம் நேசிக்கிறோமோ? உள்ளூர அவனை விரும்புகிறேனா? அதனால் தான் இப்படியா?

கொஞ்ச நாட்களுக்கு... மாதங்களுக்கு முன் இப்படித்தானே பிரதீபனைச் சுற்றிக் கொண்டு காதல் வயப்பட்டது போல் அலைந்தது இந்த மனது?

பின் ஒரு நாள் பிரதீபனின் உண்மையான, அவளது சொத்துக்கள் ஒன்றையே குறியாகக் கொண்ட பேராசையான முகம் தெரிந்ததாலேத்தானே அவனுடன் ஏற்பட்டது காதல் அல்ல வெறும் இன்பாக்சுவேஷன் என முடிவுக்கு வந்தாள்.

அது முடிந்து நாட்கள் கடப்பதற்குள், மறுபடியும் ஒரு இன்பாக்சுவேஷனா? குழம்பினாள் அழகுரதி.



# 7

அன்று திரும்பி ரூமைத் திறந்து சரவணன் உள்ளே நுழையும் போதும் அழகுரதி அதே போஸில் இருக்க அவனுள் குறுகுறுப்பு கூடியது.

''என்னாயிற்று?'' என்றான்.

அவள் குரல் கேட்டு சிந்தனை கலைந்து ''என்ன?'' என்றாள் திடுக்கிட்டவளாய்.

''கப்பல் மிதக்கிறதா... இல்லை... கவிழ்ந்து சரக்கெல்லாம் மூழ்கி விட்டதா...?''

''கப்பலா...?''



அவள் புருவங்களை உயர்த்த சிரிக்காமல் அவளைப் பார்த்தவன், ''கையை இப்படி மடித்து, அதில் ஸ்டாண்ட் முகத்தை சோகமாய் தொங்க வைத்துக் கொண்டு உட்கார்ந்தால், பின் என்ன சொல்வது?'' என்றான் கைகளைக் கட்டியபடி.

''அப்படி இல்லை...'' என்றான் அவள் அவசரமாய்.

''பின் வேறு எப்படி?''

''சிந்தனை...'' என்றாள் அமைதியாய்.

''அது... என்ன சிந்தனையோ...?''

அத்தோடு விட்டுவிடுவாள் என்று பார்த்தால் தோண்டித் துருவிக் கேட்கிறானே... இவனை என்ன செய்வது? என நினைத்தவள், ''அவசியம் சொல்லத்தான் வேண்டுமா?'' என்றாள்.

அவன் அவள் கேட்ட விதம் கண்டு முகம் மாறினான்.

''சொன்னால் நல்லது... சொல்லா விட்டால் ரொம்ப ரொம்ப நல்லது...!' என்றான்.

''சொல்கிறேன்... ஆனால் நம்ப மாட்டீர்கள்...'' என்றாள் அவள் மறுபடியும்.

''சொல்லவே இல்லை... அதற்கு பீடிகை வேறவா...?''

''அட... ச்... சொல்லி விடுகிறேன். எல்லாம் உங்களைப் பற்றித்தான்...'' என்றாள்.

''என்ன என்னைப் பற்றியா?''

''ம்ம்... இரண்டு நாள் முன்பு நாம் பூங்காப் பக்கம் போய் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தோமே... அது பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தேன். போதுமா?''

அவன் திரும்பி மறுபடியும் அவளை ஆழமாய்ப் பார்த்தான்.

''நீ... என்ன மாடா? நடந்ததை நினைத்து நினைத்து அசை போடுவதற்கு?''

அவன் தன்னை மாட்டுடன் ஒப்பிடுவது கண்டு அவளுள் சினம் தூக்கியது.

''உங்களுக்கு மென்மையாகவே பேச வராதா...?'' என்றாள்.

''அது பேசுபவர்களைப் பொறுத்து... பேச்சின் தன்மையைப் பொறுத்து...'' என்றான் அவன் விளக்கம் கொடுப்பது போல்.

''ஆமாம்... ஆமாம்! எனக்குப் பேசத் தெரியாதது தான்...!'' என்றாள் அவள் உதடுகளை இறுக்கமாய் மூடியபடி.

''ஒத்துக் கொண்டால் சரி...!'' என்றவன், அவள் சிடுமூஞ்சாய் மாறிவிட்டதைப் பார்த்து, ''என்ன சில சமயம் இந்த ஊமைக் குறத்தான்களின் ஆட்டம் தாங்க முடியவில்லைதான்...!'' என்றதும் இறுக்கம் தளர்ந்து பட்டெனச் சிரித்து விட்டாள் அவள்.

அவள் முகத்தை அதிசயமாக்கினான்.

''பார்! கலகலவென என்ன ஒரு சிரிப்பு! இந்த ரூமே ஒரு கணம் இனிமையாய் அதிர்கிறது அல்லவா? அது எவ்வளவு நன்றாக மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது? இது தான் இப்படி சிரித்து மகிழ்ச்சியாய் இருப்பதுதான் வாழ்க்கை. எளிமையாய் எல்லோராலும் புரிந்து கொள்ளக்



கூடிய அருமையான தத்துவமும் இதுதான்... நீயும் புரிந்து கொள்...!'' என்றான் அவன் கம்பீரமான குரலில்.

''அடடா! என்ன ஒரு அருமையான கண்டுபிடிப்பு! இவ்வளவு நாள் நான் சிரிக்கும் போதெல்லாம் இதை நான் நினைத்துப் பார்க்கவே இல்லையே...?'' என்றவள் குரலில் மேலும் கேலியைக் கூட்டியவாறு, ''ரொம்பவும் தேங்க்ஸ் மிஸ்டர் சரவணன். இனி ஒவ்வொரு முறை நான் சிரிக்கும்போதும் நீங்கள் சொன்ன இந்த வார்த்தைகளை நினைத்துக் கொள்கிறேன். அப்படி நினைத்துக் கொண்டு இன்னும் கூடுதலாக எவ்வளவு நேரம் சிரிக்க முடியுமோ, அவ்வளவு நேரம் கஷ்டப்பட்டாவது சிரித்து விடுகிறேன். சரியா?'' என புன்னகை மாறாமல் அவள் கேட்டதைக் கண்டு சரவணனே சிரித்து விட்டான்.

அவன் சிரிப்பதைப் பார்த்து, ''ஆஹா என்ன ஒரு முத்துப் பற்கள்... வரிசை...!'' என அவள் வியந்துவிட்டு, அந்த அவன் சிரிக்கும் அழகையும், கண் இமைக்காமல் ரசிக்கத்தான் செய்தாள்.


அவன் அவள் மறுபடியும் சிந்தனைக்குப் போவதை உணர்ந்தோ, என்னவோ கைகளால் அவள் முகம் முன் சொடுக்கிட்டு, ''என்ன நான் வந்த விஷயத்தைச் சொல்லட்டுமா?'' என்றான்.

''இன்னும் அந்த நல்ல நேரம் வரவில்லை என்றால் காத்திருந்து சொல்லுங்கள்...'' என்றாள் அவள் இடக்காய் தனது சிந்தனை தடுமாற்றத்தை மறைத்தபடி.

''பரவாயில்லையே... நன்றாகத்தான் சமாளிக்கிறாய்...'' என்றவன், ''என்ன சரக்கு முற்றினால் சந்தைக்கு வந்து தானே ஆக வேண்டும். அப்போது பார்த்துக் கொள்

கிறேன்...'' என்றவன், மறு கையில் வைத்திருந்த ஃபைல் ஒன்றை விரித்து அவள் முன் நீட்டினான்.

என்ன சொல்கிறான் இவன்? எல்லாவற்றையும் கண்டு பிடித்து விட்டானா? குழப்பமாய் திகைத்தாள் அழகுரதி.



# 8

மேலும் மூன்று நாள் கழிந்தபோது அழகுரதியினுள் நிறைய மாற்றம் ஏற்பட்டிருந்தது.

அதிகாலையிலேயே சுறுசுறுப்பாய் எழ ஆரம்பித்தாள். விடிந்து பால்கனிப் பக்கம் வந்து வெளியே பார்வையைப் பதித்தபோது காலையே சுகமாக, சுவாரஸ்யமாகத் தெரிந்தது. அதிலும் அவுட்ஹவுசைப் பார்க்கையில் சுவாரஸ்யம் இன்னும் கூடியது. அவுட் ஹவுஸ் வராண்டாவில் பனியன், ஹாப் பேண்ட் சகிதம் சரவணன் உடற்பயிற்சி செய்து கொண்டிருப்பது தெரிந்தது. ஓ! இதுதான் அந்தக் கட்டுக்கோப்பான உடல்வாகின் ரகசியமா? தினமும் அதிகாலை எழுந்து உடற்பயிற்சி செய்யும் பழக்கம் உண்டா?

அதிசயித்து கண் கொட்டாமல் அவன் உடற்பயிற்சி செய்யும் அழகை ரசித்தாள். பக்கத்து ரூமில் இருந்து நிம்மி எழுந்து வரும் அரவம் கேட்டதும், திடுக்கிட்டு



அவள் இந்தக் காட்சியைப் பார்த்து விடக்கூடாது என்பது போல் பால்கனி கதவுகளை மூடினாள். அவசரமாய் அங்கிருந்து நழுவினாள்.

தான் ஏன் இப்படி கிறுக்குத்தனமாய் திடீரென நடந்து கொள்கிறோம்? என்ற கேள்வி உள்ளுக்குள் எழத்தான் செய்தது. இந்த சரவணன் யார்? திடீரென இடையில் வந்த ஆள். அதுவும் வந்த ஒரு மூன்று நான்கு நாளுக்குள் இப்படி ஒரு பாதிப்பை அவளுள் ஏற்படுத்தி விட முடியுமா?

ஆனால் ஏற்படுத்தி விட்டாரே...?

அதேபோல் முன்பெல்லாம் தனக்குப் பிடிக்காத எஸ்டேட் அலுவலக வேலைகளைப் பெரும் பாரமாக எண்ணியவள், இப்போது அந்த வேலைகளில் பெரும் ஈடுபாடு காட்டி நேசிக்க ஆரம்பித்து விட்டாளே. எதனால்?

அவன் காலையில் அவளைப் பார்த்ததும் வசீகரப் புன்னகையொன்றை புரிந்தவாறு, ''குட்மார்னிங்!'' சொன்னாலே உள்ளுக்குள் நிறைய பட்டாம்பூச்சிகள் இனிமையாய் பறப்பதைப் போல் உணர்வது எதனால்? என திகைத்தாள்.

அவன் எஸ்டேட் கணக்கு விபரங்களைக் காட்டி தான் கண்டு பிடித்த சில விஷயங்களை அவளுக்கு விளக்கிய போது அவளுக்குப் புரிந்ததோ இல்லையோ தலையைப் பெரிதாக ஆட்டினாள்.

''நீங்க எதைச் செஞ்சாலும் கரெக்டா செய்வீங்க சரவணன். உங்க மேல எனக்கு நிறைய நம்பிக்கை

இருக்கு...! என அவனைப் பாராட்டுவது போல் அடிக்கடி உளறினாள்.

அவன் சொன்ன சின்ன விஷயத்திற்கும், பெரும் ஹாஸ்யம் கண்டது போல் கலகலவெனச் சிரித்தாள்.

ஆனால் அன்று ஒரு நாள் மதியம் தற்செயலாக தனது அறையை விட்டு வந்து நிம்மியின் டெஸ்பாட்ச் பக்கம் பார்வை சென்றபோது அவள் கண்கள் ஒரு கணம் அதிர்ச்சியாகி நிலை கொத்தி நின்றது.

அங்கு நிம்மி சரவணனுடன் சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டு, பதிலுக்கு சரவணனும் இந்த இளிப்பு இளிக்கிறானே? என எரிச்சலானாள்.

தூரம் அதிகமில்லை என்பதால் அவர்கள் பேசுவது கூட அவளது காதில் விழுந்தது.

''ஹலோ... சரவணன் சார் உங்களைப் பார்த்ததும் தான் மின்னல் அடிச்சு கரெண்ட் பாயுற மாதிரி ஒரு உற்சாகம் எனக்கு வருது சார்...''

நிம்மி சொல்ல பதிலுக்கு சரவணனும், ''அப்படியா? அப்போ நல்லதாய் போயிற்று. இனி நம் ஆபீசுக்கு கரெண்ட் சப்ளையை நிறுத்திட்டு, என் மேல வயர் சொருகி கரெண்ட் எடுத்துக்கலாம். செலவு மிச்சமாகும்...'' என சரவணன் சிரிக்காமல் சொல்ல... பதிலுக்குக் குலுங்கிக் குலுங்கி சிரித்தாள் நிம்மி.

அப்படி என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கு? என கைகளைப் பிசைந்தாள் அழகுராதி.

நிம்மி அத்தோடு விடாமல் சரவணனின் வேலை பார்க்கும் திறமையை வேகத்தை புகழ்ந்து எதுவோ சொல்ல



அதற்கும் சரவணன் தலையாட்டியபடியே ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான்.

அழகுராதிக்குத்தான் பொறுக்க முடியவில்லை.

ஆக... அவர்கள் பேசுவது அலுவலக பேச்சு அல்ல... வெட்டிப் பேச்சு? ஆபீஸ் நேரத்தில் இது வேறா...?

பற்களைக் கடித்தபடி யோசித்தாள்.

பின் ஏதோ தோன்றியவளாய் இருக்கையில் வந்து உட்கார்ந்தாள்.

கொஞ்ச நேரத்தில் ஃபைல் ஒன்றில் கையெழுத்து வாங்க நிம்மி நுழைந்தாள்.

அவளைப் பார்த்ததும் அவளுள் வேகம் கூடியது.

'ஒண்ணுமே தெரியாத பாப்பா போல அல்லவா முகத்தை வைத்துக் கொள்கிறாள்..?' என நிம்மியைப் பார்த்து வியந்தவள், அவள் கொடுத்த ஃபைல்களில் விடுவிடுவென கையெழுத்திட்டாள்.

திரும்பப் போனவளை அவசரமாய் நிறுத்தினாள்.

''நிம்மி..''

''யெஸ் மேடம்...'' என்றாள் நிம்மி குரலில் பணிவாக.

எப்படி இவளிடம் சொல்வது என்று ஒரு கணம் யோசித்தவள், பின் தயக்கம் நீங்கியவளாய் குரலை தாழ்த்தியபடி, ''இதோ பாரு நிம்மி, இது ஆபீஸ். இங்கு அலுவலக வேலை நடக்கணும். சரவணன் பல ஆடிட் வேலைகளை இழுத்துப் போட்டுக்கிட்டு அலையறவரு.. அதனால அவரை டிஸ்டர்ப் பண்ற மாதிரி பேசி சிரிச்சிக்கிட்டு இருக்கிறது எனக்கு.. கொஞ்சமும் சரியாப்

படல..'' என ஒருவாறு பூசி மெழுகி சொல்ல, நினைத்ததை கொட்டி விட்டாள்.

நிம்மி இதை எதிர்பார்க்கவில்லை.

சட்டென கூம்பி விட்டது போல் அவள் முகமே வாடி விட்டது.

அதைப் பார்த்த அழகுரதிக்கே ஒரு மாதிரியாகப் போய்விட, சமாளித்துக் கொண்டு, ''நிம்மி இதை ஒரு முதலாளியா உன்கிட்டச் சொல்லலை. உன்னோட தோழி மாதிரி உன்னோட நல்லதுக்குத்தான் சொல்றேன்..'' என போட்டும் வைத்தாள்.

''சரி...மேடம்...!''

சுரத்தில்லாமல் பதில் சொல்லிவிட்டு அகன்றாள் நிம்மி.

எதையோ ஜெயித்து வெற்றி வாகை சூடி விட்டது போல் அழகுரதியின் முகத்தில் ஒரு ஆனந்தக் களிப்பு ஓடியது.

ஆனால் வெளிவந்த நிம்மியால் முகத்தை முன்பு போல் வைத்துக் கொள்ள முடியவில்லை. அதை தற்செயலாய் திரும்பி அவளிடம் பேச வந்த சரவணன் கவனித்துவிட்டான்.

''என்ன நிம்மி.. உங்க மேடம் ஏதும் டோஸ் விட்டாங்களா?'' என்றான்.

''ம்ம்..''என்றாள் நிம்மி சோகமாக.

''எதுக்காம்..?''



''ஆபீஸ் நேரத்தில் உங்ககிட்ட நான் சிரிச்சு சிரிச்சு பேசறது அவங்களுக்கு சரியாப் படலையாம். உங்க முக்கியமான வேலை அதனால கெட்டிருமாம்...''

''அப்படியா?''

மறுபடியும் தலையை வேகமாய் அசைத்து ஆமோதித்தாள் நிம்மி.

''அவ்வளவுதான சொன்னாங்க..?'' என்றான் சரவணன் சர்வ சாதாரணமாய்.

''ஆமா..''

''அப்ப எதுக்கு கவலைப்படுற. இனிமே என்கிட்ட சிரிக்காம பேசு...''

''என்ன சொல்றீங்க நீங்க?''

புரியாமல் விழித்தாள் நிம்மி.

''நீ சிரிச்சுப் பேசறது தானே உங்க மேடம்மோட கண்களை உறுத்துறது. இனிமே சிரிக்காம சீரியஸாப் பேசு.. உன்னோட மேடமுக்கு எவ்வித உறுத்தலும் வராது...''

நிம்மிக்கு அவனது பேச்சைக் கேட்டு சிரிப்புதான் வந்தது. மறுபடி அவனிடம் பேசும் போது சிரித்துவிடக் கூடாது என அடக்க முயற்சித்தாள்.

அதைக் கவனித்த சரவணன் முகத்தை சீரியஸாக்கிய படி, ''மரியாதையாக சிரித்து விடு. இல்லையேல் தலையில் ஒரு குட்டு குட்டிடுவேன் நிம்மி...'' என்றபடி போலியாய் கைகளை ஓங்கினான்.

பக்கென சிரித்துவிட்டாள் நிம்மி.

அதை ரசித்தபடியே அங்கிருந்து அகன்று வேகமாய் அழகுரதியின் ரூமினுள் நுழைந்தான் அவன்.

சரவணனைக் கண்டதும், 'நிம்மி நான் கண்டித்த விஷயத்தை இவனிடம் சொல்லியிருப்பாளோ...?'. என சீட்டில் இருந்தபடி நெளியத்தான் செய்தாள் அழகுரதி.

அவன் முகத்தை அதற்காக உற்றுப் பார்த்து ஒன்றையும் கண்டுபிடிக்க முடியாமல் திணறினாள்.

சரவணனோ தான் கொண்டு வந்த ஃபைல்களை எல்லாம் அவள் பார்வைக்கு கொடுத்துவிட்டு, ''அப்புறம் இன்னொரு விஷயம் அழகுரதி..'' என ஆரம்பித்தான்.

''என்ன..?'' என்பது போல் பார்த்தாள் அவள்.

''நம் நிம்மி அலுவலகத்தில் ஆபீஸ் வேலையைப் பார்க்காமல் யாருடனோ சிரிக்கச் சிரிக்க பேசிக் கொண்டிருந்தாள். அதான் ஓங்கி ஒரு குட்டு தலையில் வைத்து விட்டு வந்தேன்... என்ன ஒரு தைரியம் அவளுக்கு? எவ்வளவு பெரிய தப்பைச் செய்திருக்கிறாள் பார்!'' என்றான்.

அவன் தன்னைத்தான் அப்படி வஞ்சிப் புகழ்ச்சியாய் சொல்வதை சுருக்கென உணர்ந்து கொண்டாள் அழகுரதி. இந்த நிம்மி வத்தி வைக்காத குறையாய் உடனே இவனிடம் சொல்லிவிட்டாளா..? சரிதான்..!

''அது.. அது.. சரவணன்..'' என இழுத்து என்ன பேசுவதென்று தெரியாமல் தயங்கினாள்.

சரவணன் இரண்டு எட்டு முன்னால் வந்து கூர்மையாய் அவளைப் பார்த்தான்.

''இதோ பார் ரதி, ரெண்டு நிமிஷம் ஒருத்தர்கிட்ட சிரிச்சுப் பேசினா.. அது ஒண்ணும் தப்பில்ல.. ஆபீஸ்ல... இந்த மாதிரி அலுவலக சூழ்நிலையில் அப்படிப் பேசறது



சகஜம் தான். இதுல போய் கண்ணுல எண்ணையை ஊத்திக்கிட்டு தப்பைக் கண்டுபிடிக்கணும்னு அவசியமில்ல...''

அவன் தெளிவாய்ப் பேச இதை எதிர்பார்க்காத அழகுரதி திணறத்தான் செய்தாள்.

''அது.. அது.. வந்து சரவணன்.. நான் அப்படிச் சொன்னது...'' என அவள் சமாளிக்கப் போனதை கைகளை உயர்த்தி தடுத்தான் அவன்.

''தப்பு நிம்மி மேல இல்ல. சிரிச்சுப் பேசறது, மற்றவங்களை சிரிக்க வைச்சு பேசறது நான் தான். இது என்னோட குணம். சுபாவம். இந்த பர்ஸனலான என்னோட குணத்தில் யாரும் இப்படித் தலையிடுவது எனக்குப் பிடிக்காது. மேலும் ஒன்றைத் தெளிவாப் புரிஞ்சுக்கோ ரதி. ஒருத்தரை அழ வைக்கிறது ரொம்பச் சுலபம். சிரிக்க வைக்கிறதுதான் கஷ்டம். புரியுதா? டூ.. யூ அண்டர்ஸ்டாண்ட்...?'' என அதே வேகத்தில் சொல்லிவிட்டு அவள் பதிலுக்கு நிற்காமல் போய்விட்டான் சரவணன்.


அவளுக்கு முகத்தில் சொடெரென அடித்தாற் போல இருந்தது.

இரண்டு விழிகளிலும் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது.

கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

மற்றவர்களை சிரிக்க வைத்துப் பேசுவது எனது சுபாவம் எனச் சொல்லி அவளை ஒரே நிமிடத்தில் அழ வைத்து விட்டானே!

அன்று முழுவதும் கண்களில் முட்டிக் கொண்டு வரும் நீர்த்துளிகளுடன் நொந்து போனவளாகவே நடமாடினாள் அவள்.



# 9

சரவணனிடம் எப்போதும் ஒருவிதமான அலட்டல், தனக்கு எல்லாம் தெரிந்த கர்வம் இருப்பதாகவே அழகுரதி நினைத்தாள்.

எல்லாவற்றுக்கும் மேலாக அவன் அவளை ஒரு எஸ்டேட் நிர்வாகி, பாஸ் என்றெல்லாம் எண்ணுவதில்லை. அதேபோல் அவள் நம் கம்பெனி ஆடிட்டர் தானே என கொஞ்சம் விரட்டும் தொனியில் குரலை மாற்றினால், ''இதுவெல்லாம் எனக்கு சரிப்பட்டு வராது... நீயே பார்த்துக் கொள்..'' என உதறிவிட்டுப் போய்விடுவான் போலவே அவனது செய்கை இருந்தது.

அவள் யூகித்தது போலவே ராமநாதன் அங்கிளும், ''விஷயம் தெரிந்தவனம்மா. கொஞ்சம் வில்லாய் நிற்கக் கூடியவன்தான். ஆனால் கோபப்பட்டு விட்டுவிடாதே. நம் கம்பெனிக்கு இப்போது உள்ள நஷ்டமான சூழ்நிலைக்கு அவன் அவசியம் தேவை...'' என எச்சரித்ததும் ஞாபகத்தில் ஓடியது.



அதனாலே சரவணன் சில சமயம் சீண்டினாலும் ஒரு வித அலட்டலுடன் பதில் சொன்னாலும் பொறுத்துக் கொண்டாள்.

மேலும் அவன் கோபப்பட்டு சென்றுவிட்டால் கம்பெனிக்கு நஷ்டம் ஏற்படுமோ இல்லையோ அவளால் அதை தாங்கிக் கொள்ள முடியாது என உள் மனம் தெளிவாய் உரைத்தபோது திடுக்கிடவே செய்தாள்.

நேற்று கூட இப்படித்தான் நிம்மியும் அவளும் அறையில் எஸ்டேட் குறிப்புகளை ஒன்று சேர்க்கும் வேலையில் ஈடுபட்டிருக்க உள்ளே நுழைந்தான் சரவணன்.

நுழைந்தவன் வேண்டுமென்றே அவளிடம் பேசாமல் நிம்மியிடமே பேச ஆரம்பித்தான்.

''என்ன நிம்மி... கடுமையா உழைக்கிற மாதிரி இருக்கு?''

குரல் கேட்டு நிம்மி நிமிர்ந்து, ''ஆமா..!'' என ஒற்றை வார்த்தையாய் சொல்லிவிட்டு குனிந்து கொள்ள... சரவணன் விடவில்லை.

''உங்க எஜமானி அம்மா கூட கடுமையா உழைக்கிறாங்களே...? அடடா இவ்வளவு வியர்வை சிந்துற உழைப்பை நான் எதிர்பார்க்கல... அழகான நெற்றியில் அரும்பரும்பாய் வியர்வைத் துளிகள் த்ஸோ... த்ஸோ...'' என அவன் வர்ணிக்க ஆரம்பித்து விடுவான்.

அழகுரதி முகம் சிவந்தவளாய் அவனை நிமிர்ந்து முறைக்க... நிம்மி இருவரையும் கவனித்தவள், 'ஐயோ! நமக்கெதுக்கு இந்த வம்பு?' என்பது போல், ''மேடம் கொஞ்சம் டெஸ்பாட்ச் செக்ஷனை பார்த்திட்டு வர்றேன்...'' என அகன்றுவிட்டாள்.

சரிதான் வம்பிழுக்க வந்துவிட்டான். இன்று இவனிடம் மாட்டக்கூடாது. இவனையும் லேசில் விடக்கூடாது. நாம் யாரென்று காட்டிவிட வேண்டும்!

மனசுக்குள் கங்கணம் கட்டிக் கொண்டவள் போல் அழகுரதி நிமிர்ந்து கொண்டாள்.

கூடவே, ''உங்கள் பாராட்டுக்கு என் மனமார்ந்த நன்றி...'' என பேச்சை ஆரம்பித்தாள்.

அவனும் விடவில்லை.

''ஒருவரிடம் உள்ள நல்லதை நான் பாராட்ட தயங்க மாட்டேன். அது என் பாலிசி...!'' என்றான்.

''அப்படியா?'' என்றாள் அவள் போலியாய் வியப்பு காட்டி.

''அதேபோல் தவறையும் சுட்டிக்காட்ட தயங்கமாட்டேன்...'' என்றான்.

''ஓஹோ! அப்படியானால் சந்தேகமில்லை. சார் நக்கீரர் வம்சம்தான்..!'' என்றாள் கிண்டலைக் கூட்டிய படி.

''எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். இப்போது தவறைச் சொல்லட்டுமா?''என்றான் விஷயத்துக்கு வருவது போல்.

''சொல்லுங்கள் ஸார்...''

''நேற்று நீ கையெழுத்திட்ட செக் புக்குகளிலும் சரி, அக்கவுண்டிங் லெட்ஜரிலும் சரி... எல்லாவற்றிலும் வருஷத்தை சரியாகப் போடாமல் சென்ற வருஷத்தை போட்டிருக்கிறாய்...''



அவன் சொல்ல அவளுக்கு சொடேரென புரிந்தது உண்மைதான். இரண்டாயிரத்து பன்னிரெண்டு என்பதற்கு பதிலாக பதினொன்று என்று எழுதியது உரைத்தது.

தவறை உணர்ந்து கண்களை தரை தாழ்த்தி, குரலை மென்மையாக்கி, ''தவறுதான். மன்னித்து விடுங்கள்!'' என்றாள்.

''இப்படி அழகாக குழைந்து மன்னிப்பைக் கேட்டால் மன்னிக்காமல் இருக்க முடியுமா? மன்னித்து விடுகிறேன். ஆனால்...'' என இழுத்தான்.

''சொல்லுங்கள்...''

''கொஞ்ச நாளாகவே கவனித்து வருகிறேன்.. உன்னிடம் ஏதோ ஒருவித தடுமாற்றம், அடிக்கடி சிந்தனை எங்கோ தப்பி போய்விடுகிற கவனக் குறைவு.. இதுவெல்லாம்.. என்ன..'' என்றான்.

அவள் இம்முறை திடுக்கிட்டாள்.


விட்டால் இவன் எல்லாவற்றையும் கண்டுபிடித்து விடுவான் போல என பயந்தவள் தன் முக உணர்ச்சிகளை முழுவதுமாய் மாற்றிக் கொண்டு, ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லையே... என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள்.

அவன் ஒன்றும் பதில் சொல்லாமல் ஆழமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''நன்றாக சமாளிக்கிறாய். இனிமையாக சிரிக்கிறாய்...'' என்றபடி அவளை மேலும் சங்கடப்படுத்த விரும்பாமல் அகன்றுவிட்டான்.

இவன் சொல்வதற்கெல்லாம் என்ன அர்த்தம்? நன்றாக சமாளிக்கிறாய் என்கிறான். அப்படி எதை கண்டுபிடித்தான் இவன்? இனிமையாய் சிரிக்கிறாய் என்கிறான். எதற்காக இந்த அழகான பாராட்டு?

ஒன்றையும் புரிந்து கொள்ளாமல் குழம்பத் தான் செய்தாள் அவள். ஆனாலும் இனம் புரியா சந்தோஷம் ஒன்று மனதை ஆட்கொண்டது.

ஆனால் அன்று மாலை அவள் சரவணனை நிம்மியுடன் சேர்ந்து பார்த்த போது அவளது அந்த சந்தோஷமும் ஒரேடியாய் தொலைந்து போகத்தான் செய்தது.



# 10

மறுவாரம் அவளிடம் பேசுவதற்காக தனியிடம் ஒன்றிற்கு அழைத்துச் சென்றான் அவன்.

ஒன்றும் சொல்லாமல் கூட்டிப் போய் சட்டென வண்டியை நிறுத்தினான் சரவணன்.

''என்ன நிறுத்திட்டீங்க?''

பதில் சொல்லாமல் கையை வெளியே காட்டினான்.

வெளியே... பசுமையான புல்வெளி. அடர்ந்த பைன் மரங்கள். சிறு சிறு செடிகள். வண்ண வண்ணப் பூக்கள். ஆங்காங்கே உட்கார்வதற்கு வசதியாக மர இருக்கைகள்.



''பூங்காவா..?'' என்றாள்.

''பூங்கா மாதிரி! இறங்கு..!'' என்றான்.

இருவரும் இறங்கி புல்வெளியில் நடந்து மர இருக்கைகளில் உட்கார்ந்தார்கள்.

உடம்பை உறுத்தாத மாலை மஞ்சள் வெயில். சில்லென்ற காற்று. அந்தக் காற்றில் அசையும் மரக்கிளைகள். அதில் அமர்ந்து விதவிதமான இனிமை ஒலி எழுப்பும் சிறு சிறு பறவைகள்.

எல்லாவற்றையும் பார்த்து ரசித்தவள் திரும்பி அவனைப் பார்த்தாள்.

''அழகை ரசிக்கத்தான் நிறுத்தினேன்...!'' என்றான் அவன்.

ஆரஞ்சு வண்ண டீ ஷர்ட், ப்ளூ வண்ண ஜீன்ஸ் டிரஸ்ஸில் அவன் பையா பட கார்த்திக்கை நினைவுபடுத்தும் தோற்றத்தில் அவன் ஸ்மார்ட்டாக ஹேண்ட்சம்மாக இருந்ததை அவளும் ரசித்தாள்.

அவள் அப்படி தன்னை உற்றுப் பார்ப்பதை அவனும் கவனித்துவிட்டான்.

''இயற்கையோட அழகை ரசிக்கச் சொன்னேன்...'' என அவன் திரும்ப ஒரு விளக்கம் கொடுத்ததும் சட்டென கண்களைத் தாழ்த்தினாள்.

பெரிய ஆளுதான்! ஒரு பார்வை பார்த்தாலே கண்டுபிடிச்சிடுறாரு! என வியந்தாள்.

அவள் அந்த பயத்தில் அவன் பக்கம் திரும்பாமல் நடந்ததாலோ என்னவோ சரவணன் தயக்கம் இல்லாமல் கண்களை விரித்து அவளை நன்றாகப் பார்த்தான்.

அவளது காந்தமான முகமும் அந்த கலர் சிரிப்பும் சேலையோடு ஒன்றியிருந்த நளினமான வளைவுகளும் அவனை என்னவோ செய்யத்தான் செய்தன.

பெயருக்கேற்ற அழகுதான்! என்ற நினைப்போடு பார்வையை திருப்பியவன் கண்களை சுருக்கியபடி யோசனைக்குப் போனான்.

''ஒரு முக்கியமான விஷயம் இருக்கு ரதி...'' என்றான்.

''என்ன சரவணன்?''

''உங்க அண்ணன் விஷயம்தான்...''

''சொல்லுங்க சரவணன்...''

''உங்க அண்ணன் எந்தக் கெட்டப் பழக்கமும் இல் லாம இருந்திருக்காரு. சிகரெட் பழக்கம் கூட அவருக்குக் கிடையாது. அவர் எப்படி போதைப் பழக்கத்துக்கு திடீர்னு அடிமையாகிட முடியும்...? அதை யோசிச்சுப் பாரு..!''

''அதான் எனக்கும் புரியலை சரவணன்...'' புருவம் உயர்த்தி தன் ஆச்சரியத்தைக் காட்டினாள் அவள்.

சரவணன் முகம் தீவிர சிந்தனைக்குப் போனது. ''ரெண்டு நாளா தூக்கம் கூட வராம அதான் யோசிச்சுக் கிட்டே இருக்கேன். என்னால விடையைத்தான் கண்டு பிடிக்க முடியல...''

அவன் தன் குடும்பத்திற்காக கவலைப்பட்டு தூங் காமல், கொள்ளாமல் யோசிக்கிறானா...? என பெருமித மாகவும் இருந்தது. அதே நேரம் இப்படி தன்னை வருத்தி உடம்பைக் கெடுத்துக் கொள்ளக்கூடாதே என்ற கவ லையும் அவளுள் அதிகரித்தது.



அதனாலே, ''விடுங்க சரவணன். இன்னும் மூணு மாசத் தில எப்படியும் அண்ணனுக்கு உணர்வு வந்திரும்னு டாக்டரே சொல்லியிருக்கார். அப்போ அவர்கிட்டயே கேட்டு தெரிஞ்சுக்குவோம்...'' என்றாள்.

ஆனால் சரவணன் சமாதானம் ஆகாதவன் போல் தலையை வெட்டினான்.

''அதுமட்டுமில்ல...''

''வேறு என்ன சரவணன்?''

''நல்ல லாபத்தில் ஓடிக் கொண்டிருந்த கம்பெனி திடீர்னு எப்படி ஐம்பது கோடி நஷ்டத்தில் இயங்க ஆரம்பிக்கும்..? அதான் என் மனசில நிறைய சந்தேகத்தை உருவாக்குது...''

''அது சரவணன்.. தேயிலைப் பொருள்கள் எல்லாம் அரசாங்கத்தோட புது வரி விதிப்பால நிறைய வீழ்ச்சியை சந்திச்சது... அதனால தான் இந்த நஷ்டம்னு... மேனேஜர், சூபர்வைசர் பொறுப்பில் உள்ளவங்க எல்லாம் சொல் றாங்களே..?''

மறுபடியும் தலையை வெட்டினான் சரவணன்.

''அதுவெல்லாம் ஒரு காரணமில்ல ரதி. அந்த வரி விதிப்போட பாதிப்பால ஒரு அஞ்சு சதவீத லாபம் வேணும்னா பாதிப்படையலாம். மற்றபடி இப்படி டோட்டலா நஷ்டத்தில இயங்குற அளவுக்கு அது நிச் சயமா காரணம் இல்ல!''

''அப்படின்னா, என்னதான் சொல்ல வர்றீங்க சரவணன்?'' என்றாள் ஆவலாய்.

''வேற எதுவும் சதி நடந்திருக்குமோன்னு சந்தேகப் படுறேன்...''

''சதியா? என்ன சொல்றீங்க சரவணன்?'' கலவரப் பட்டுப் போய்ப் பார்த்தாள்.

''ரதி, உங்களோட ராயல் டீ நம்பர் ஒன் கம்பெனி. அதனால போட்டிக் கம்பெனிகள் பொறாமைப்பட்டு எதுவும் சதி செஞ்சிருக்குமோன்னு சந்தேகப்படுறேன்...''

''அப்படியா..? அப்படி கூட இருக்குமா சரவணன்?''

சரவணன் மெல்ல தலையசைத்தான்.

''இருக்க வாய்ப்பிருக்கு ரதி. மேலும் இதுல உங்க அண்ணன் எப்படித் தீவிர போதை பழக்கத்துக்கு அடிமையானாருங்கிற விஷயத்தைக் கண்டுபிடிச்சிட்டா எல்லாம் தெளிவாகிரும்...''

''நீங்க சொல்றது சரிதான்..''

தலையாட்டி ஆமோதித்தாள் ரதி.

பின் கொஞ்ச நேரம் அமைதியாய் கடந்தது. சரவணன் எழுந்து, ''வா ரதி, கொஞ்சம் காலாற நடந்து சுற்றி வருவோம். அப்படி அடர்ந்த மரங்களுக்கிடையே நடப்பது சுகமாக இருக்கும்...'' என அழைக்க மறு பேச்சில்லாமல் எழுந்து நடந்தாள்.

இரண்டு எட்டு நடந்ததும் சரவணன் அவள் பக்கம் திரும்பி கண்கள் விரிய அவளை மேலிருந்து கீழ்வரை ஒரு அழுத்தமான பார்வை பார்த்தான்.

அன்று பச்சை நிற ஷிபான் ஸேரி ஒன்று உடம்பை ஒட்டினாற் போல் தழுவியிருக்க அவள் அழகு கூடி



யிருந்தது. நெற்றியை மறைக்கும் கூந்தல் அருளும், மின்னும் மைவிழிக்கண்களும், களுக் சிரிப்பொன்றை அடிக்கடி உதிர்க்கும் பவழமான உதடுகளும், ஒரு அழகான சிலையின் நேர்த்தியோடு இருந்த உடல் வடிவங்களையும் ஆர்வமாய் பார்த்தவன், 'ம்ம்... இவள் அழகி தான்..!' என தனக்குள் முணுமுணுப்பது போல் தலையசைத்துக் கொண்டான்.

அவன் தன்னை அப்படி ஒருவிதமாய் பார்ப்பதை உணர்ந்ததும் ஜிலீரென ஒரு உணர்வு மனதில் படபடக்க அவளும் திகைப்பானாள்.

''என்ன அப்படிப் பார்க்கறீங்க சரவணன்?'' என கேட்டும் விட்டாள்.

எதையோ சொல்ல ஆரம்பிப்பது போல் வந்து பின் பேச்சை நிறுத்துபவன் போல் தலையாட்டி, ''ஒன்றுமில்லை...'' என்றான்.

''இல்ல... நீங்க எதையோ சொல்ல வந்தீங்க... சொல்லுங்க...!'' என்றாள்.

சரவணன் உதடுகள் பிரியாமல் புன்னகைத்தவன், ''வேண்டாம் ரதி. இது உன்னோட பர்ஸனல். கேட்டா உன் மனசு சங்கடப்படும்...'' என்றான்.

ரதியும் தன் முத்துப்பல் வரிசையைக் காட்டி அழகாய்ப் புன்னகைத்தாள்.

''நீங்கள் எது கேட்டாலும் என் மனசு சங்கடப்படாது...'' என்றாள் அவளுக்கே புரியாத ஏதோ ஒரு அர்த்தத்தில்.

''இல்ல ரதி. இது உன்னோட காதல் விஷயம்... நீ அமெரிக்காவில் பிரதீபன்ங்கிற ஒருத்தரோட...'' அவன்

ஆரம்பித்து முடிக்கும் முன்பே தூக்கி வாரிப்போட்டவ ளாய் நிமிர்ந்தாள்.

''யார் உங்களுக்குச் சொன்னாங்க?''

சரவணன் அசால்ட்டாய் தோள்களை குலுக்கினான். ''வேறு யார்? ராமநாதன் அங்கிள்தான்!'' என்றான்.

இந்த ராமநாதன் அங்கிளுக்கு வேறு வேலையே கிடையாதா? எதைத்தான் சொல்ல வேண்டும், கொட் டடிக்க வேண்டும் என்ற விவஸ்தை வேண்டாம்? என பற்களைக் கடித்தவள் முகம் சிவக்க குனிந்தாள்.

எது... இப்போதைக்கு சரவணனுக்கு தெரிய வேண் டாம். தெரியக்கூடாது என நினைத்தாளோ அது தெரிந்து விட்டதே!

சரவணன் என்ன நினைப்பான்?

எங்கோ ஓர் தேசத்தில் எவனுடனோ காதல் என்ற பெயரில் ஆடி ஓடி கும்மாளமிட்டதாய் நினைத்து விடு வானோ?

அவள் தயங்குவதைப் பார்த்து, ''விருப்பமில்லைன்னா அந்தக் காதல் பற்றி சொல்ல வேண்டாம்..'' என்றான்.

''ஐயோ! அது காதலே இல்லை...!''

அவள் ஏறக்குறைய கத்தத்தான் செய்தாள்.

''என்ன காதல் இல்லையா?''

''ஆமா சரவணன்! ஜஸ்ட் இன்ஃபாக்சுவேஷன்!'' அழுத் தந்திருத்தமாய் உச்சரித்தாள் அவள்.

சரவணன் புருவங்களை வேகமாய் உயர்த்தி ஆச் சரியமாய் அவளைப் பார்த்தான்.



அவள் பேச்சில் உறுதி கூட்டினாள்.

அவள் அப்படித்தான் சொல்ல வேண்டும் சரவணன்.

''அதை அப்படித்தான் சொல்ல வேண்டும் சரவணன். எங்கோ வெளி தேசத்துல ஒரே மொழி பேசறவங்க சந்திக்கும்போது ஒருவிதமான ஈர்ப்பு, அன்பு ஏற்படுமே... அது போலத்தான் அது நிகழ்ந்தது. அந்த பிரதீபனும் நானும் ஒண்ணும் சினிமாக் காதலர்கள் போல ஊர் ஊரா சுற்றித் திரியல. ஜஸ்ட் பார்த்தோம், பேசினோம். இங்கே இந்த நாட்டுலயேதான் இருக்கப் போறோம்... இவரையே துணையா ஆக்கிக்கிட்டா என்னன்னுதான் ஒரு நினைப்பு ஓடி... அவர் கூட பழக வைச்சது. டீஸண்டா பேசினோம், பழகினோம். ஆனா கடைசியில பிரச்சினைன்னு ஒண்ணு எனக்கு வரும்போதுதான் அந்த பிரதீபனோட சுயரூபம் தெரிஞ்சுச்சு. பின் ச்சீன்னு நான் விலகிட்டேன்... இதான் நடந்தது...''

அவள் வாக்குமூலம் கொடுப்பது போல் சொல்லி முடித் தாள்.

சொல்லிவிட்டு அவன் முகத்தைப் பார்த்தவாறு நடந் தாள்.

சரவணன் பதில் சொல்லாமல் மௌனித்து நடந்தது என்னவோ போல் இருந்தது.

''என்ன மௌனமாயிட்டீங்க சரவணன்? நான் சொன் னதை நீங்க நம்பலையா?''

''ஐயையோ..! அப்படியெல்லாம் இல்ல...'' குரலில் பதட்டம் காட்டி பார்த்தான் அவன்.

''பின்ன..?''

''இந்த சின்ன வயசில அழகான உங்களுக்கு இவ்வளவு சோதனை ஏற்பட்டிருக்கேன்னு நான் வருத்தப்படறேன்...''

என்ன நமக்காக வருத்தப்படுகிறானா? நிஜமாகவா?

அவள் மனதில் எழுந்த துள்ளல் சந்தோஷமாய் நடையிலும் வெளிப்பட்டது.


அதற்கு பூச்சொரிவது போல அழகான உங்களுக்கு என அவன் உச்சரித்த தேன் தடவிய வார்த்தைகள் அவளை அப்படியே ஒரு ஆட்டு ஆட்டியது. கால்கள் நழுவி அப்படியே வானில் ஜிவ்வென பறப்பதை போல் கூட உணர்ந்தாள்.

அவன் வாயால் திரும்பத் திரும்ப அந்த வார்த்தைகளை கேட்க வேண்டும் என்ற ஆசை போலும் அவளுக்கு.

''நான் நிஜமாகவே அழகாய் இருக்கிறனோ?'' என்றாள் குரலை மென்மையாக்கியபடி.

சரவணனும் மென்மையாக புன்னகைத்தவன், ''நிஜமாகவே சொல்கிறேன். நீ அழகுதான்! அதுவும் நிம்மியை விட நீ ரொம்ப அழகுதான்!'' என முடித்தான்.

தேவையில்லாமல் இப்போது எதற்கு நிம்மி பெயரை உச்சரிக்கிறான் இவன்? என முதல் முறையாய் திடுக்கிடலுடன் உணர்ந்தாள் அழகுரதி.



## 11

அன்று ஒரு நாள் நடந்த விஷயம் அழகுரதியை மிகவும் பாதித்தது.



மாலை ஆறு மணிக்கு வெளியே போன நிம்மி வந்த பாடில்லை.

அவுட் ஹவுசில் இருந்த சரவணனையும் காணவில்லை!

எங்கே போனார்கள்? தனித்தனியாக எங்கும் போயிருக்கிறார்களா? அல்லது இருவரும் சேர்ந்து எங்கும் போயிருக்கிறார்களா?

விடை காண முடியாமல் வேறு எதுவும் வேலை ஓடாமல் குறுக்கும் நெடுக்கும் நடந்தாள். நிலை கொள்ளாமல் தவித்தாள்.

கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் அவளைத் தவிக்க விட்டு விட்டு இருவரும் வாடகை டாக்ஸி ஒன்றில் வந்து இறங்கிய போது அவளுக்கு இதயமே ஒரு கணம் நின்றுவிட்டு துடிப்பது போல் இருந்தது.

அதுவும் பேச்சும் சிரிப்புமாய் இறங்கி பங்களாவினுள் நுழைந்தார்கள். அழகுரதி உற்றுப் பார்த்தாள்.

நெருக்கமாய் நடந்த மாதிரி தெரிந்ததே தவிர கை கோர்த்து நடக்கவில்லை. நல்லவேளை அந்த மட்டுக்கும் நிம்மதி தான்! என அழகுரதி பெருமூச்சு விட்டாள்.

சரவணன் விறுவிறுவென நடந்து அவுட் ஹவுஸ் நோக்கிச் சென்றுவிட நிம்மி எதுவும் நடக்காதது போல் கைகளை வீசிய உற்சாகத்துடனே உள்ளே நுழைந்தாள்.

முன் ஹால் சோபாவில் உட்கார்ந்தபடி ஜன்னல் வழியாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த அழகு ரதியைப்பார்த்து அவளது கண்கள் ஒரு வினாடி திகைத்தது.

''மேடம், என்ன இங்க உட்கார்ந்திருக்கீங்க?''

''சும்மாதான்..'' என்றபடி புன்னகைக்க முயன்று அழகுரதி தோற்கத்தான் செய்தாள்.

அது நிம்மிக்கு என்னவோ போல் இருந்ததோ, அவளே விஷயத்தைக் கொட்டினாள்.

''மேடம், நானும் சரவணன் சாரும் சினிமாவுக்கு போயிட்டு வந்தோம்..'' என்றாள் சேதியைச் சொல்வது போல்.

''ஓ... அப்படியா?'' என சாதாரணமாய் கேட்பது போல் கேட்க முயன்றாள். ஆனாலும் அவளது பார்வையில் உஷ்ணம் பறந்தது.

நிம்மி விடவில்லை.

''புதுப்படம் மேடம். நன்றாக இருந்தது..''

''டிக்கெட் கிடைத்து விட்டதா?'' என்றபடி மெல்ல விசாரணையை ஆரம்பித்தாள் அழகுரதி.

''பின் டிக்கெட் கிடைக்காமலா படம் பார்த்துவிட்டு வர முடியும்?''எனச் சொல்லியபடி நிம்மி ஒரு கெக்க பிக்க சிரிப்பை சிரித்து விட்டு, ''பிளாக் டிக்கெட்!'' என்று முடித்தாள்.

அந்த நகைச்சுவையை ரசிப்பது போல் பற்களைக் காட்டிய அழகுரதி காரியத்திலேயே கண்ணாயிருப்பவளாய், ''ஆமாம், சினிமாவுக்குப் போக முடிவெடுத்தது யார்? நீயா... சரவணனா? என்றாள்.

''ஓ.. அதுவா... மேடம்?'' என நிம்மி உதடுகளை ஆச்சரியமாய் விரித்துவிட்டு, ''மாலைப் பொழுது



போகாமல் தோட்டத்தை சுற்றி வந்தேன். சரவணன் அவுட் ஹவுசில் இருந்து தற்செயலாய் வெளிவந்தவர் என்ன? என்றார். போரடிக்கிறது.. என்றதும் சினிமாவுக்குப் போகலாமா? என அவர்தான் கேட்டார். உடன் தலையாட்டிவிட்டேன் மேடம்...'' தன் மேல் தப்பேதும் இல்லாதது போல் தலையை ஆட்டி ஆட்டி அவள் பேச அழகுரதிக்கு எரிச்சலே வந்தது.

ஆமாம்.. ஒன்றும் தெரியாத கிளிப்பிள்ளை இவள்! வேண்டும் என்றே அவுட் ஹவுஸ் பக்கம் நின்று போரடிப்பது போல் நாடகம் போட்டு சரவணனை இவள் அழைத்துச் சென்றிருப்பாளோ? என்றே நினைத்தாள்.

அவளை மேலும் யோசிக்கவிடாமல் நிம்மி தொடர்ந்தாள்.

''மேடம், ஆனால் சரவணன் ஸார்.. ஒரு ஜென்டில்மேன்..!''

''என்ன நிம்மி...?''

''ஆள்... என்னுடன் வந்தாலும் சரி, என் பக்கத்தில் உட்கார்ந்து படம் பார்த்தாலும் சரி, அவர் விரல் நுனி கூட என் மேல் படவில்லை. இதே மற்ற ஆண்களாய் இருந்தால் சந்தடி சாக்கில் இடிப்பது, உராய்வது என எத்தனையோ சில்மிஷங்கள் பண்ணியிருப்பார்கள். மேடம்...''

அவள் சொல்ல, 'கடன்காரி! உனக்கு அப்படி வேறு ஆசையா?' என பற்களைக் கடித்தாள் ரதி.

இருந்தாலும் சமாளித்து, ''ஆமாம் சரவணன் ஜென்டில்மேன்தான்...'' என்றாள். ஆனாலும் அவளால், இருவரும்

மூன்று மணி நேரம் ஜோடி போல் இருந்திருக்கிறார்கள். என்னென்னவோ பேசி இருப்பார்கள். அப்படி என்னவெல்லாம் பேசி இருக்கக்கூடும்? அப்படிப் பேசிப் பேசி... எதுவும் நெருக்கம் கூட ஏற்பட்டிருக்குமோ என்ற சந்தேகமே துளிர்த்தது.

அதனால் அதையும் தெளிவுப்படுத்த விரும்பியவளாய் நிம்மியை உற்றுப் பார்த்தவள், ''நிம்மி, நான் ஒரு விஷயம் கேட்கிறேன். நீ தவறாக எடுத்துக் கொள்ள மாட்டாயே?'' என ஆரம்பித்தாள்.

''ஐயோ! எதுவானாலும் கேளுங்கள் மேடம்'' என்றாள் நிம்மி. அவளது உதடுகள் அதைச் சொன்னாலும் அவளது முகத்தில் ஒருவித பதட்டம் உருவாகுவதை கவனித்தாள் அழகுரதி.

''நீ சரவணனைப் பற்றி என்ன நினைக்கிறாய்?''

''என்ன நினைக்கிறாய் என்றாள்...?'' என இழுத்தாள் நிம்மி.

இவளிடம் இப்படி நாசுக்காய் கேட்டால் ஆகாது. விஷயத்தை பட்டென்று உடைத்துக் கேட்டுவிட வேண்டியதுதான்.

முடிவுக்கு வந்த அழகுரதி, ''நிம்மி நீ எந்த நினைப்பில், எந்த எண்ணத்தோடு சரவணனுடன் பழகுகிறாய்.. என்பதை அறியக் கேட்டேன்..'' என்றால் முழுதும் விளக்கியவளாய்.

நிம்மி முகம் மாறினாள். ஒருவித இறுக்கம் அவளது முகத்தில் படர்ந்தது.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை மேடம்...''



''ஒன்றுமில்லை என்றால்..?''


''எனக்கு எந்த நினைப்பும், எந்த வித தவறான எண்ணமும் இல்லை...!'' என படபடவென சொன்னவள், கண்களை சுருக்கியபடி அழகுரதியைப் பார்த்துவிட்டு, ''நான் ஒரு நண்பர் போல்தான் அவருடன் ப்ரெண்ட்லியாக பழகுகிறேன்...'' என குரலில் ஒருவித மென்மையுடன் முடித்தாள்.

''நிஜமாகவா சொல்கிறாய்..?''

''நிஜமாகத்தான் மேடம்...'' என்றவள் கூடவே, ''ஆனால் மேடம் நான் அப்படித்தான் அவரிடம் பழகுகிறேன். ஆனால் சரவணன் சார் என்னிடம் எந்த நினைப்போடு பழகுகிறாரோ... அது எனக்குத் தெரியவில்லை மேடம்..!'' என முடித்தாள்.

இது என்ன புதுக்கதை...? அரிப்பெடுக்கும் தலையை கொள்ளிக்கட்டையால் சொறிவது போல் அல்லவா இருக்கிறது.

மறுபடியும் குழம்பிப் போனாள் அழகுரதி!



# 12

மறு வாரமும் அதேபோல் ஒரு சம்பவம் நடந்தது.

அன்று இரவு பத்து மணி. தற்செயலாய் தூக்கம் வராமல் எழுந்த அழகுரதி பால்கனி பக்கம் வந்து நின்றாள்.

காற்றில் படபடத்த மெல்லிய திரைச்சீலைகள் வழியாக தற்செயலாய் வெளியே பார்த்த அவளது விழிகள் திகைப்பில் மேலும் விரிந்தன.

பங்களா காம்பவுண்டை ஒட்டிய நடைபாதையில் இருவர்.

நிலவொளியில் நன்றாக உருவங்கள் தெரிந்தது.

சரவணன், நிம்மி..!

இருவரும் முன்னும் பின்னும் நடைபாதையில் நடந்து கொண்டு, சிரித்துச் சிரித்து பேசியபடி.

அவளால் அந்தக் காட்சியை கொஞ்சமும் ஜீரணிக்க முடியவில்லை. அதற்கு மேலும் பார்க்கப் பிடிக்காதவளாய் முகத்தைத் திருப்பினாள்.

நம் பங்களாவில் நமக்குத் தெரியாமல் இப்படி நிறைய விஷயங்கள் நடக்கிறதா?

நினைத்து கொதிப்பானாள் அவள்.

எப்படியும் இங்கு வந்துதானே ஆக வேண்டும். வரட்டும்!

நிம்மிக்காக கண் விழித்து காத்திருந்தாள்.

கால் மணி நேரம் கழித்து சாவகாசமாய் நிம்மி நுழைந்தவள், அவள் தூங்காமல் சோபா இருக்கையில் உட்கார்ந்திருப்பது கண்டு திடுக்கிட்டாள்.

''மேடம்... என்ன மேடம்?''

பதில் சொல்லாமல் அவளையே உறுத்துப் பார்த்தாள். இந்தப் பூனையும் பால் குடிக்குமா? என்பது போல்.



''மேடம்.. உங்களைத் தான் என்னாயிற்று மேடம்?''

நிம்மி பதட்டமாய் பக்கத்தில் வந்து அக்கறையாய் அவள் தோள்களை மெல்லத் தட்டியபோது அவளால் சட்டென தன் கோபத்தை அவளிடம் காட்ட முடியவில்லை.

''ஒ.... ஒண்ணுமில்ல...''

''ஒண்ணுமில்லையா? தூங்காம இப்படி கொட்டக் கொட்ட விழிச்சிருக்கீங்க.. என்ன மேடம்?''

''அது இருக்கட்டும் நீ.. எங்கே நிம்மி இந்த இரவு நேரத்தில்...?'' என்று இழுத்தபடி பாயிண்ட்டுக்கு வந்தாள்.

நிம்மி உற்சாகமானாள்.

''மேடம், உங்களுக்குத் தெரியாதா?''

''தெரியாது... சொல்லு..''

''சரவணன்..!'' என்றாள் நிம்மி ஒற்றை வார்த்தையில்.

அழகுரதியினுள் குமிழொன்று எழுந்து உடைவது போலவே இருந்தது. எதை அவள் சொல்லிவிடக்கூடாது என்று நினைக்கிறாளோ... அதையே சொல்ல ஆரம்பிக்கிறாளே!

உள்ளுக்குள் அந்த திடீர் பயம் தன்னையறியாமல் புகுவதை கொஞ்சம் திடுக்கிடலாகவே உணர்ந்தாள் அழகுரதி.

இருந்தும் எல்லாவற்றையும் மறைத்துக் கொண்டு, ''சரவணனுக்கு என்ன?'' என்றாள்.

நிம்மியின் முகமோ மேலும் பிரகாசமாகிக் கொண்டிருந்தது. ''மேடம் 'நைட் வாக்' பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?'' என்றாள்.

''நைட் வாக்கா?''

''ஆமாம் மேடம்.. இரவு சின்னதாய் ஒரு நடைப் பயிற்சி. தினம் இரவு ஒரு பத்து நிமிடம் நடை நடந்து விட்டு வந்து படுத்தால் போதும். தூக்கம் சுகமாக வந்து கண்களைத் தழுவும். தழுவுகிறது மேடம். இது சரவணன் சார் எனக்கு சொல்லிக் கொடுத்த டெக்னிக்...''

அவள் சொல்லி முடித்ததும் அழகுரதி முகத்தில் மெலிதாய் இருந்த இறுக்கம் சட்டென, விஷயம் அவ்வளவு தானா? என்பது போல் தளர்ந்தது.

ஆனால் நிம்மி அடுத்து சொன்ன வார்த்தைகள் மறுபடியும் புளியைக் கரைத்தது. ''ஆனால் அந்த பத்து நிமிட நடைப் பயிற்சியில் நடையை விட சரவணன் சாருடன் பேசிக் கொண்டு அவரது நகைச்சுவைப் பேச்சுக்கு நொடிக்கொரு தரம் சிரித்துக் கொண்டிருப்பது வெகு இனிமையான அனுபவம்..'' என்றாள்.

அழகுரதி அடுத்து என்ன கேட்பது என்று தெரியாமல் விழித்தாள்.

''என்ன மேடம். அப்படிப் பார்க்கறீங்க? நீங்களும் பேசாம நாளையில் இருந்து எங்ககூட வாக்கிங் வாங்க. நல்லாயிருக்கும்...''

நிம்மி சொன்ன போது கள்ளங்கபடமில்லாமல் வெகுளியாய் சொல்கிறாளே... இவளைப் போய் சந்தேகப்படுகிறோமே? என நினைத்தாள்.



அதே நினைப்புடன் சமாளித்து, ''ஆமாம்... வாக்கிங் கூட நல்லதுதான்..'' என்றாள்.

நிம்மி விடவில்லை.

''சரவணன் சார் கூட இதைத்தான் சொன்னார். உங்க மேடத்துக்கு வேலையினால எவ்வளவு டென்ஷன் இருக்கும். அவங்க எல்லாம் இந்த நைட் வாக்கை கண்டிப்பா போக பழிக்கணும்ன்னு..''

''அப்படியா?'' என்றவளின் முகம் தாமரையாய் விரிந்தது. நிம்மியிடம் கூட சரவணன் தன்னைப் பற்றி, தன் நினைப்பில் பேசுகிறானா என்ற சந்தோஷம் நீரூற்றாய் அவளை பரவசப்படுத்தியது.

''மேடம் சரவணன் சார் சொல்றது கரெக்ட் தான?''

நினைவுக்கு வந்து, ''ஆமா..! ஆமா..!'' என்றாள் அவசரமாய்.

கூடவே சரவணன் தன்னைப் பற்றி நிம்மியுடன் வேறு என்னவெல்லாம் சொல்லியிருக்கக்கூடும் என்ற ஆவல் எழுந்து அவளைத் துளைத்தெடுத்தது.

அதனாலே, ''நிம்மி, அப்புறம் சரவணன் என்னைப் பற்றி வேறு என்ன சொன்னார்?'' என்றாள்.

நிம்மி ஒரு கணம் திரும்பி அவள் முகத்தைப் பார்த்து திகைத்துவிட்டு, ''ஓ.. அதுவா...? மேடம் சரவணன் சார் உங்க மேல ரொம்ப மதிப்பும், மரியாதையும் வைச்சிருக்கிறார். மேலும் எவ்வளவு பணம் வசதியும் இருந்தும் ரொம்ப எளிமையா பழகுற உங்களோட சுபாவம் அவருக்கு பிடிச்சிருக்கு. அதை அடிக்கடி என்கிட்ட சொல்லி பாராட்டுவாரு...!''

''அப்புறம்?'' என்றாள் தன்னையறியாமல் அழகுரதி.

''அப்புறம் மேடம்...'' என நிம்மி ஏதோ யோசிப்பவள் போல் யோசித்து திரும்பி அழகுரதி முகம் போன போக்கை கூர்ந்து பார்த்து நிறுத்தினாள்.

''மேடம் இதையெல்லாம் நீங்க எதுக்கு கேட்கறீங்க?'' என்றாள் சட்டென.

''அது... அது... சும்மாத்தான்..!'' மறுபடியும் சமாளித்தாள் அழகுரதி.

நிம்மி என்ன நினைத்தாளோ... படபடவென அவளது அபிப்ராயத்தைச் சொல்ல ஆரம்பித்துவிட்டாள்.

''ஆனா.. ஒண்ணு மேடம் சரவணன் சார் மாதிரி ஒரு ஜெண்டில்மேனை நாம பார்க்க முடியாது மேடம். ஆளு அறிவிலும் சரி, அழகிலும் சரி.. சூப்பரா நம்பர் ஒண்ணாத் திகழறாரு... என்ன விஷயத்தை பேசினாலும், எதைப் பத்தி கேட்டாலும் ஆளு டக்கு டக்குன்னு தெளிவா பதில் சொல்றாரா... மொத்தத்தில்...'' என ஆரம்பித்து அப்படியே நிறுத்தினாள் நிம்மி.

''சொல்லு நிம்மி..''

''சரவணன் மாதிரி கம்பீரமும் புத்திசாலித்தனமும் நிறைஞ்ச ஆள்... வாழ்க்கைத் துணை மாதிரி அமைய கொடுத்து வைச்சிருக்கணும். எந்தப் பொண்ணுக்கு அந்த அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறதோ..? ம்ம்..!'' என எதையோ பேசுவது போல் ஆரம்பித்து அதைச் சொல்லி சலிப்புடன் முடித்தாள்.

அவள் பேசிய பேச்சைக் கேட்ட அழகுரதிக்கு ஒரு விதமாக திக்கென்று ஆகிவிட்டது.




அவர் சரவணன் தன்னைப் பற்றி என்ன நினைப்பு வைத்திருக்கிறார்? என்று அறிய கேட்டால் இவள் என்னடாவென்றால் சரவணன் பற்றி விமர்சனம் செய்து கல்யாணம் காட்சி வரை போய்விட்டாளே!

இவள் ஏக்கமாய் சொல்வதைப் பார்த்தால் இவள் மனதிலும் அப்படி ஒரு ஆசை இருக்குமோ?

அதனால்தான் சலிப்பாய் இப்படி யாருக்கு கொடுத்து வைத்திருக்கிறப்போகிறதோ? என புலம்புகிறாளோ?

யோசித்தபடி மறுபடி குழப்பத்திற்குப் போனாள் அழகுரதி.



## 13

மேலும் ஒரு மாதம் கழிந்திருந்தது.

அழகுரதிக்கு நடப்பது ஒன்றும் புரியவில்லை. அவள் ஒன்று நினைக்க நடப்பது வேறு ஒன்றாக மாறிக் கொண்டிருந்தது.

நாளுக்கு நாள் சரவணன் நிம்மி இருவரும் ஒரு சேர சினிமா, பார்க், பீச் என மாலை வேளைகளில் அவள் கண் அறியவே கிளம்பிச் சென்றார்கள். அப்படியே திகைத்து செய்வதறியாமல் ஸ்தம்பித்தாள் அவள்.

வேலை நேரம் என்றால் கூட கண்டிக்கலாம்.

மேலும் நிம்மி அழைக்காமல் சரவணனே அவளை வலியப் போய் அழைத்து வெளியே கூட்டிச் செல்லும் போது அவளால் என்ன செய்ய முடியும்?

முன்பு நிம்மி சொன்னது அவளுக்கு தேவையில் லாமல் நினைவுக்கு வந்து தொல்லைப்படுத்தியது.

''எனக்கு அப்படியெல்லாம் எந்த எண்ணமோ ஈடு பாடோ இல்லை மேடம். ஆனால் சரவணனுக்கு என் மேல் அந்த ஈடுபாடு இருந்தால் நான் என்ன செய்ய முடியும்?''

நிம்மி சொன்னதைப் பார்த்தால் ஒருவேளை சர வணன் தான் நிம்மியை விரும்ப ஆரம்பித்துவிட்டானா? நிம்மியை காதலிக்க ஆரம்பித்துவிட்டானா?

மேலும் சந்தேகம் கொண்டவளாய் அவர்கள் இரு வரையும் நன்கு கவனித்துப் பார்த்தாள்.

அவளது சந்தேகம் ஊர்ஜிதம் ஆகுவது போலவே சரவணனின் நடவடிக்கைகள் இருந்தது.

அவன் தான் நிம்மியைத் துரத்தாத குறையாய் அவள் பின்னாலே சுற்றிக் கொண்டு அவளுடன் பேச துடித்துக் கொண்டு அலைவது கண்கூடாக அவளுக்குத் தெரிந்தது.

இதை விடக்கூடாது... உடனே கூப்பிட்டு விசாரித்து விட வேண்டும் என அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே ஒருநாள் சரவணன் அவனாகவே அதைப் பற்றி பேச வந்துவிட்டான்.

''ரதி, ஒரு முக்கியமான விஷயம்...'' என ஆரம்பித்த போது சாதாரணமாகத்தான் நின்று தலையசைத்தாள் அவள்.



ஆனால் அவன் விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்த தும் அவளது நெஞ்சுப் பகுதியில் உள்ள இதயமே துடிப் பதை நிறுத்திவிட்டது போல்தான் உணர்ந்தாள்.

அப்படி ஒரு அதிர்ச்சி!

நிம்மியை அவன் காதலிக்கிறானாம்! இருவருக்கும் இடையே விரைவில் திருமண நிச்சயதார்த்தம் நடக்கப் போகிறதாம்! கேட்ட ரதிக்கு கால்கள் நழுவி பூமிப் பிள வில் விழுவது போல் தான் இருந்தது.

''என்ன... என்ன சொல்கிறீர்கள் சரவணன்?'' என்றாள் அதிர்ச்சி விலகாமல் வாய் பிளந்த ஆச்சரியத்துடன்.

''புரியவில்லை! நாங்கள் இருவரும் காதலிக்கிறோம்...'' என்றான் சரவணன் ஒருவித குரலில்.

''நிஜமாகவா..? நம்பவே முடியவில்லையே..? நீங்கள்.. நீங்களா... அதுவும் நிம்மி.. நிம்மியையா?''

அவள் வேண்டுமென்றே அதிர்ச்சி பரவ கேட்க அமைதியாய் தலையாட்டினான் அவன்.

''இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது ரதி? இரண்டு இதயங்கள் ஒன்றுபட்டு விட்டது. பின் என்ன.. காதல் தானே..?''

'காதல் இல்லை... கண்றாவி!' என உள்ளுக்குள் பொருமியவள் வெளிக்காட்ட முடியாதவளாய், பற்களைக் கடித்தாள்.

இந்தச் சரவணன் போயும் போயும் நிம்மியைப் போய்க் காதலிக்கிறேன் என்கிறானே.. இவனுக்கு என் னாயிற்று?

எங்கேயும் தலையில் கண்டால் அடிபட்டு புத்தி கண்டால் பிசகிப் போய் விட்டதோ?

என்னாயிற்று இவனுக்கு?

நம்மிடமும் சிரிக்கச் சிரிக்க பேசினானே? ஏரிக்கரை, பூங்கா, எஸ்டேட், தோட்டம் என பல இடங்களுக்கு கூடவே வந்து இனிமையாய்ப் பேசி காதல் பார்வை பார்த்தானே... அதற்கெல்லாம் பின் என்ன அர்த்தம்?

கொதிப்பாய் உள்ளுக்குள் நினைத்து குமைந்தாள் அவள்.

அவளிடம் எதையும் பேச முடியவில்லை. வெளிக் காட்டவும் முடியவில்லை!

அவனும் அவள் பதிலுக்கு காத்திராமல் விஷயத்தைச் சொல்லிவிட்டு எப்போதோ சென்றிருந்தான்.

அவள் சென்ற அன்று மாலையே நிம்மியும் வந்து தனது காதல் விஷயத்தைச் சொன்னாள். சரவணன் தன்னை காதலிப்பதையும் விரைவில் கல்யாண நிச்சய தார்த்தம் செய்ய அவன் ஏற்பாடு செய்வதையும் விவரித் தாள்.

கேட்ட அழகுரதிக்கு மயக்கம் வரும் போலத்தான் இருந்தது.

கண்களில் முட்டிக் கொண்டு வந்த நீர்த்துளிகள் பீறிட்டுக் கிளம்ப அப்படியே மேஜையில் கவிழ்ந்து அழுதாள்.

சுமார் ஒரு மணி நேரம் அழுது தீர்த்தாள்! காதலில் தோல்வி சகஜம் என்பார்கள். ஆனால் இது இரண்டாவது முறையாய் அல்லவா?





# 14

அழகுரதி நிஜமாகவே இடிந்து போய்விட்டாள்!

எல்லாமே அவள் கையை மீறிப் போய் விட்டது போல் ஆகிவிட்டது.

சரவணன் சொன்னதோடு மட்டுமில்லாமல் நிச்சயதார்த் தத்திற்கு நாள் குறித்து மளமளவென வேலைகளை கவனிக்க ஆரம்பித்துவிட்டான்.

நிம்மியோ முகம் வெடித்து விடும் சந்தோஷத்துடன் ஆபீஸில் வலம் வந்து கொண்டிருந்தாள்.

அழுது வீங்கிய கண்களுடன் நடமாடியது அழகுரதி மட்டுமே!

அவளால் முன்பு போல் ஒழுங்காக உண்ண முடிய வில்லை.

இரவில் தூங்க முடியவில்லை.

அலுவலகத்தில் ஈடுபாடு கொண்டு ஃபைல்களை பார்க்க முடியவில்லை.

ஏன், ராமநாதன் அங்கிள் போன் செய்து பேசினால், விபரங்கள் கேட்டால் கூட சரிவர பதில் சொல்லாமல் திணறத்தான் செய்தாள்.

நடைப்பிணம் போல அலுவலகம் வந்தாள், உட் கார்ந்தாள், போனாள்.

முன்பு போல் சரவணனைப் பார்க்க அவளுள் ஆவல் இல்லை.

சொல்லப் போனால் அவனைப் பார்க்க பிடிக்காதவள் போலவே தலை குனிய நடமாடினாள்.

சரவணனும் அவளுடைய வாடிய முகத்தைப் பார்த்து ஏன்? என்று கேட்கவில்லை.

அவனும் அவளின் அந்த நிலையை சட்டை செய்யா தவன் போல் தான் நடமாடினான்.

ஒரு வார்த்தை நம்மிடம் நலன் விசாரிக்காமல் இருக் கிறானே? என்று கூட குமைந்தாள் அவள்.

மேலும் ஒரு வாரம் சென்றது.

நிச்சயதார்த்தத்திற்கு நாள் குறித்து விட்டான் சரவணன்.

நகரின் மையமான மண்டபம் ஒன்றில் சரவண னுக்கும் - நிம்மிக்கும் கல்யாண நிச்சயதார்த்த ஏற்பாடு!

விஷயத்தைக் கேட்ட அழகுரதிக்கு காதே செவிடாகி கேட்கும் திறனை இழந்துவிட்டது போலிருந்தது.

சரவணனுக்கும் நிம்மிக்கும் கல்யாண நிச்சயதார்த்தம்!


அதன்பின் கல்யாணம்!

எல்லாவற்றுக்கும் இந்த சரவணன் சம்மதித்துவிட் டான்!

இடிந்து போனவளாய் அவள் செய்வதறியாமல் திகைக்க... திருமண நிச்சயதார்த்த நாளும் வந்தது.



அங்கு ஒரு பெரும் அதிர்ச்சி, அதிசயம் அவளுக்குக் காத்திருந்தது.



# 15

அன்று தான் கல்யாண நிச்சயதார்த்தம்.

மாலை ஐந்து மணிக்கு அந்த பெரிய திருமண ஹாலில் நடக்கிறது.

இனி அந்த கடவுளே வந்தால் கூட மாற்றி அமைக்க முடியாது. நிம்மிக்கும், சரவணனுக்கும் முதலில் நிச்சய தார்த்தம். பின் பத்து தினங்களில் கல்யாணம்!

நொந்து போனவளாய் மெல்ல பங்களாவை விட்டு சோர்வான நடையுடன் மண்டபத்திற்கு கிளம்பினாள் அழகுரதி.

அவுட் ஹவுசை விட்டு சரவணன் நேற்றே தனது உடைமைகளுடன் வேறு எங்கோ சென்று தங்கப் போவதாய் பறந்திருந்தான்.

நிம்மி கூட இனி இங்கிருப்பது முறையில்லை என்று கூறி தன்னுடன் வேலை பார்க்கும் தோழி ஒருவருடன் போய் தங்கிக் கொண்டாள்.

ஆக தனித்து விடப்பட்டவள் அழகுரதி மட்டுமே!

தனி ஆளாய் கிளம்பி காரில் ஏறி மண்டபத்தில் இறங்கினாள்.

அவள் வருவதைப் பார்த்து சரவணன் வாசலுக்கே வந்து வரவேற்று முகம் மலர உள்ளே கூட்டிப் போனான்.

ம்ஹூம்! இந்த பணிவு, மரியாதை ஒன்றுக்கும் குறைச்சல் இல்லைதான்! சலித்தாள் அவள்.

நிம்மியும் மணமகள் அறையில் சகல மாலை அலங்காரத்துடன் பொன்னாய் ஜொலித்துக் கொண்டிருந்தாள்.

அழகுரதி வலுக்கட்டாய புன்னகையொன்றை வீசி செயற்கையாய் எல்லோரிடமும் பேசி ஓரமான இருக்கையொன்றில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. வாசலில் சரக்கென அந்த ஜீப் வந்து நின்றது.

போலீஸ் ஜீப்!

உள்ளிருந்து இன்ஸ்பெக்டர் ஒருவர் காவலர்கள் சூழ உள்ளே நுழைந்தார்.

மண்டபத்தினுள் வேகமாய் நுழைந்து விறுவிறுவென நிம்மி பக்கம் போனார்.

''உங்களை அரெஸ்ட் பண்றோம்..!'' என்றபடி நிம்மியின் கைகளில் விலங்கைப் பூட்டினார்.

நிம்மி அரண்டு போனாள்.


இன்ஸ்பெக்டர் காரணத்தைச் சொல்ல அப்படியே தலை குனிந்தாள்.



அழகுரதி நடப்பதறியாமல் திகைத்து முன்னால் வர... சரவணன் சிரிப்புடன் அவள் பக்கம் வந்தான்.

எல்லோர் முன்னிலையிலும் கொஞ்சமும் சங்கோஜப்படாமல் அவளை இறுக கட்டிப் பிடித்தான்.

''எல்லாவற்றையும் நான் விளக்கமாகச் சொல்கிறேன்..!'' என்றான் திகைத்த அழகுரதியின் காதுகளில்.



## 16

எல்லாம் முடிந்தது போல் நிம்மியை போலீஸ் ஜீப்பில் ஏற்றி இன்ஸ்பெக்டர் சென்றுவிட... சரவணனும் அழகுரதியும் தனியே தனி அறை ஒன்றில்.

''நடந்தது எல்லாம் டிராமா! நாடகம்!'' என்றான் சரவணன்.

''என்ன நாடகமா?''

மைவிழிகள் விரிய திகைத்து நின்றவளை அப்படியே தன் பக்கம் இழுத்தான். ''நிஜமாய் நான் காதலித்தது உன்னைத்தான். உன்னை ஒருத்தியைத்தான் அழகுரதி!''

''உண்மையான காதல் எப்படி இருக்கும் என்பதை உனக்குப் புரிய வைக்கட்டுமா?'' என்றபடி அவளை ஒரு கணம் நெஞ்சார அணைத்து கன்னங்களில் இதழ்களைப் பதித்தான்.

அவன் சொன்னதைக் கேட்டு இன்பமாய் அதிர்ந்தவள், முதல் முறையாய் அனுபவிக்கும் அந்த ஸ்பரிசத்தில், கிறங்கிய கண்களும் சிவந்த முகமுமாய் வெட்கப் பட்டாள்.

அந்த மலர் முகம் நிமிர்த்தி ஆசையாய்ப் பார்த்தான் அவன்.

நான் சொல்வது எல்லாம் உண்மை.

''இப்போது மீதி எல்லாவற்றையும் சொல்லட்டுமா?'' என்றான்.

''சொல்லுங்கள்...'' என்றாள் அவள். காதலில் ஜெயித்து விட்ட ஆனந்தத்துடன்.

''ராமநாதன் அங்கிள் நன்றாக ஓடிய கம்பெனி நஷ்டத் தில் திடீரென ஓட ஆரம்பித்திருப்பது... எந்தக் கெட்ட பழக்க வழக்கங்களும் இல்லாத உன் அண்ணன் திடீ ரென போதைப் பழக்கத்திற்கு அடிமையானது.. என இது பற்றி சொன்னதும் இதற்கு மூல காரணமாய் எதுவோ ஒன்று, யாரோ ஒருவர் இருக்க வேண்டும் என்று நினைத் தேன். அது நான் எஸ்டேட்டுக்கு வந்து நிம்மியைப் பார்த்ததும் புரிந்து போயிற்று...''

''என்ன நிம்மியை பார்த்த முதலிலே சந்தேகப்பட்டு விட்டீர்களா?''

''ம்ம்.. நிம்மியின் அரண்ட ஒருவித போலியான மரியாதை கொடுக்கும் பயப்பார்வை எனக்கு ஆரம்பத்தி லேயே சந்தேகத்தை கொண்டு வந்துவிட்டது. உன் அண்ணனிடம் செகரெட்டரியாய் வேறு இருந்திருக் கிறாள் என்பது தெரிந்தவுடன் எனது சந்தேகம் வலுப்



பெற ஆரம்பித்தது. அவளுடன் அதனால் கொஞ்சம் பேசிப் பழகிப் பார்த்தேன். காதல் செய்வது போல் எல் லாம் நடித்துப் பார்த்தேன். அவள் ஒன்றும் மசிய வில்லை. அவளிடமுள்ள உண்மைகளை வெளியே கொண்டு வர முடியவில்லை. கடைசியில் வேறு வழி யில்லாது கல்யாணம் என்ற அஸ்திரத்தை எடுத்து நிச்சய தார்த்தம் பண்ணுவது போல் ஒரு ஏற்பாட்டை உண்டாக் கியதும் தான் அவள் என்னை நம்பினாள். தனது உண்மைகளை எல்லாம் கக்கினாள்...''

சரவணன் நிறுத்த, ''அப்படியா?'' என்றாள் அழகுரதி திகைப்பாய்.

''அதற்குப் பின் தான் எல்லா பயங்கர உண்மைகளும் வெளிவந்தது...''

''பயங்கர உண்மைகளா?''

''ம்ம்... நிம்மி ஒன்றும் மெர்ஸி ஹோமில் வளர்ந்த அனாதை அல்ல. அவளுக்கு தாய் உண்டு. அவள் பெயர் கற்பகவள்ளி. இந்த 'கற்பகவள்ளி' பெயரை எப்பவாவது உன் தந்தை மூலம் கேட்டதாய் ஞாபகம் வருகிறதா.. யோசித்துப் பார்..!

அழகுரதி யோசித்தாள்.

அவளது தந்தையிடம் ஒரு முறை அவர் உடன் பிறந்தவர்களைப் பற்றிக் கேட்ட போது ஒரே ஒரு சகோ தரி உண்டு. அவளும் கெட்டப் பழக்கங்களுக்கு அடிமை யாகி தான்தோன்றித் தனமாய் திரிந்தாள். அவளை திருத்த முயற்சித்து முடியாததால் அவளிடமிருந்து விலகிவிட்டேன். அவள் எங்கே போனாள்... என்ன

ஆனாள் என்றே தெரியாது. அவள் பெயர் கற்பகவள்ளி. உனக்கு அத்தை முறை...'' எனச் சொல்லியது நினைவுக்கு வர சரவணனிடம் விளக்கினாள்.

அதை ஆமோதித்தான் சரவணன்.

''அதே.. உனது கற்பகவள்ளி அத்தைதான்... இப்போது 'வில்லி' வேலை பார்த்து உங்களையும் உன் தந்தை உருவாக்கிய தொழில் சாம்ராஜ்யத்தையும் வேரோடு அழிக்க சதி செய்தது...''

''என்ன சொல்கிறீர்கள் சரவணன்?''

''இன்னும் புரியவில்லையா? நிம்மி அந்த கற்பக வள்ளியின் ஒரே மகள். உன் தந்தை இறந்து உன் அண்ணன் எஸ்டேட் பொறுப்பிற்கு வந்ததும் கற்பகவள்ளி திட்டம் போட்டு நிம்மியை அனாதை போல் உன் அண்ணனிடம் அனுப்பி செகரெட்டரியாக சேர ஏற்பாடு செய்தாள். அந்த நிம்மிக்கு தன் அழகைக் கொண்டு உன் அண்ணனை மயக்கி காதல் வலையில் விழ வைப்பது தான் திட்டம்.

ஆனால் உன் அண்ணன் இது போன்ற சமாச்சாரங்களில் ஈடுபாடு இல்லாமல் ஒதுங்கிப் போக.. அடுத்த அஸ்திரமான போதை வஸ்துவை கையில் எடுத்தாள். செகரெட்டரி என்ற முறையில் தினம் காபி, குளிர்பானம் என உன் அண்ணனுக்கு கொடுக்கும் போது ''கோகய்ன்'' எனப்படும் பயங்கரமான போதை மருந்தை கலந்து கொடுக்க ஆரம்பித்தாள். சுவை வித்தியாசம் உணராமல் உன் அண்ணனும் அதை குடிக்க ஆரம்பித்து கடைசியில் ஒரு கட்டத்தில் நிம்மி கொடுக்கும் போதை மருந்து



பாக்கெட்டை நேரிடையாகவே வாங்கி உண்ண ஆரம்பித்திருக்கிறான். ஒருநாள் அதுவும் ஓவராகப் போய் ஆபீசிலேயே மயங்கிவிட்டான். இன்று தீவிர சிகிச்சையில் ஆஸ்பத்திரியில் இருக்கிறான்.

ஆக... நிம்மி தன் தாயுடன் சேர்ந்து திட்டம் போட்ட மாதிரியே உன் அண்ணனை போதைப் பழக்கத்திற்கு அடிமையாக்கி அவனை அலுவலகத்திலிருந்து அப்புறப் படுத்தி விட்டாள்.

பின் அவளது அடுத்த குறி உன் மீது பாய்ந்தது. உள்ளே ஏதாவது செய்ய அவள் மறுபடியும் நல்ல செகரெட்டரி போல் வேஷம் போட்டுக் கொண்டு திட்டம் தீட்ட ஆரம்பித்தாள்.

ஆனால் அதற்குள் குறுக்கே நான் நுழைந்துவிட்டேன். அவள் மேல் சந்தேகம் கொண்டு உண்மையை கண்டுபிடிக்க அவள் மேல் காதல் அஸ்திரத்தை வலியப் போய் ஏவினேன்.

நிம்மி என்ன இருந்தாலும் பெண் தானே... எனது காதல் பார்வையை நம்பி என் வலையில் விழுந்தாள். கொஞ்சம் கொஞ்சமாய் அவளிடம் விஷயத்தைக் கறந்தேன். பின் அவள் முழு நம்பிக்கையைப் பெற கல்யாண நிச்சயதார்த்தம் வரை என் நாடகத்தைக் கொண்டு போனேன். அவளும் என்னை முழுவதுமாக நம்பியவள், உடனே என்னை ஜோடி சேர்த்துக் கொண்டு ஒருநாள் உண்மை முழுவதையும் கக்கிவிட்டாள்.

உடனே தான் கல்யாண நிச்சயதார்த்தத்தன்று போலீசுக்கு தகவல் கொடுத்து வரச் சொன்னேன். போலீஸ் வந்து மிரட்டியதும் உண்மை அனைத்தையும் ஒத்துக்

கொண்டாள். இப்போது தாயும் மகளுமாய் ஜோடி சேர்ந்து கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

சரவணன் மூச்சு விடாமல் சொல்லி முடிக்க அதிர்ந்து போன முகத்துடன் பார்த்தாள் அழகுரதி.

''அப்படி என்ன அவர்களுக்கு எங்கள் மீது சொந்த அண்ணன் குடும்பத்து மீது துவேஷம்..?'' என்றாள்.

தோள்களை குலுக்கிய சரவணன், ''எல்லாம்.. பணம் மற்றும் பொறாமைதான்! இருக்கிற பணத்தை எல்லாம் ஊதாரித்தனமாய் செலவிட்டு விட்டு உங்கள் கோடிக் கணக்கான சொத்துக்களை தொழில் சாம்ராஜ்யத்தைப் பார்த்து பிரமித்திருக்கிறார்கள். அதுவே பெரும் பொறாமையாக மாறி, இப்படி வில்லத்தனமாய் அவர்களை செய்ய வைத்திருக்கிறது...'' என்றாள.

''அவர்களை விடுங்கள்.. ஈனப் பிறவிகள்!'' என்றாள் அழகுரதி சலிப்புடன்.

''ம்ம்.. அப்படியானால் இனி நம்மைப் பற்றிப் பேசுவோம்...'' என்றான் சரவணன் கண்களில் குறும்பு மின்ன.

''நம்மைப் பற்றியா..? பேச என்ன இருக்கிறது?'' என அவள் போலியாய் வியப்புக் காட்ட,

''சொல்லட்டுமா...?'' என ஆரம்பித்தவன், ''அதிலும் உன் இந்த அழகான மைவிழிக் கண்கள் என் மீது காதல் வயப்பட்டு ஒவ்வொரு முறை என்னைப் பார்க்கும் போதும் சரி, என் பார்வையின் வீச்சைத் தாங்காமல் நாண முற குனிந்து நேருக்கு நேர் பார்த்து பேச முடியாமல் பார்வையால் நழுவிக் கொண்டு... அப்போதே உன்



காதலை கண்டுபிடித்து விட்டேன்...'' என அவன் சொல்லி முடிக்க முகம் முழுவதும் அவள் தன்னை சரியாக கண்டுபிடித்து விட்டதற்காக வெட்கமுற சிவந்தவள், ''நல்ல ஆராய்ச்சிதான்!'' என கேலியும் செய்தாள்.

அவன் தொடர்ந்து, ''எனக்கும் அப்படித்தான் அழகு ரதி. உன்னைப் பார்த்த முதல் சந்திப்பிலேயே இனம் புரியா உணர்வு ஒன்று மனதில் விழுந்துவிட்டது. அது உன்னுடன் பழகப் பழக... உன்னுடன் தினம் தினம் பேசும் ஆர்வம்... தினம் தினம்.. பார்க்கும் ஆர்வம் வந்து அது காதல் தான் என எனக்குப் புரிய வைத்தது...

ஆனால் நிம்மிக்காக பொறுமை காத்தேன். உன் முன்னாலேயே நிம்மியிடம் நாட்டம் இருப்பது போல் காட்ட வேண்டிய இக்கட்டான நிலைமை வேறு எனக்கு!''

எல்லாவற்றுக்கும் சிகரம் போல் உண்மையை நிம்மி யிடம் இருந்து முழுதும் வரவழைக்க கல்யாணம், நிச்சய தார்த்தம் வரையெல்லாம் பேச்சை எடுத்து உன்னை ரொம்பவும் நோகடித்து விட்டேன். அப்படி அப்படித் தானே கண்மணி..?'' என்றபடி அதற்காக வருந்துபவள் போல் முகத்துடன், அவன் தன் இரு கைகளையும் விரித் துப் பிடித்தான். அதற்குள் அடைக்கலம் தேடுபவள் போல் பாய்ந்துச் சாய்ந்தவள் அப்படி அவனது நெஞ்சினில் பொதிந்து கொண்டாள்.

''எல்லாம் தெரிந்துமே என் மனதை நோகடித்திருக் கிறீர்களே..? என் இதயம், என் மனம்.. நீங்கள் கிடைக் காமல் போய்விடுவீர்களோ.. என எவ்வளவு ரணப்பட்டு விட்டது தெரியுமா?'' என்றாள் அவள் ஆதங்கக் குரலில்.

''ரணம் தானே..? கவலையே வேண்டாம் கண்மணி..! அதற்காக நிறைய மருந்துகள் என்னிடம் ஸ்டாக் இருக்கிறது. சாம்பிளுக்கு ஒன்றை மட்டும் இப்போது பார்க்கிறாயா?'' என்றபடி அப்படியே அவளை இறுக அணைத்து அவளது செவ்விதழ்களால் அழுத்தமாய் முத்தமிட்டான். விடாமல் மேலும் மேலும் முத்தமாரி பொழிந்தான்.

அவள் அழகுராதி முகம் சிவந்து, கிறங்கியவளாய், மைவிழிகளை திறந்து வைத்துக் கொண்டே இனிமைக் கனவுகளில் சஞ்சரிக்க ஆரம்பித்தாள்.